ஓம்.

"லோகோபகாரி" பத்திரிகையின் ஆசிரியராகிய
காலஞ்சென்ற

வி நடராஜ ஐயரவர்களால்

இயற்றப்பட்ட

தத்துவ தரிசனி.

இப்புத்தகமானது

பாலர் பாலிகைகளுக்கு சமய நீதி, ஒழுக்கம், விவேகத்தை யபிவிர்த்தி செய்யத்தக்க பல விஷயங்க ளடங்கி யிருப்பதினால் பாடசாலைகளிலும் போதிக்க பாடமாக வைக்கப்பட்டது.

இஃது,

மதுரை. **அப்பாயி நாயுடு** F. T. S.

அவர்களால்

மூன்றாம் பதிப்பு.

சென்னை, மெர்குரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

I913.

விலை அணா 10.

ஓம்.

முகவுரை.

"தத்துவ தரிசனி" "ஞான தரிசனி" என்னு மிப்புத்தகங்கள் "லோகோபகாரி" யின் பத்திராதிபராகிய காலஞ்சென்ற ஸ்ரீ, வி. நடராஜ ஐயர் அவர்களால் பிரசுரிக்கப்பட்டதை யான் 1907 பிப்ரவரி 24 உயில் மறுபதிப்புகள் செய்து கொள்ள அதிகாரம் பெற்றுக்கொண்டேன். ஆபினும், எமக்குப் பலதொல்லைகளால் அச்சிட சாவதானமில்லாமல் 6- வருஷ காலமாக பிரசுரிக்காமலிருந்தேன். எமது புத்தகசாலைக்குவரும் பல பெரியோர் இப்புத்தகங்களை அச்சிட முயற்சி செய்ததினால் தற்காலத்தில் அச்சிடலாயிற்று. இதில் முக்கியமில்லா சில கதைகளையெடுத்தும் முக்கிய பாகங்களை சேர்த்தும் 'தத்துவதரிசனி' யில் கடைசியில் யோக பாகத்தில் பல வீண் விஷயங்களை நீக்கியும் முதலில் ஜன ஐக்ய பாகத்தை நூதனமாகவும் விரிவாகவும் சேர்த்து அச்சிடலாயிற்று.

இப்படி நூதனமாக சில பாகங்களை சேர்த்ததால் இபற்றியவரின் கருத்துகளை நீக்கிவிடவேண்டிய அபிப்பிராயமல்ல. கஷ்டமான விஷயங்களை ஜனங்கள் தெரிந்து கொள்ளக்கூடாம லிருக்கு மாதலால் சுலப வார்த்தைகளால் சிலவற்றை சேர்க்கப்பட்டது.

இதன்றி, எவ்விஷயத்திலும் இத் "தத்துவதரிசனி" "ஞான தரிசனி" யென்னும் புத்தகங்கள் வெகு சிறந்த சிறந்த தென்பது பிறருடைய சாக்ஷியின்றி அனுபோகத்திலேயே விளங்கும். இது செந்தமிழ் நடையில் ஒரு அக்ஷரமேனும் பயனற்றதா யிராமல், அர்த்த புஷ்டியும் (பாமரர்கள் புத்தியிலும் படும்படியாக) நன்னடக்கை, லௌகீக யுக்தி, பாஷா ஞானம், ஈசுவர பக்தி ஆழ்ந்த யோசனை உண்டாக்கக் கூடியதாய் கல்வி கற்ற புருஷர்களும், ஸ்ரீகளும், சிறுவர்களும், சிறுமிகளும் இனிய மொழிகளாய் படித்து தமிழ் பாஷையில் தேறுவதற்கு ஏற்ற கருவியா யிருக்கிறது. அல்லாமலும், ஜாதி மத துவேஷணமின்றி சமரசஞான முண்டாக்கும். முன் பதிப்புகளின் விலை) 0-12-0 அணாவாக இருந்ததை இந்த பதிப்பில் விலை 0-10-0 அணாவாக விலை குறைக்கப்பட்டது. கனவான்கள் இதை ஆதரிப்பார்களாகவும்.

இப்படிக்கு
மதுரை. அப்பாயி நாயுடு.

ஓம்:
பரப்பிரம்மணே நம:

தத்துவ தரிசனி.

"கந்தனை நாடி வந்தனைபாடு" என்ற வாக்கியமே வெகு இன்பம். அவ்வாக்கியத்தில் உள்ள படி அனுஷ்டிப்பது அதைவிட இன்பம். அவ்வாறு அனுஷ்டித்து பிறருக்கு போதிப்பது எல்லா வற்றிலும் இன்பம். ஆதலின் இப்புத்தகத்தை படிக்கும் எமது அருமை நேயர்களே! ஆரிய கனவான்களே!! நீங்கள் ஒவ்வொருவருந் தெய்வ பக்தர்களாய் ஜொலித்து உங்கள் நண்பர்களெல்லோருக்கும் அவரது மகிமையைப் புலப்படுத்தி பக்திமார்க்கத்தை போதிப்பீர்களாக.

“ஸர்வம் பிரம்மமயம் ஜெகத்" இவ்வுலக முழுவது முள்ள எல்லா மதஸ்ர்களும் அவ்வாறே கூறுகின்றனர். கடவுள் இல்லாத இடமேது? ஆதலின் ஸகல மூர்த்திகளும் பரப்பிரம்மமென்பது பெறப்பட்டது. மேற்கூறிய காரணத்தால் சிவன் விஷ்ணு, சுப்ரமண்யம், விநாயகர், முதலிய இந்து மதஸ்தர்கள் தொழும் தெய்வங்களுங் கிறிஸ்துவர்கள் வணங்கும் கர்த்தரும், மகம்மதியர்கள் போற்றும் ஆண்டவனும், புத்தர்கள் வழுத்துந் தெய்வமும், பரப்பிரம்மமேயன்றி வேறல்ல. விவேகிகள் எந்த மதத்தையும், எந்த மூர்த்தியையும் தூஷிக்கமாட்டார்கள். எல்லா மதங்களும் ஞானிகளுக்கு சம்மதமே. அஞ்ஞானியா யிருக்க எவன் விரும்புவான்? ஆதலின் ஞானத்தை சம்பாதிப்பதில் நோக்கமுடைய கனவான்க ளெல்லோரும் மதச்சண்டைகளின்றி ஸகல மூர்த்திகளையும் பரப்பிரம்மமாய் பாவித்து வணங்குகின்றனர்.

"சிவனும் ஜீவனும் ஒன்று" என்பது அத்வைதிகளின் சித்தாந்தம் சிவன் என்பது பரப்பிரம்மம். ஜீவனும் அந்த பிரம்மமே ஆதலின் பராமார்த்திக தசையில் சிவனும் ஜீவனும் ஒன்றென்று அத்வைதிகள் கூறுகின்றனர். அவ்விததசையை அடைவதற்கு பலமார்க்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளாவன: - கர்மம், பக்தி, ஞானமென்னும் மூன்றுமார்க்கங்களே. இம்மூன்றின் பலனும் முடிவிலொன்றென்பதை அடிக்கடி கூறியிருக்கிறோம். ஓர் ஊருக்கு பலவழிகள் இருப்பது போல் மோக்ஷத்தை அடைவதற்கு மேற்கூறிய மூன்று வழிகளிருக்கின்றன. கர்மத்தை ஈசுவர பிரீதியாக செய்து அதன் பயனைத்தான் வேண்டாமலிருப்பதாலும் பகவானையின்றி யாரிடமும் பிரீதியில்லா மம்முடிவில் எங்கும் நிறைந்த பொருள் அவரே என்றுணர்ந்து எல்லாவற்றையும் அவராகபாவித்து பக்தி செய்தாலும் பிரம்மம் ஒன்றைத்தவிர ஜெக ஜீவபரங்களெல்லாம் பொய்யென்றுணர்ந்து ஆத்மஞானத்தை அடைந்து முடிவில் அவ்வாத்மாவே எங்கும் வியாபித்திருக்கிற தென்றறிந்து தானே பிரம்மமென்பதை யுணரும் திவ்ய ஞானத்தை அடைவதாலும் முத்தியை அடையலாம். ஆகலின் புத்திமான்கள் இம்மூன்று மார்க்கங்களையும் படிப்படியாய் அனுசரித்து கடைத்தேறுகின்றனர்.

"சொர்க்கம் நரகம்" முதலிய வியவகாரங்களுண்டா வெனின் ஜெகஜீவ பரங்களுண்டென்று நம்புவோர்க்கு ஸ்வர்க்க நரகவியவஹாரங்களுண்டு. பிரம்மம் ஒன்றைத் தவிர மற்றப்பொருள்களில்லை என்று கூறும் பிரம்மஞானிகளுக்கு மேற்கூறிய ஸ்வர்க்க நரகங்களில்லை. இதனால் நாமறிவது யாதெனில் நாம் ஆத்மஞானத்தை அடையுமளவும் சாஸ்திரங்களில் விதித்திருக்கிற கர்மங்களை செய்தே தீரவேண்டு மென்பது. அவ்வாறு அவ்வாறு செய்யாவிட்டால் பாபம் உண்டாகி பல ஜென்மங்களெடுத்து அவஸ்தைப்படுவோமேன்பதிற் கையமில்லை.

"எங்கு நிறைகின்ற பொருள்" என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். பரம் பொருளாகிய பகவான் எங்கும் நிறைந்திருப்பதால் அவரை பரிபூரண ரென்கிறோம். இதை ஒப்புக்கொள்ளாத மதஸ்தர் யாருமில்லை. கடவுள் எங்கும் நிறைந்தவரெனின் எந்த விடத்திலும் அவர்தானே யிருக்க வேண்டும். வேறொருவஸ்து இருக்க முடியாதன்றோ? மனிதனாகிய நாமிருக்கிறோமேயெனின் அது நியாய விரோதம். அப்போது நாம் இருக்கிற இடத்தில் கடவுளில்லை. கடவுளுக்கு அபரிபூரண தோஷம் உண்டாகிறது.

ஜுரமுள்ளவர் வென்னீர் சாப்பிடுகிறான். தேக ஸௌக்கிய முள்ளவன் தண்ணீர் அருந்துகிறான். இவர்கள் ஒருவரை யொருவர் கண்டு பரிகாசஞ்செய்வது நியாயமன்று. அதுபோல் சிலர் கோயிலுக்குப் போய்க் கடவுளை வணங்குகின்றனர், சிலர் இருந்த விடத்திலிருந்தே தியானிக்கின்றனர். ஒவ்வொருவருக் தத்தம் புத்திக்குத் தோன்றியவாறு கடவுளை ஆணாகவும், பெண்ணாகவும் பாவித்துப் போற்றுகின்றனர். இதில் இன்னத ஸரி, இன்னது ஸரியல்லவென்ற நாம் எப்படி சொல்லலாம். ஆயினும் பொதுவான விதியொன்றுண்டு அதாவது அவரவர் இருக்கும் மதத்தின் ஸம்பிரதாயங்களைத் தவிர்ப்பது தவறு ஒவ்வொரு மதஸ்தருந் தத்தம் வேதத்திற் கூறியபடி அனுஸரிப்பதே முறைமை.

தலையணையுரைகளில் ஒன்று சிவப்பாயும், ஒன்று கருப்பாயும், ஒன்று வெள்ளையாயும் இருந்தாலும் எல்லாவற்றிலுமுள்ளபொருள் பஞ்சு ஒன்றே. அதுபோல் நிறத்திலும், குணத்திலும் வேறுபாடுடைய சகல மனிதர்களுக்குள்ளும் வஸிக்கும் ஆத்மா ஒன்றுதான்.

"ஞானமே பிரதானம்" மனிதர்களாய் பிறந்தவர்கள் ஞானத்தை சம்பாதிப்பதவசியம். அதைத் தேடாமல் கேவலம் பொருளைத் தேடுவதில் மட்டும் பிரயோஜனமில்லை. வராகம் மலத்தைத் தின்று தேகங்கொழுத்து சுயேச்சையாய் அலைகிறது. அதுபோல மனிதனும் வயிறார உண்டு களிக்கிறான். நாய்க்குக் கோபம் வருவது போல் மனிதனுக்குஞ் சீற்றமுண்டாகிறது. காக்கைகள் அன்னத்தை கண்டோடுவதுபோல் மனிதனுஞ் சோத்துக்காக ஓடுகிறான். துஷ்டபிராணியாகிய புலியைப்போல் மனித புலியைப்போல் மனிதனும் பிறரை வருத்துகிறான். நரியைப்போல் நரனுந் தந்திரசாலி. ஏறக்குறைய மிருகங்களுக்குள்ள குணங்களெல்லாம் மனிதர்களுக்கு மிருக்கின்றன. ஆதலின் மனிதன் மற்ற பிராணிகளை விட மேம்பாடு உடையவன் என்பது எதனால் ஸித்திக்கிறது. பகுத்தறிவு என்னும் ஒன்றினால் மனிதன் மற்ற 3 - பிராணிகளை விட

உயர்ந்தவனாகிறவன். பாபமின்னது புண்யமின்னது இதைச் செய்வது சாஸ்திர ஸம்மதம், இதைச்செய்வது தோஷமென்றறிந்து கட்டுப்பாட்டுக் கடங்கி நியாயநிலை தவறாதிருப்பவனே மனுஷன். தன் மனம்போன படி பாபங்களைச் செய்து ஆசாரஹீனனாயிருப்பவன் ஓர் மிருகமேயாவன்.

"ஆனைவாயில்போன கரும்பு திரும்பிவருமா" என்று ஓர்பழமொழி உண்டு. அதுபோல் மிகுந்த தீக்குணமுண்டானால் முன்னிருந்த சொற்ப நற்குணங்கூட மறுபடி உண்டாகிறதில்லை. ஒருகுடம் பாலில் ஒருதுளி ஜலம் விழுந்தால் அந்ததுளி பாலின் குணத்தைப் பற்றுகிறது. ஒருகுடம் ஜலத்தில் ஒரு துளிபால் விழுந்தால் அந்த துளி ஜலத்தின் தன்மையை அடைகிறது. இது வஸ்துக்களுக்குள்ள ஸ்வபாவம். இதனாலன்றோ "சேரிட மறிந்து சேர்" என்று ஔவை கூறியிருக்கிறாள்.

உலகத்திலுள்ள காவிரி கங்கை, கோதாவிரி, கிருஷ்ணை முதலிய மகாநதிகளெல்லாம் ஸமுத்திரத்தில் வீழ்கின்றன. அவைகள் கடலுடன் கலக்கு முன்னே உட்கொள்ள யோக்கியமாயும் கலந்தபின் உப்பு ஜலமாக்கின்றன. அதுபோல் ஸம்ஸாரிகள் உலகத்திலிருக்கும் வரை இன்பங்களை அனுபவித்து ஸன்யாஸிகளான பின் ஸகல ஸுகங்களையும் மறக்கின்றனர். ஒருதரங் கடலிற்கடந்த நதி திரும்பி வராதது போல சன்யாஸிகளுங் கிரகஸ்தா சிரமத்துக்குத் திரும்பி வருகிறதில்லை.

சிறுவர்க்கான நீதி.

1. அதிகாலையில் எழுந்திருக்கவேண்டும்.

2. காலை மாலைகளில் கசர்த்துச் செய்ய வேண்டும்.

3. படிப்பதற்குக் காலத்தை யேற்படுத்திக்கொண்டு அக்காலத்தில் சோம்பலின்றிப் படிக்கவேண்டும்.

4. வகுப்பில் எல்லாப் பாடங்களையும் ங்களையும் கருத்தாய் வாசிக்க வேண்டும். ஏதேனும் ஒரு பாடத்தில் குறைவனால் அவன் ஆயுள் முற்றும் இன்னபாடத்தில் முட்டாள் என அழைக்கப்படுவான.

5. திருடு முதலிய தீயகாரியங்களைச் செய்தல் கூடாது. செய்வானேல் அவன் பேருக்கு முன்னால் திருட்டு என்னும் சொல்லைச் சேர்த்து என்றும் அழைக்கப்படுவன். ராசு என்பவன் திருடுவானேல் அவன் அந்த பேருக்கு முன் திருட்டு என்னும் பேரை வைத்துத் திருட்டுராசு, திருட்டுராசு என அவனாயுள் முற்றும் பெரிய அந்தஸ்திலிருக்கினும் அழைக்கப்படுவன். சில உபாத்திமார், தம் சீடர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பேரை வைத்துக் கூப்பிடுவர் அது பிறகு பெரும் அனர்த்தத்திற்கிடமாம். ஓரூரில் ஒருபாத்தியாயர் பல மாணாக்கருக்கும் அவரவர்க்கியைந்த மாறு பேர் வைப்பார். அதன்படியே சேஷ்டையுள்ள **ஏகாம்பரம்** என்னும் ஒருவனுக்குக் "குரங்கு ஏகாம்பரம்" என்றழைத்து வந்தனர். அவ்வாறே

மாணாக்கரும் அழைப்பாராயினார். அவ்ஏகாம்பரம் பெரியவனாய்த் தக்க கௌரவம் பெற்றுப் பல பேருடன் பெரிய வர்த்தகஞ்செய்து கொண்டிருக்குங்கால் அவனிடம் வர்த்தகஞ்செய்யு நிமித்தம் தேடிக்கொண்டு வந்த ஒருவன் "குரங்கு ஏகாம்பரம்" கடையெதுவென வரிசையாக விசாரித்து, கடைசியில் ஷை ஏகாம்பரம் கடைக்கே வந்து பல பெரிய மனிதருடன் வியாபாரம் புரிந்து கொண்டிருக்கும் ஏகாம்பரத்தையே நோக்கி: ஐயா, குரங்கு ஏகாம்பரம் கடை எது? குரங்கு ஏகாம்பரம் என்பார் யார்? எனக் கேட்ட போது, ஏகாம்பரத்துக்குக் கோபமூண்டு அவனை அடித்தனன். பின்னர்ப் பெருமனர்த்தத்திற் கிடமாயிற்று ஆதலின் சிறுவர் என்றும் கெட்ட நடவடிக்கைகளிற் பழகப்படாது. (பெரியவர் ஈனமான வேறு பெயர் வைத்து அழைப்பதும் தப்பு)

6. சுத்தமான நீரில் நாடோறும் ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

7. அழுக்கற்ற சாதாரண வஸ்திரம் தரித்துக் கொள்ள வேண்டும். பட்டு சரிகை முதலிய விலை அதிகமுள்ள ஆடைகளைத் தரிக்கப்படாது. படிக்கும் பிள்ளைகள் வித்தையிலேயே புத்தியைச் செலுத்த வேண்டுமன்றி சொகுசான வஸ்திரம் தரித்து வேடிக்கையாயுலாவப்படாது.

8. ஆபரணங்கள் தரித்துக்கொண்டு அதன் அழகைப்பார்ப்பதிலேயே புத்தியைச் செலுத்தும் பிள்ளைகட்குப் படிப்பு மட்டுப்படும்.

9. சத்துவ குணமான ஆகாரத்தைப் புசிக்க வேண்டும். புத்தியை விபரீதப்படுத்தும் தீயவுணகளைப் புசித்தால் சோம்பல் நித்திரை மயக்க முதலியனவுண்டாம் உண்டாமாயின் கல்வியிற் பிரிய மட்டுப்படும். பணக்காரர் வீட்டுப்பிள்ளைகளுக்கு வித்தையில்லாமற்போதலுக் கி:்தேகாரணமாம்.

10. துன்மார்க்கரோடும் கல்வியிற் பிரியமற்றவரோடும் சிநேகிக்கலாகாது.

11. சிறுவர், கல்வி விஷயமாய் ஆங்காங்கு செய்யும் உபந்நியாசங்களுக்குச் சென்று அதை யுய்த்துக் கேட்டு அதைப்பற்றித் தம்மினத்தாரோடு பேசவேண்டும்.

12. சிறுவர் பலரும் சேர்ந்து சங்கங்கள் கூடிக் கல்வி விஷயமான தர்க்கங்கள் செய்யவேண்டும்.

13. வாசிக்கும் பிள்ளைகள் தேர் திருவிழாவுக்கும் கலியாணத்திற்கும், விருந்திற்கும், இன்னுமிவற்றை யொத்த விசேஷங்கட்கும் போகப்படாது. இப்படிப்பட்ட விசேஷங்களுக்குப் போவதில் வித்தைக்குக் கெடுகி யுண்டாகின்றது. ஷை விசேஷங்கட்குப் பெரியோரே போதல் வேண்டும்.

14. பசி நன்றாயெடுத்தாலன்றிச் சாப்பிடப்படாது. சிற்றுண்டிதின்னக்கூடாது இது நோயைத்தரும். படிக்கும் சிறுவர் அடிக்கடி நோயாளிகளாய் விடுவதானால் கல்வி குறையும். பரீக்ஷையில் தேறார். தம்மையொத்த சிறுவர் பரீக்ஷையில் தேற, தாம் அபஜெயப்படுவரேல் அது அவமானம். பரீக்ஷையில் தேறாதது கொண்டு தற்கொலை

புரிந்தவர் பலரென அப்போதப்போது பத்திரிகைகளாலறியா நின்றோம்.

15. இளமையிலேயே உண்மை, பொறுமை, அன்பு, அடக்கம், இரக்கம், பயனில சொல்லாமை முதலிய சற்குணங்களில் பழக வேண்டும்.

16. தீயசொற்கள் பேசாமல் இருக்க, தம்மைத்தாம் எப்போதும் பாதுகாத்து வரவேண்டும். சில தாய் தந்தைகள் கெட்ட சொற்கள் பேசுகின்றமையால் அவர்கள் மக்களும் அவ்வாறே பேசுகின்றார்கள். மாதா பிதாக்கள் கெட்ட சொற்கள் பேசாமலிருப்பார்களானால் அவர்கள் பிள்ளைகளுக்கும் அந்த வாசனையேறி, கெட்ட சொற்கள் பேசாமலிருப்பார்கள்.

“குங்குமஞ் சுமந்த கழுதைபோல்" என்றொரு பழமொழியுண்டு, அதன்படி சிலர் ஸகல வித்தைகளுங் கற்று வாச்சாதுரியம் பொருந்திப் பலர் முன்னிலையிற் பிரஸங்கிக்குஞ் சக்தி அடைந்தும் அவைகளால் தாம் மனமடங்கிப் பரம்பொருளைச் சிந்தியாமல் இதரர்களுக்கு மட்டும் உபதேசம் செய்கிறார்கள். இரண்டு சரக்குகள் நிறைய குங்குமத்தைத் தன் முதுகின் மேற் சுமந்து திரியுங் கர்த்தபம் அதன் வாஸனையை அறிகிறதில்லை. அது போல் சில வித்வான்கள் தாங்கள் படித்த நீதி வாக்கியங்களைத் தங்கள் விஷயத்தில் பிரயோஜனப்படுத்துகிறதில்லை.

ஓர் மீனைக் கொத்திக்கொண்டு ஆகாயத்திற் பறந்த பருந்தை மற்றப் பருந்துகளெல்லாந் துரத்திக்கொண்டு போயின. முதற் பருந்து எங்கே பறந்தாலும் மற்றவைகளும் அதைப் பின்றொடர்ந்தன. அதைக்கண்டு வருத்தமுற்று மூக்கிலுள்ள மீனை அப்பருந்து நழுவவிட்டு தான் சுகமாக ஓர் மரத்திலுட்கார்ந்து கொண்டது நழுவிய மீனை மற்றொரு பருந்து தட்டிக்கொண்டு போயிற்று. மற்றப்பருந்து களெல்லாம் அதைப் பின் றொடர்ந்தன. அதுபோல் இவ்வுலகத்தில் பருந்தின் சுபாவமுடைய சிலர் தம்மினத்தாராயினுங்கவனியாமல் ஸதா வருத்திக் கொண்டே யிருக்கின்றனர்.

முன்னொரு ஸமயம் பார்வதியானவள் பரமேசுவரனை நோக்கி "ஸ்வாமி" உலகத்தில் அனேக மதங்களுண்டா யிருக்கின்றனர். ஆதலின் எந்த மதத்தை விவேகிகள் அனுஸரிக்கவேண்டும்?" என்றாள். அதற்குப் பரமசிவன் “ஹே நங்காய்! எவன் எந்த மதத்தை யனுஸரித்தாலுந் தோஷமில்லை. அவனுக்கு என்னிடம் பக்தி மட்டு மிருந்தாற்போதும்” என்றார். ஆதலின் வைஷ்ணவர்களானாலுஞ் சைவர்களானாலும், மகம்மதியர்களானாலும், வேறு எந்த மதஸ்தர்களானாலுந் தெய்வ பக்தியுடையவர்களே பெரியோர்களெனப்படுவர்.

"மழைஜலம் சுத்தமானதே." ஆயினும் அது விழுங் கூரையுங் குழாயுங், கால்வாயும் அசுத்தமாயிருக்கால் அவைகளின் வழியே ஓடிவரும் மழைநீரும் அசுத்தமாகவேயிருக்கும். அதுபோல் உலகத்திலுள்ள மதங்களெல்லாம் ஆதியிற் சுத்தமாகவேயிருந்தன. பிற்பாடு அவற்றை யனுஸரித்த மனிதர்கள் அசுத்தர்களாய்ப் போனதால் மதங்களுக்கும் ஒருவித குறைவு உண்டாயிற்றாம்.

"சிவதரிசனம் பவவிபோசனம்" என்று பெரியோர் கூறுகின்றனர். சிலர் சிவனைப் பஜித்தால் இவ்வுலக இன்பமும் விஷ்ணுவை ப்பவித்தால் அவ்வுலக இன்பமுங் கிடைக்குமென்று சொல்கிறார்கள். சிவன் பரப்பிரம்மமாதலால் சிவனைப் பஜிப்பவர்கள் மோக்ஷத்தையடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. வியவகாரதசையில் பிரம, விஷ்ணு, ருத்திரர்கள் என மூன்று மூர்த்திகள் உண்டென்பதை யொப்புக்கொள்வோர் சிவனை ருத்திரனென்று சொல்வது பிசகு. சிவன் வேறு ருத்திரன் வேறு என்பதை அவர்கள் நன்றாயுணரவேண்டும், ஆகிலும் பல கிரந்தங்களிலும் புராணங்களிலும் ருத்திரன் என்று சொல்லவேண்டிய விடத்தில் சிவன் என்று சொல்லப்பட்டிருக்கிறதால் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி சிவன் என்னும் பதம் துரியப்பொருளைக் குறிப்பதாகவும், ருத்திரனைக் குறிப்பதாகவும் விவேகிகள் அறியக்கடவர்.

ஈசுவரனாகிய ருத்திரன் ஆகிசங்கரராக அவதரிக்தார் அந்த மகானால் அத்வைத மதத்தின் உண்மை விளங்கிற்று. ஆதலின் அத்வைத கிரந்தங்களைப் படிக்க விரும்புவோர் ஆதிசங்கரரை ஸ்தோத்திரம் செய்வதவசியம் சங்கரர் என்னும் பதத்துக்கு சுகத்தைக் கொடுப்பவ ரென்றருத்தம். ஜெகத் குருவாகிய சங்கராசாரிய ஸ்வாமிகள் பகவத்கீதை உபநிஷத் முதலிய கிரந்தங்களுக்குச் செய்திருக்கும் பாஷியங்களைப் படிப்பவர்கள் நித்யமான சுகத்தையடைந்து ஜீவன் முக்தர்களாகின்றனர்.

"பேர் கங்காபவானி தாகத்துக்கு நீரில்லை" என்ற ஓர் பழமொழியுண்டு. அதுபோல் சிலர் நண்பர்கள் போல் நடித்து பொலலாங்கை விளைவிக்கிறார்கள். மித்திரர்களைப் போல் அபிநயித்து சத்துருக்களாயிருக்கின்றனர். இவ்வாறு நடிப்பதற்கும் இருப்பதற்கும் நியாயமுண்டு, எப்படியெனில் உலகில் பாம்புக்கு போகியென்று பேர். அதைக்கண்ட விடத்தில் ஜனங்கள் தடி.யாலடித்துக் கொல்லுகின்றனர். இப்படி அடிபடும் பாம்புக்குப் போகியென்னும் பெயர் உண்டாயிருக்கிறது. ஆகாசத்துக்கு அம்பரம் என்று ஓர் பிரதி நாமமுண்டு. அம்பரம் என்றால் மறைத்துக் கொண்டிருப்பது என்று பொருள்படும். ஆகாசம் வெட்ட வெளியாயிருக்கும் போது அம்பரம் என்னும் பெயரை அடைந்திருக்கிறது. அதனிடம் மறைக்குந்தன்மை சிறிதேனுமில்லையே. தவளைக்கு ஹரி என்று பேர்; ஹரி என்றால் பாபத்தைப் போக்கடிக்கிறவர் என்றருத்தம். தவளைக்கு அந்தப்பெயர் வந்ததற்கென்ன நியாயம்? இன்னுமோர் உதாரணங் கொடுக்கலாம். காக்கைக்கு துவிஜம் என்று நாமம். காக்கையோ பக்ஷிகளுள் சண்டாள ஜாதி, அதற்குத் துவிஜம் என்ற பெயர் தகுமா? சுக்காங்கல்லை வாயிற்போட்டால் வெந்துவிடும். அதற்கு சக்கரை யென்று ஸம்ஸ்கிருதத்தில் பிரதிநாமம். சக்கரைக்குள்ள தித்திப்பு அதற்கில்லாதிருக்க அப்பெயர் ஏன் வந்தது? மேற்கூறிய நியாயங்களால் வெளிவேஷத்தையும் பெயரையுங்கண்டு குணத்தைக்கிரகிக்க முடியாதென்றுஞ் சிலநாள் பழகிய பிறகே ஒரு பொருளின் பொருளின் உண்மையான தன்மையை அறிய வேண்டுமென்றும் ஏற்படுகிறது,

"குணத்தை மாற்றக்குருவில்லை" துஷ்டனாயிருப்பவன் துறவியைப்போல் வேஷம் போடலாம். துற்குணத்தை மாற்ற ஒரு நாளும் முடியாது.

ஸம்ஸாரி ஸன்யாஸியைப்போல் காவிவேஷ்டி தரிக்கலாம். தண்டத்தையுங் கமண்டலத்தையுங் கொள்ளலாம். பிள்ளை பெண் சாதிகளின் மேலுள்ள பிரீதிபோகாது. விஷத்தைப் பொற்பாத்திரத்தில் வைக்கலாம், விஷத்தின் தன்மை மாறாது. துவிதம் அத்வைதம் விசிஷ்டாத்வைதம் முதலிய மூன்று மதங்களும் எனக்கு ப்பிரீதிதானென்று சொல்லலாம். கேட்பவர்களை நம்பும்படியும் செய்யலாம். ஸமயம் வாய்த்தால் ஒன்றை உயர்வாகக்கூறி மற்றவிரண்டையும் இழிவாகக் கூறும் தன்மை யுண்டாய் விடுகிறது. இப்படி உலகில் உள்ளேயொன்றும் புறம்பே யொன்றுமாயிருக்கிறதே. அதை மாற்றமுடியாதோவெனின் முடியாதென்றே கூறுகிறோம். இதற்கொரு கதையுண்டு முற்காலத்தில் மிருகங்களெல்லாம் பேசும் திறமையைப் படைத்திருந்தன. ஒரு பெண் பூனை மிகுந்த அழகுவாய்ந்த ஓர் மனிதனைக் கண்டு அவனைக் கூட வெண்ணிக் கடவுளை நோக்கித் தவஞ்செய்தது. பகவான் பிரத்யக்ஷமாகி 'உனக்கென்ன வரம்வேண்டும்?' என்றார். பூனை தான் 16 - வயதுள்ள பாலகுமாரியாக வேண்டுமென்றும் மகா ஸௌந்தரியவதியாய் இருக்கவேண்டுமென்றுங் கோரியது. அவ்வாறே சுவாமிவரமருளி மறைந்தார் பிறகு, பூனை அழகிய பெண்ணாகித் தான் காதல் கொண்ட மனிதனுக்கெதிரில் வந்து நின்றது. அம்மனுஷ்யன் பூனைப் பெண்ணைக்கண்டு மோகத்திலாழ்ந்து அவளை விவாகஞ் செய்து கொண்டான். இவ்வாறிருக்கையில் ஒருநாள் பள்ளியறையில் திவ்யமான ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் இருவரும் படுத்துறங்குகையில் எங்கிருந்தோ ஓர் எலி அவ்வறைக்குள் நுழைந்தது. அதைக் கண்டவுடன் பூனைப்பெண் பழயபடி பூனையுர்ய்வெடுத்து அவ்வெலியை வெடுக்கென்று பிடித்து பக்ஷித்தது. இதற்குள்ளாகப் புருஷனுக்கு விழிப்புண்டாகி தன் பக்கத்தில் தடவிப்பார்த்தான். பெண்சாதியைக் காணவில்லை. உடனே கீழே பார்த்தான். பெண்சாதியைக் காணவில்லை. உடனே கீழே பார்த்தான். ஓர் பூனை காலியைப் பணித்துக் கொண்டிருந்தது. தடியால் அதை ஓட்டஎத்தனிக்கையில் அப்பூனை மறுபடியும் அழகிய பெண்ணுருவெடுத்து கணவன் பக்கத்தில் வந்துட்கார்ந்தது. உடனே அம் மனிதன் எழுந்து 'ஏ பூனைப்பெண்ணே உன் உறவு போதம். எலிதின்னும் உன் சுபாவத்தை இனி நீ மாற்றமுடியாது உன்னை விவாகஞ்செய்துகொண்டது என்பேரில் பிசகு' என்று படுக்கையை விட்டோடிப் போனான். ஆதலின் குணத்தை மாற்ற குருவில்லை யென்பது நிச்சயமாகிறது.

“தென்ன மரத்தில் தேள் கொட்ட குட்டிச்சுவரில் நெறி கட்டியது” போல், பொருளைத் தேடுபவர் ஒருவரும் அதை யனுவிப்பவர் வேறுமாயிருக்கிறார்கள். வழியைக் கண்டுபிடிப்பவன் ஒருவன், அதில் நடப்பவன் மற்றொருவன். வீட்டைக் கட்டுவோன் ஒருவன், அதில் வாழ்பவன் வேறொருவன். இவ்வாறிருப்பானேன் என்றால் இம்மாதிரி பகவானே செய்திருக்கிறார். திரிபுர தகனஞ்செய்த காலத்துங் காமனை யெரித்தபோதும் பரமசிவன் தமது நெற்றிக்கண்ணைத் திறந்தார். அதில் பாதிக்கண் பார்வதிக்குச்சொந்தம். அவ்வாறிருக்க இவர் ஒருவரே புராரி, காமாரி யென்னும் பெயர்களைப் பெற்றார். இது தான் போகட்டுமென்றாலோ, மார்க்கண்டேயனை இரக்ஷிக்கவேண்டி எமனை இடது காலால் உதைத்தார். பரமசிவனது இடப்பக்கம் முழுவதும் பார்வதிக்குச் சொந்தம். ஆதலின் இடது கால் அம்பாளுடையதாயிருக்க, காலாந்தகன் என்ற பெயரைத் தாமே வைத்துக் கொண்டார். பார்வதிக்கு அவ்வித பெயர் இல்லை. இதென்ன அநீதம்! இப்படியும்

பக்ஷபாதகஞ் செய்யலாமாவென்று ஓர் பக்தர் கூறுகிறார். இந்த நியாயத்தை யனுசரித்துத் தான் உலகத்தில் ஒருவர் தேடியதை மற்றொருவர் அனுபவிக்கிறாரோ?

"விதிவலிது" என்று ஓர் பழமொழியுண்டு. அதற்கொரு கதை சொல்லுகிறோம். முற்காலத்தில் நலினவர்மாவென்னும் ஓரரசனிருந்தான். அவனுக்கு ஒருபுத்திரனுண்டு. அப்புத்திரனது ஜாதகத்தைப் பார்க்க மளையாளத்திலிருந்து ஓர் ஜோசியரை வரவழைத்தான். அவர் "ஸ்வாமி உமது குமாரனுடைய ஜாதகத்தைப் பார்த்தேன் அவனுக்கு ஸிம்ஹத்தால் மரணம் சம்பவிக்கும்' என்றார். அரசன் தன்னுடைய ஜாதகத்தைக் காட்டவே. "உமக்கு சோழியனால் கெடுதி நேரிடும்" என்றார். உடனே மன்னன் தன் குமாரனை வெளியே விடாமல் அரண்மனைக் குள்ளாகவே வைத்துக் கொண்டிருக்கையில் அப்பிள்ளை "ஐயோ வேட்டையாட வகையின்றிப் போயிற்றே" யென்று அங்குள்ள சிங்கபடத்தைப்பார்த்து உன்னாலன்றோ எனக்கு இக்கதி வந்தது என்று ஒரு கொம்பையெடுத்து அதையடிக்கப்போனான். அதிலிருந்த ஓர் சிலாம்பு அவன் கையிற் குத்திக் காயமுண்டாகி இரத்தம் வடிந்தது. பிறகு புரையோடி உயிருக்கு ஆனியுண்டாயிற்று அரசன் தன் மகனுக்குச் சொன்ன ஜோஸ்யம் பலித்ததென்று தனக்குச் சோழியர்களால் கெடுதலுண்டாகாதிருக்குமாறு அந்த ஜாதியைச் சேர்ந்த எல்லோரையுந் தன் ராஜ்யத்தினின்று துரத்தினான். இவ்வாறிருக்கையில் சோழியனைப்போல் ஒருபட மிருக்கக்கண்டு ஓகோ நீயா என்னை உபத்திரவஞ் செய்யப்போகிறா யென்று அதைத் தொட்டான். அதில் ஒட்டிக்கொண்டிருந்த ஓர் தேள் அவனைக் கொட்டிற்று. வருத்த மடைந்தான். அது முதல் சித்திரத்திலுஞ் சோழியனை வைக்கப்படாதென்னும் பழபொழி யுண்டாயிற்று. மேற்கூறிய கதைகளால் விதியை வெல்லுதலரிதென் றறிகிறோம்.

"ஈசனை நேசி" இதிலுள்ள சுகத்தைத் தேடுங்கள். ஸௌகரியத்தை நாடுங்கள். ஈசனையின்றி வேறொரு நேசனுண்டானால் அவனால் விளையக்கூடிய விபத்துகள் அனந்தம். பிள்ளையினிடம் பிரியமாயிருக்கும் பெற்றோர் அதன் பிரிவால் துன்புறுகின்றனர். மான்குட்டியிடம் பிரீதி வைத்த பரதர் மறுஜென்மத்தில் மானாகப் பிறந்தார். ஈசனிடம் விசுவாஸங்கொண்டு அவரைத் தியானஞ் செய்கிறவர்கள் ஜீவன் முக்தர்களாகின்றனர். ஆதலின் நாம் லயத்தையடையும் வஸ்துக்களிடம் ஆசைவைக்காமல் அழிவில்லாத தயாபரராகிய ஸர்வேசுவரனிடம் விசுவாஸங் கொண்டு ஸதாகாலமும் அவரைத் தியானிக்கக்கடவோம்.

"பாலையும் நீரையும் பிரிப்பது" அன்னப்பக்ஷிகளின் சுபாவம். அது போல் புத்திமான் பல நூல்களிருப்பினுஞ் ஞான நூல்களை மட்டுங்கற்று மற்றவைகளைத் தள்ளிவிடுகிறான். எல்லா நூல்களையும் படித்து வீண் காலம் போக்குகிறான். இதற்கொரு கதையுண்டு. சில வருஷங்களுக்கு முன் ஆதியூர் என்னுங் கிராமத்தில் சேஷம்மாளென்னும் ஓர் கிழவியிருந்தாள் இவளுக்கு இராமன், கிருஷ்ணன் என்ற இரண்டு பிள்ளைகளிருந்தனர். அவர்களிருவரும் விடியற்காலமே எழுந்து கழனிக்குச்சென்று ஏருழுதல், பரம்படித்தல், விதை தெளித்தல், ஜலம்பாய்ச்சல் முதலிய பயிர்த் தொழிற் காரியங்களைச்செய்து இடையே எருமை மாடுகளை

மேய்த்து அந்தி வேளையில் வீட்டுக்கு வருகிற வழக்கம் ஆதலின் சேஷம்மாள் பகற் போசனத்தை இரண்டு பாத்திரங்களில் நிரப்பி யாரேனும் ஓர் வேலைக்காரனிடங் கொடுத்தனுப்புவாள். இராமனுங் கிருஷ்ணனும் வயிறார உண்ணுவார்கள். இவ்வாறிருக்கையில் ஓர் நாள் வைகுண்ட ஏகாகசி வந்தது.

"கடுகு சிறுத்தாலுங் காரம்போகுமா" என்றபடி இராமனுங் கிருஷ்ணனும் எப்போதுங் கழனியில் வேலைசெய்தாலும் முன்னோர்கள் அனுசரித்த ஏகாதசி விரதத்தை மறந்து போவார்களா? மறவார்களன்றோ. ஆதலின் வைகுண்ட ஏகாதசியன்று காலை வேளையில் பழயது உண்ணாமல் வயலுக்கு வந்தனர். பகல் பதினைந்து நாழிகையாயிற்று. சேஷம்மாள் 'ஐயோ, பிள்ளைகள் பசியால் வருந்துவார்களே' யென்று இருபது அடைகள் கட்டி (ஒவ்வொரு அடையும் ஒரு அங்குலப் பருமனிருக்கும்) நடுவில் அடையைப் போலவே சக்கிராகாரமாயுள்ள ஓர் விராட்டியை வைத்து ஆள் வசம் அனுப்பினாள். அதை வைத்ததற்குக்காரண மென்ன? அதன் மேலே அடுக்கி வைத்துள்ள 10- அடைகள் ராமனுக்குங் கீழேபிருக்கும் 10 - அடைகள் கிருஷ்ணனுக்குக் கணக்காகட்டுமென்பது அவள் கருத்து. இராமன் அடைகள் வந்தவுடன் ஆசையோடு வாங்கி ஒவ்வொன்றாய்க் தின்னாமல் இரண்டு மூன்று அடைகளை ஒன்றாகப்பிட்டு வாயிற்போட்டுக் கொண்டான். இவ்விதமாக இருப்பது அடையும் ஒரு நாழிகைக்குள் தின்று ஒரு சொம்பு தீர்த்தத்தையும் மடமட வென்று உட்கொண்டான். சில நாழிகைக்கெல்லாங் கிருஷ்ணன் வந்து சேர்ந்தான். அம்மா அனுப்பிய அடை எங்கே யென்றான், “ராமன் எனக்கு அனுப்பிய அடைகளை நான் தின்று விட்டேன். உனக்கு இனிமேல் வரும் போலும்" என்றான். கிருஷ்ணன் 20 - நாழிகைவரையுங் காத்திருந்தான். அடை வரவில்ல. பசி வயிற்றைக் கிள்ளியது. ஓடினான் வீட்டுக்கு. அம்மா எனக்கெங்கே அடை என்றான். சேஷி அப்பா உனக்கும் உன் தமையனுக்குஞ் சேர்த்து 20 - அடைகளனுப்பி நடுவில் அடையாளமாக ஓர் எரிமுட்டையைக் கூட வைத்திருந்தேனே. ஒரு வேளை வேலைக்காரன் தின்று விட்டானா? வா போவோம் வயலுக்கு, என்று இருவரும் இராமனிடம் வந்து சேர்ந்தார்கள். இராமா எத்தனை அடைகள் தின்றாயென அவன் இவ்வளவென்று கணக்கு பார்க்கவில்லை, நீ அனுப்பிய அடைகளை எறியாமல் எல்லாவற்றையும் தின்றுவிட்டேன் என்றான். சேஷி 'அடைநடுவில் ஒரு எரி முட்டையை அடையாளமாக வைத்திருந்தேனே' யென இராமன் அப்படியா அம்மா! அதுதானோ எரிமுட்டை, வாசனை வந்தது, அடைகாந்திப் போயிருக்கு மென்றெண்ணினேன், என்றான். இது போல் மூடன் ஸாரமில்லாத நூல்களையும் விஷயங்களையுங் கற்று காலத்தை வீணாக்குகிறான்.

“மோக்ஷமென்பதுயாது” வைகுண்டம் போவதுங் கைலாஸஞ் செல்வதும் மோக்ஷமென்று அத்வைதிகள் கூறவில்லை, பிரம்ம மொன்றே உண்மை, தானே பிரம்ம மென்று அறிவது தான் மோக்ஷமெனப்படுகிறது. ஒவ்வொருவனுந் தன்னைப் பிரம்மமென்று சொல்லிக்கொள்வதால் மோக்ஷத்தை யடைந்து விடுகிறானா? இல்லை. அவன் முந்தனல்ல. எவன் தன்தேகத்தையும் இவ்வுலகத்திலுள்ள மற்றப் பொருள்களையும் மும்மூர்த்திகளையும் பிரம்மமென்று அறிகிறானோ, எப்போதும் அம்மாதிரியே காணுகிறானோ, எவன் தன்னை வேறாகவும் கடவுளை வேறாகவும் நினைக்குந் தன்மை யை உண்மையில் இழந்து எங்குந் தானே

நிறைந்திருக்கிறதாகவுந் தன்னையின்றி வேறு பொருளில்லை யென்றுந் தானே பிரம்மமெ ன் றுந் தெளிகிறானோ அவனே ஜீவன்முக்தன். அவனே மோக்ஷத் தை யடைந்தவன். அவனுக்கு ஜனன மரண துக்கங்களில்லை. இது அத்வைதிகளின் கொள்கைப்படி மோக்ஷ பென்பதின் கருத்து.

சற்கருமங்களைச் செய்து பாவத்தை யொழித்து பகவானை யடைந்து சதா அவர் சன்னிதானத்தில் சேவை செய்து கொண்டு பகவதானந்தத்தையடைவதே துவைதிகள் கூறும் முக்தி. இம்முக்தி ஓர் வித பதவி முக்தியேயன்றி வேறல்ல. திரிமூர்த்திகளுஞ் சுத்தமாயையில் பிரதிபிம்பித்த பிரம்மத்தைத் தவிர வேறல்லாத தாலும் மாயாரகிதமாய் நின்ற போது திரிமூர்த்திகளும் அவர்கள் லோகங்களும் இல்லாமற்போய் பிரம்மமொன்றே மிஞ்சுவதாலுந் திரிமூர்த்திகளது லோகத்தில் அடைந்த பதவிமுக்தி நித்யமில்லாமல் அழிவுறுவதாலும் அது முக்தியாகாதென்பது அத்வைதிகளின் கொள்கை.

"**காலத்துக்கேற்ற கோலம்**" என்று ஓர் பழமொழியுண்டு. அதாவது பலவைதீகர்கள் முன்னிலையில் வைதீகவேஷமும் லௌகீகர்கள் முன்னிலையில் லௌகீகவேஷமும் போடவேண்டும். ஒவ்வொருவர் குணத்துக்கும் நடத்தைக்கு மேற்றபடி நமது குணத்தையும் நடத்தையையும் மாற்றிக்கொள்ள வேண்டும். அதைத் தவிர்த்த நம்முடைய குணத்துக்கிணங்கி மற்றவர்கள் நடக்கவேணு மென்றெண்ணுவது பிசகு. நியாயமே பெரிதாயினுங் காலத்தையும் இடத்தையும் அனுசரித்து ஜீவனத்தைக் கெடுத்துக் கொள்ளாமலிருப்பதே புத்திசாலிகளின் இலக்ஷணம். புறமதஸ்தர் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர்களாயிருப்பவர்கள் ஹிந்துமதத்தைச் சிலாகித்துப் பேசுவதால் வேலையை யிழக்கிறார்கள். கிறிஸ்துவ உத்தியோகஸ்தரிடம் வேலை செய்வோர் கிறிஸ்து மதத்தை யிகழலாகாது. ஆனால் அதிகலாபங் கிடைக்குமென்ற பேராசையால் சன்மார்க்கம், ஸத்ஸங்கம், இவைகளைத் தவிர்ப்பதும் புத்தியீனம். தன் ஜாதி, தன் மதம், தன்மானம் ஆகிய இவைகட்கு ஆனி உண்டாகாதவகையில் இதரர்களுடைய குணத்துக்கிணங்கி நடக்கலாம். மேற்கூறியவற்றுள் ஏதேனுமொன்றுக்கு இழிவுண்டாகுமென்று தோன்றினால் உடனே இருக்கும் நிலையை விட்டு அகலுவதுநன்று.

முற்காலத்தில் ஓர் சிங்கம், கழுதை, நரி ஆகிய மூன்று ஒன்றோடொன்று இனங்கியிருக்கன. ஒரு நாள் இரையகப்படாமல் மூன்றும் அலைந்து திரிந்து சிற்சிலமிருகங்களைக்கொன்று அவைகளைத் தங்களிருப்பிடத்துக்கு இழுத்துவந்தன சிங்கம் கழுதையை நோக்கி 'அடே நண்பா' நீ இந்த மாம்ஸங்களை நம்மூவருக்குஞ் சரியாகப் பிரித்துவை' யென்றது, கழுதை நியாயப்படி மாம்ஸங்களை ஒன்றாகக் குவித்து சரியாக மூன்று பங்காக்கி வைத்தது. உடனே ஸிம்ஹத்துக்குக் கோபமுண்டாய் ஒரே பாய்ச்சலாகப்பாய்ந்து கழுதையை அடித்துக் கொன்று தின்று நரியைப்பார்த்து "நண்பா! நீ இந்த மாம்ஸங்களை உனக்கும் எனக்குமாக இரண்டு பங்கு செய்' என்றது. நரி நவத்துவாரங்களையும் பொத்திக்கொண்டு மாம்ஸங்களை, ஒன்றாகக் குவித்து முக்காலே மூன்று வீசம்பாகத்தை சிங்கத்துக்கு வைத்து வீசம்பாகத்தைத் தான் வைத்துக் கொண்டது. சிங்கஞ் சந்தோஷமடைந்து நரியைப்பார்த்து 'ஓ, நரியே, நீதான் புத்திசாலி. கணக்குத் தெரிந்தவன். இந்த

கணக்கை யாரிடம் கற்றுக்கொண்டாய் என, நரி 'கழுதையினிடமிருந்து கற்றேன். அது பட்டபாடு எனக்கு நற்பாடமாயிற்று,' என்றது. இதனால் காலத்துக்கும் இடத்துக்குத் தக்கபடி நடக்கவேண்டு மென்றறிகிறோம்.

"கஸ்தூரி ரங்கா, கல்யாண ரங்கா" வென்று பக்தர்கள் பற் பல விதமாய்ப் போற்றும் பள்ளிகொண்ட பெருமாளகிய ஸ்ரீரங்க நாதனையுஞ் சித்ஸபேசா, ஆனந்த நடராஜாவென்று ஞானிகள் ஸ்துதிக்கும் நர்த்தன சுந்தரராகிய நடராஜ மூர்த்தியையும் ஸதா தியானிக்கக்கடவோம்.

"அவரவர் ஜாதிக்கு அவரவர் தொழில் எளிது" பன்றிக்குட்டி ஆகாயத்தில் பறக்க முடியாது. கோழிக்குஞ்சு கிணற்றில் இருக்க முடியாது. மீன்கள் பூமியில் வலிக்கமுடியாது. நாய் எவ்வளவு பலமாயும் லக்ஷணமாயுமிருந்தாலும் ஏருழ முடியாது. மிருகங்களில் இவ்வித வித்யாஸ மிருப்பதுபோல் மனிதர்களுக்கும் வித்தியாஸம் உண்டா வென்பது ஓர் கேள்வி. உண்டென்றே பெரியோர் கூறுகின்றனர். தொழில்களை யனுஸரித்தே வர்ணாச் சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு வர்ணத்தான் மற்றொரு வர்ணத்தானுடைய தொழிலை யனுஸரிப்பதால் கேடுண்டாகும், இதற்கு உதாரணமாக ஓர் கதை சொல்லுவோம்.

"காரியம் ஆகும்வரை கழுதையின் காலைப்பிடி" என்று ஓர் பழமொழி. அந்தக் கழுதை யொன்று ஒரு நாள் கானகத்தில் திரிந்து கொண்டிருந்தது. அது எதேஷ்டமான புற்களை மேய்ந்து மிகுந்த ஸந்தோஷத்தால் கொஞ்சங் கானஞ்செய்யவே கால் மைல் தூரத்துக்கப்பால் இரையகப்படாமல் பசியால் வருந்தி யலைந்து கொண்டிருந்த ஓர் கோனாய் அதனிருப்பை யறிந்து ஆனந்தஞ்செறிந்து கழுதையினிருப்பிடத்துக் கோடிவந்தது. பார்த்தது கழுதை, ஓகோ! இனி இவன் நம்மை உயிருடன் விடமாட்டான் இவனிருப்பை யறியாமல் கானஞ்செய்து விட்டோம். இப்போதொரு யுக்தி செய்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு காலைத் தூக்கிக்கொண்டு நொண்டி நொண்டி நடந்தது. கோனாய் கழுகையை நோக்கி 'ஏன் நொண்டுகிறாய்? என, 'அப்பா, நான் என்ன செய்வேன், இந்தக் காட்டிலுள்ள பெரிய முள்ளொன்று என் காலில் தைத்து விட்டது. நீ என்னைப்பக்ஷிப்பதில் எனக்கு ஆக்ஷேபமில்லை. ஆனால் என் காலில் தைத்தமுள் உன் தொண்டையிற் சிக்கி இறந்து போவாயே யென்று மாத்திரம் விபஸன மடைகிறேன்' என்றது, அதைக்கேட்ட கோனாய் 'அப்படியானால் உனது காலைக் கொஞ்சந் தூக்கிக்கொள், நான் முள்ளைப்பிடுங்கி விடுகிறேன்' என்றது. கழுதை அவ்வாறே காலைத் தூக்கிக்கொண்டது. கோனாய் வெகு சிரத்தையுடன் கழுதையின் காலுக்கு நேரில் முகத்தை வைத்துக்கொண்டு முள்ளிருக்கு மிடத்தைத் தேடியது.

"காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்றிருப்பதால் அது தான் சமயமென்று கழுதை தன் பலமெல்லாங்காலில் கூட்டி கோனாயின் மூஞ்சியில் எட்டி உதைக்கத்து. ஷை கோனாய் பற்களு திர்ந்து பின்புறமாய்ச் சாய்ந்து விழவே கழுதை ஓட்டம் பிடித்தது. உடனே கோனாய் மெள்ள எழுந்து "ஐயோ என் தகப்பன் எனக்குப் பாய்ந்து பிடுங்கித்தின்னுந் தொழிலைக் கற்பித்தானே யன்றி முள்ளெடுக்குந் தொழிலைக்

கற்பிக்கவில்லை. நான் முட்டாள் தனமாய் என் ஜாதித் தொழிலைவிட்டு முள்ளெடுக்குத் தொழிலைச் செய்ததால் இந்தக் கஷ்டமடைந்தேன்” என்றது.

"முன்யோசனையே முதற்றர யோசனை” ஒரு ஸமயம் பெரிய குரங்கொன்று பல மிருகங்கள் முன்னிலையில் கோணக் கூத்தாடி அவர்களெல்லோரையும் ஸக்தோஷிப்பித்தது. அதனால் மிருகங்களெல்லாம் அக்குரங்கைத் தங்களுக்கு அரசனாக நேமித்துக்கொண்டன. இதையறிந்த ஓர் குள்ள நரி மிகுந்த பொறாமையுங் கோபமுங்கொண்டு ஓர்நாள் குரங்கரசனை ஓர் கூட்டண்டை கூட்டிப் போய் திவ்யமான பக்ஷணம் வைத்திருப்பதாயும் அதை யெடுத்துக்கொள்ளும்படியுங் கூறியது. குரங்கு வாயில் ஜலம் ஊற அந்தப் பக்ஷணத்தைக் கவ்வுகையில் கதவு முடி கூட்டிலகப்பட்டு அவதியடைந்து நரியை நிந்திக்கத் தொடங்கியது. நரியோ அதை நோக்கி “முன் யோசனையில்லாத மூடா! இந்த அற்ப புத்தியைக்கொண்டா நீ அரசனாகவிருந்து மிருகங்களை யாளப்போகிறாய்" என்று பரிகாஸஞ் செய்தது. இக்கதையால் ஒரு ஸமயம் கோமாளியைப் போல் கூத்தாடுவதால் பலர் ஹாஹாவென்று ஸந்தோஷித்துப் பெருமைப் படுத்தினாலும் அப்பெருமை நிரந்தரமாயிராதென்றறிகிறோம்.

“எதார்த்தவாதி வெகுஜன விரோதி." இந்தப்பழமொழியால் ஜனங்கள் எப்போதும் உண்மை சொல்லுகிறவனை விரோதிக்கிறார் களென்று அறிகிறோம். உலகில் ஞானவான்களும் படிப்பாளிகளுஞ் சொற்பம். படிப்பில்லாத பாமரர்கனே விசேஷம். அத்தகையோர்க்கு உண்மையான விஷயங்களை யெடுத்துரைத்தால் ஸரிப்படுகிறதில்லை. எவனாவது பெரிய புளுகு புளுகினால் அதில் மிகுந்த ஆவல் உண்டாகிறது. விவேகிகளோ அப்படியல்ல. அவர்கள் எந்தக் காரியத்தையும் ஆபாய்ந்தே செய்வார்கள்.

“இரண்டு பெண்டாட்டிக்காரன் திண்டாட்டப் படுவது போல்" என்பது ஓர் பழமொழி. இதற்கு ஆங்கிலேயர்கள் ஒரு கதை சொல்லுவார்கள். வயது சென்ற ஒரு மனிதன் இரண்டு ஸ்திரீகளை விவாகஞ்செய்ய எத்தனித்தான். அவர்களில் ஒருத்தி எவ்வனமுடையவள். மற்றொருத்தி வயது சென்றவள். ஆங்கிலேயர்களுக்குள் சிறியவன் பெரியவளை விவாகஞ்செய்யும் வழக்கமுண்டு. ஆதலின் இரண்டு ஸ்திரீகளும் ஷெயானைக் கல்யாணஞ் செய்ய இஷ்டங்கொண்டனர். வயது சென்றவள் தன் புருஷனுடைய தலை பாதி நரைத்துப் பாதி கறுத்திருப்பது சிலாக்கியமன்று. தன் தலை மயிரைப்போல முற்றிலும் நரைத்திருப்பது நன்றென எண்ணி ஒவ்வொரு கறுப்பு பயிரையுந் தினந்தோறும் பிடுங்கி வந்தாள். மற்றொருத்தி தான் இளமைப் பருவமாயிருப்பதும் தன் புருஷன் கிழவனைப்போ லிருப்பதும் பிசகென்றெண்ணி அவன் தலையிலுள்ள நரைத்த மயிர்களை ஒவ்வொன்றாய்ப் பிடுங்கி வந்தாள். இவ்வாறு இரண்டு பெண்சாதிகளும் இடைவிடாமல் தங்கள் காரியத்தைச் செய்து வந்ததால் புருஷன் தலை மொட்டை யாகி சொம்புஸ்தாலியைப் போலிருந்தது. இதனால் இரண்டு பெண்டாட்டிக்காரன் திண்டாட்ட மடைந்தது போல் என்னும் பழமொழி வழங்கத் தலைப்பட்டதாம்.

“பேராசை பெருங்கேடு” என்பது பெரியோர் வாக்கியம். ஒரு காட்டில் பசியால் வருந்திய நரியொன்று இரை தேடிவருகையில் ஓர் மரப்பொந்தைக்கண்டது. அதில் வேட்டையாடுவோர் தங்களுடைய உபயோகத்துக்காக இறைச்சிகளை வைத்திருந்தனர். நரி ஸந்தோஷப்பட்டு உள்ளே நுழைந்து இறைச்சிக ளெல்லாவற்றையும் விலாப்புடைக்கத் தின்றது. அதனால் வயிறு பெருத்து பொந்கிலிருந்து வெளியே வரமுடியாமல் அவஸ்தைப்பட்டுக் கடைசியாக அவ்வழியேவந்த வேறொரு நரியைக் கண்டு தான் படும் ஸங்கடத்தைச் சொல்லி வெளியே வருவதற்கு ஏதேனும் யுக்தி உன்டாவென்றது. அந்நரி 'ஒரு யுக்தி உண்டு. இரண்டு மூன்று நாள் அப்பொந்திலேயே இருந்தால் ஆகாரமின்றி வயிறு ஒடுங்கும். பிறகு தாராளமாய் வெளியே வாலாம் என்று சொல்லி மூடியுமுன் வேட்டைக்காரர்கள் அங்கு வந்து சேர்ந்தனர். மரப் பொந்தையும் அதில் தாங்கள் வைத்த ஆகாரத்தை யெல்லாந் தின்று பருத்த நரியையுங் கண்டு அதை நன்றாகப்புடைத்து வெளியே இழுத்தெறிந்தனர்.

“நாளைவரும் பலாக்காய்க்கு இன்றுவருங் களாக்காய் நல்லது” இனி எப்போதோ ஒரு பெரிய லாபம் கிடைக்கப்போகிற தென்று இப்போது கிடைக்குஞ் சிறிய லாபத்தைக் கெடுத்துக் காள்வது பிசகு. ஒரு நாள் குளத்தில் ஒரு செம்படவன் மீன்களைப் பிடிப்பதற்காகவலையைவீசினான். ஓர் சிறியமீன் அகப்பட்டது.

அது வலைஞனை நோக்கி 'ஐயா என்னை விட்டுவிடும். - நான் உமது கடைவாய்க்குக்கூட பற்றமாட்டேன். இன்னுஞ் சிலநாள் இந்தக் குளத்திலேயே என்னை வாழும்படி நீர் விட்டுவிட்டால் பெரிதாகிக் கொழுத்து மறுபடியும் உமது வலைக்குட் சிக்குவேன். என்னை யாருக்கேனும் விற்று பணம் ஸம்பாதிக்கலாம் என்றது. செம்படவன் "ஏ, சிறிய மீனே, உன்னை இப்போது விட்டு விட்டால் மறுபடியும் நீ என்னிடஞ் சிக்குகிறாய் என்பது என்ன நிச்சயம். இப்போது கிடைக்கும் லாபத்தைக் கெடுத்துக்கொள்ளும் அவ்வளவு மூடனென்றென்னை மதியாதே” என்றான்.

கழுகுகள் வெகு தூரத்திலுள்ள பொருள்களைப் பார்க்கக்கூடிய சிறந்த கண்களைப் பெற்றிருந்தும் பூமியிலுள்ள சுகந்தமான வஸ்துக்களையும் மிகு அந்தமான பொருள்களையும் நோக்காமல் எப்போதும் பிணங்களையே பார்க்கின்றன நல்ல பழங்களையும் ஆகாரங்களையும் விரும்பாமல் பிரேத போஜனத்தையே இச்சிக்கின்றன. இவ்வாறு செய்வது அப்பக்ஷிகளின் தன்மை. அவைகளோ பகுத்தறிவில்லாப் பிராணிகள். ஆதலின் அப்பிராணிகள் பேரில் நாம் குற்றஞ் சொல்வதற்கிடமில்லை. ஆயினும் பிணத்தைப் பிடுங்கித் தின்னுங் கழுகுகளிடம் ஜனங்களுக்கும் பிரீதியுண்டா? பிரஜைகள் அக்கழுகுகளைக் கூண்டில் வைத்து வளர்க்கிறார்களா? மடியில் வைத்துக் கொஞ்சுகிறார்களா? முகத்தில் சாய்த்து முத்தமிடுகிறார்களா இல்லை. அதுபோல் பிறர் செய்யும் உபகாரங்களை யெல்லாம் எண்ணிப் பாராமல் என்ன வென்று ஓராமல் அவர் செய்ததாகத் தாம் எண்ணிய இரண்டொரு அபகாரத்தை நினைத்து உபகாரிகளை நிந்தித்தலும் அவர்கட்கு இடையூறுகளை விளைவித்தலுஞ் சில மனிதர்கட்கு இயல்பு. இத்தகைய துர்க்குணிகள் பிறரால் வெறுக்கப்படுவதுடன் நரகயா தனைக்குமுள்ளாவார்கள்.

ஏனெனில் பகுத்தறிவுள்ள பிராணிகள் அதாவது மனிதர்கள் தாங்கள் திரிகரணங்களாலுஞ் செய்யுங் காரியங்கட்கு உத்தரஞ்சொல்லக் கடமைப்பட்டவர்கள். அவர்களுடைய காரியம் அயோக்யமாயும் பாபகரமாயுமிருந்தால் அதற்குத் தக்க பலனை யனுபவித்தே தீரவேண்டும். ஆதலின் ஒவ்வொருவரும் நல்லது இன்னது கெட்டது இன்னது என்று தெரிந்து கொள்ளுவது அவசியம். நல்லது கெட்டது என்பன மூன்று வகைப்படும். சில காரியங்கள் சரீர வளர்ச்சிக்கு நல்லவை சில காரியங்கள் ஆத்மார்த்தமானவை. சரீரம், ஆத்மா ஆகிய இரண்டுக்கும் நன்மையை விளைக்கக்கூடிய காரியங்களுமுண்டு. இம்மாதிரியே கெட்டகாரியங்களும் மூன்று விதம் உதாரணமாக மாம்ஸாதிகளைப் புசித்தல் சரீர வளர்ச்சிக்குக் காரணம். ஆனால் ஆத்மார்த்தமானதல்ல. ஆத்மார்த்தமான காரியங்கள் புண்யமென்றும் மற்றவை பாபமென்றும் பொருள். விதிப்படி பகவானுக்கு நிவேதனம் பண்ணிய அன்னத்தை யுட்கொள்வது சரீரத்திக்கும் நன்மை. அதனாற் புண்யமுண்டு. விரதாதிகளை யனுஷ்டிப்பது சரீர வளர்ச்சிக்கு ஸாதகமா யிராவிட்டாலும் ஆத்மார்த்தமானதே. மேற்கூறியனபோலுள்ள அனேக காரியங்களை விவேகிகள் பிரித்து இகபர ஸாதகமாகவும் அல்லது பரத்துக்கே ஸாதகமாகவுமுள்ள காரியங்களை மட்டுஞ்செய்து பாபகரமான செய்கைகளைத் தவிர்க்க வேண்டும். நல்லது இன்னது கெட்டது இன்னதென்று அறியுஞ் சக்தியுடையவர்களே விவேகிகளெனப்படுவர் இத்தகைய விவேகிகளையே நல்லோரென மதிக்கவேண்டும். தனக்குக் கிடைத்த நிதியையும் பந்துக்களையுஞ் செல்வாக்கையுங் கொண்டு பிறருக்குத் தீங்கு விளைப்பவர்கள் அவிவேகிகளே. ஒருவனது குற்றத்தை யவனுக்கு இரகஸ்யமாய்த் தெரிவிப்பது நியாயமே யன்றி அதைப்பலர் அறியும் படி பறையடிப்பது தவறு. பலர் முன்னிலையில் ஓர் மனுஷ்யனை அவமதிக்கும் மனிதர்களிடம் உலகத்தார் வெறுப்பு கொள்ளுகின்றனர். பஞ்ச தந்திரத்திலுஞ் சமர்த்தனா யிருக்கிறவன் பிறரை நிந்திக்கலாதாதென்று கூறியிருக்கறது. ஒருவனுடைய குற்றத்தை யெடுத்துரைப்பது குற்றஞ் செய்தவனுக்கு உபயோகமாயிருக்குமென்ற நியாயஞ் சொன்னாலும் அவ்விதஞ் செய்யும் போது நிந்தனையான சொற்களை வழங்காமல் மரியாதையான பதங்களை உபயோகிப்பது சிலாக்கிய மன்றா? தரையை மெழுகுவதற்கு சாணிச்சட்டி உபயோகமே, ஆயினும் அந்த சாணிச்சட்டியை நாம் ஒரு மூலையில் வைக்கிறோமே யன்றி ஸமீபத்தில் வைத்துக் கொள்ளுகிறதில்லை. அதுபோல் ஒருவனுடைய குற்றத்தையெடுத்துச் சொல்பவன் அந்த ஸமயத்தில் தான் ஏதோ பெரிய காரியஞ் செய்துவிட்டதாயுஞ் சாமர்த்திய பட்டம் பெற்றுவிட்டதாயும் எண்ணிக் கொள்ளுகிறானேயன்றி நாளடைவில் அவன் துர்க்குணி யென்றறிந்து நல்லோர்கள் அவனை நாடுகிறதில்லை.

காலக்ஷேபம் என்றால் பாகவகர்கள் பலவித சரித்திரங்களை ஸங்கீத வாத்தியங்களுடன் நடத்திக் காலங்கழிப்பதென்று பொருள்படும். இத்தகைய காலக்ஷேபங்கள் இப்போது அதிசமாய்விட்டன. இவைகளால் விளையும் பயனைப்பற்றிச் சிறிது கூறுவோம். நமது ஆரிய மதாசாரங்களைச் சிறிதேனு முணராமல் கேவலந் திரவிய ஸம்பாத்யத்திலேயே நாட்டங்கொண்டு பகவத் விஷயமான கிரந்தங்களையும் ஞான நூல்களையும் பார்க்கப் பாக்கியம் பெறாத ஸாமான்யர்கள் மாதமொருமுறையோ அல்லது இருமுறையோ நான்கு முறையோ

ஓர் குறித்த நேரத்தில் குறித்த விடத்தில் கூடி யாரேனும் ஓர் கல்விமனை ஏதனும் ஓர் சரித்திரத்தைச் சொல்லும்படி நேமித்து அவர் மூலமாக புராண இதிகாஸங்களில் சிற்சில பாகங்களை தெரிந்து கொள்ளுவது தான் காலக்ஷேபத்தின் கருத்து. இக்கருத்து சிலாக்கிய மென்பதிற் றடையில்லை. ஆனால் இக்கருத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியவர்கள் வேறு விதமான கெடுதல்களை வருவித்து க்கொள்ளாமல் ஜாக்கிரதையா யிருக்கவேண்டிய அவசியமுண்டு. சிற்றின்பத்தை விர்த்தி செய்யக்கூடிய அனர்கமான பாட்டுகளையுங் கதைகளையுஞ் சொல்லும்படி பாகவதர்களை நிர்ப்பந்திக்கலாகாது. பணம் வாங்கினாலும் உண்மையாகவே ஜனங்கள் கடைத்தேறட்டுமென்னும் நல்ல எண்ணமுடைய சில பாகவதர்கள் மோகத்தை மூட்டும் பாடல்களையாவது சரித்திரங்களையாவது நடத்தமாட்டார்கள். மற்றவர்கள் பணங் கொடுப்பவர்க ளிஷ்டப்படி எல்லா சரித்திரங்களையும் நடத்தத் துணிகின்றனர். காலக்ஷேபத்துக்கு வரும் ஜனங்களில் மூன்றிலிரண்டு பங்கு பாமரர்களாகவேயிருப்பதால் அவர்கள் சுபத்திரா கல்யாணத்தால் காந்தர்வ விவாகஞ்செய்லாமென்று சாஸ்திரமிருப்பதாக நினைக்து இல்லமேகினவுடன் எதிர் வீட்டுப் பெண்ணை பலாத்காரமாய்த் தூக்கிக்கொண்டுபோய் இந்தியன் பினல்கோடு 366 - வது செக்ஷன்படி குற்றவாளிகளாகின்றனர். ஓரிடத்தில் பாகவதர் ஒருவர் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி வேணுகானஞ் செய்ததாயும் அதைக்கேட்ட அடுத்தவனத்திலுள்ள பிராமண ஸ்திரீகள் மதிமயங்கித் தங்கள் புருஷர்களை அலட்சியஞ்செய்து வேண்டிய பலகாரங்களை யெடுத்துக்கொண்டு கிருஷ்ணனிடஞ் சென்றதாகவுங் கூறி இவ்வாறே ஸ்திரீகளெல்லாம் புருஷர்களை பகவத் பக்தர்களாகிய பாகவதர்களிடம் அன்பு பாராட்டவேண்டுமென்றார். இவருடைய காலக்ஷேபத்தால் சில ஸ்திரீகள் கெட்டு துன்மார்க்கத்தை யனுஸரிக்கக் கூடுமன்றா? நமது புராணத்திலுள்ள சில கதைகளுக்கு தத்வார்த்தங்கள் இருக்கின்றன. அவற்றை தெரிவிக்காமல் கண்மூடித்தனமாகச் சில பாகவதர்கள் சொல்லி விடுவதால் அனேக பாமரர்கள் பாப கர்மங்களைச் செய்யத் துணிகின்றனர். இதன்றி, தமிழ், கிரந்தம், தெலுங்கு முதலிய பல பாஷைகளில் நமது புராண இதிகாஸங்கள் அச்சடிக்கப்பட்டுப் புஸ்தக ரூபமாக விருக்கின்றன. ஸங்கீத வாத்தியங்களுடன் பகவானது சரித்திரங்களை கேட்கவிரும்பினால் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், நந்தன் முதலிய பக்தர்கள் ஆழ்வார்கள் முதலிய அடியார்களின் சரித்திரங்களைச் சொல்லக்கேட்பது நன்று. இதன்றி ஸ்திரீ வர்ணனையும் தில்லானாப் பாட்டுகளையும் கேட்பது வீண்காலக்ஷேபமேயாம்.

"ஸர்வம் பிரம்மமயம் ஜெகத்" இதன் அர்த்தத்தைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம், இந்த ஜெகமெல்லாம் பிரம்மமயமே என்பதால் இந்த ஜெகமே பிரம்மம் என்று ஏற்படுகின்றது. பிரம்மம் வேறு, உலகம் வேறன்றாவெனின், அன்றென்றும் உண்மையில் இரண்டும் ஒன்று தானென்றும் அத்வைதிகள் கூறுகிறார்கள். அதெப்படியெனில் கயிற்றரவை உபமானமாகச் சொல்லுகின்றனர். அதை யாராய்ந்து பார்ப்போம்.

"கயிற்றரவு" என்றால் வழியேகிடந்து இருட்டுவேளையில் பாம்பு போல் தோன்றுகிற கயிறு என்றருத்தம். வழியே செல்பவன் அதைக் கண்டு மருண்டு பாம்பென்று கூறுகிறான். அவன் சொல்வது உண்மையா? பொய்யா? அவன் தான்

கண்டபடியான தோற்றத்தைச் சொன்னது பொய்யல்ல உண்மையே. ஆயினுங் கயிற்றைப் பாம்பென்று சாதிப்பது பொய்தான். கயிறு பாம்பு என்னும் இரண்டு வஸ்துக்கள் அப்போதில்லை. கயிறு, ஒன்று தான் உண்டு. அது ஜெசுத்தாகத் தோன்றுகிறது'. கயிறு பாம்பு போல் காணப்படுஞ் சக்தியைப் பெற்றிருக்கிறது. அதுபோல் பிரம்மம் உலகைப்போல் தோன்றுஞ் சக்தியைக் கொண்டிருக்கிறது. இந்த சக்திதான் மாயை. இம்மாயை ம்மாயை ஓர் பொருளன்று. இது ஓர் சக்தியே யன்றி வேறில்லை, பிரம்மமே ஜெகஜீவ பரங்களாய்த் தோன்றுகிறது. மாயையினின்றும் விடுபட்ட அத்வைத ஞானிகளுக்கு பிரம்மம் ஒன்றே ஸத்தியமாகும்.

பிரம்மத்தை நோக்கியவர்களுக்கு ஜெகஜீவ பரங்களில்லையாகும். விளக்கின் வெளிச்சத்தில் கயிற்றைப் பார்ப்போருக்கு பாம்பு தோன்றுமா? தோன்றா தன்றோ? அதுபோல் ஞானமாகிய விளக்கின் வெளிச்சத்தில் பிரம்மத்தைப் பார்க்கிற மகான்களுக்கு உலகந்தோன்ற மாட்டாது. அவர்களுக்கு இவ்வுலகிலுள்ள ஸகல வஸ்துக்களும் பிரம்மமயமாய்க் காணப்படும். இதுதான் ஸர்வம் பிரம்மமயம் ஜெகத் என்னும் வாக்கியத்துக்கு அருத்தம்.

"செத்த பாம்பை யடிப்பது எளிது." உலகத்தில் பலர் ஒருவனை நிந்தித்தால் வலியற்ற பலஹீனனும் அவனை நிந்திக்கத் தொடங்குகிறான். நாலு பேர்கள் சேர்ந்து ஒரு திருடனைப் பிடித்தால் வழியே போகிற ஒவ்வொருவனும் அவனை யடிக்கத் துணிகிறான். ஆரம்பத்தில் திருடனைப் பிடித்துக் கட்டியுருட்டியவன் வீரனேயன்றி பின்னர் ஒருவனை விளாசும் வீணர்கள் வீரர்களல்லர். அதுபோல் எந்தக் காரியத்தையும் புதிதாய் கண்டு பிடித்துச் செய்பவன் புத்திசாலியேன்றி அவனைப் பின்பற்றும் மற்றவர்கள் புத்தி சாலிகளாகார். ஆகிலுங் கல்வி விஷயத்தில் பெரியோர்களைப் பின்பற்றுவது குற்றமாகாது. சிஷ்யனது பிரஸங்கத்தால் குருவின் பெருமை புலப்படுகிறதன்றோ.

“அழையா வீட்டில் நுழையா விருந்து” என்ற ஓர் பழமொழியுண்டு. அதற்கொரு கதை சொல்லுகிறோம். முன்னொரு சமயம் ஓர் தனவான்வீட்டில் விருந்தொன்று நடந்தது. அதற்காக வெகு ஸாமான்கள் வரவழைத்து அனேக சமயற்காரர்களை நேமித்தார்கள் அத்தனவானது கிருகத்தில் அருமையாய் வளர்ந்த நாயொன்று தன் நண்பனாகிய மற்றொரு நாய்க்கு இச்சங்கதியைச் சொல்லித் தன் வீட்டுவிருந்துக்கு வரும்படியழைத்தது. அந்நாய் அவ்வாறே வந்து விருந்துக்காக வைத்திருக்குஞ் சோறு, கறி, பழவர்க்கங்கள் பாயஸம் முதலியவற்றைக்கண்டு வாயில் ஜலம் ஊற சந்தோஷமடைந்து இன்றைக்கு வயிறார இப்பதார்த்தங்களை யெல்லாம் புசிக்கலாமென்று போஜன அறையில் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தது. பார்த்தான் பரிசாரகன், இப்புது நாயை பொத்தினான தடியால். அகன் கால்களைப் பிடித்து அப்படியே தூக்கி ஜன்னல் வழியாக வீதியில் விட்டெறிந்தான். அது வாள்வாளென்று கத்திக் குரைத்து காலை நொண்டிக்கொண்டு முன்னிருந்த விடத்திற்குச் சென்றது மற்ற நாய்களெல்லாம் அதை நோக்கி விருந்து எப்படியிருந்ததென, “அடடா வெகு தரமாயிருந்தது. அங்கே வைத்திருந்த பாயஸத்தை யதிகமாய்க்குடித்து உடம்பு தெரியாமல் மயங்கிப் போனேன். அந்த வீட்டைவிட்டு எப்படி வந்தேனென்று எனக்கே தெரியவில்லை” என்றது. இதைப்

போல் அழையா வீட்டில் நுழையும் விருந்தாளிகள் தாங்கள் பட்ட அவமானத்தை மறந்து வெளியே கௌரவமாய்ச் சொல்லிக் கொண்டாலும் அவ்வாறு நுழைந்து மானங்கெட்டுத் துன்புறுவது பொய்யாகுமா?

பொன்னைக்கொண்டு பலவித ஆபரணங்கள் செய்யப்படுகின்றன. ஒரு ஆபரணம் மற்றொரு ஆபரணத்தினிறும் வேறாகத்தோன்றுகிறதேயன்றி எல்லா ஆபரணங்களும் பொன்னேயன்றி வேறில்லை. அதுபோல் மாயையின் காரியத்தால் ஜெகத்திலுள்ள பொருள்களால் பலவிதமாய்க் காணப்படினும் உண்மையில் அவைகளெல்லாம் ஆத்மஸ்வரூபமேயன்றி வேறல்ல.

இரவில் கட்டையைக்கண்டு கள்ளனென்று மருண்டு பயத்தையடையும் புருஷன் மின்னல் தோன்றியவுடன் அதன் நிஜமான ஸ்வபாவத்தை யறிந்து பயத்தைவிட்டு சந்தோஷ மடைகிறான். அதுபோல் அஞ்ஞானியானவன் உலகிலுள்ள இன்ப துன்பங்கட்குப் பயந்து காலம் தள்ளி ஞானம் அடைந்தபின் உலகிலுள்ள இன்ப துன்பங்கள் பொய்யென்றறிந்து அவைகளால் தனக்குப் பாதகமில்லை யென் றுணருகிறான்.

கடலில் வலித்த ஓர் நண்டு கரையை அடைந்து அங்குள்ள வினோதத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது. பூமியிலிருந்தால் இன்னும் அநேக ஆச்சரியங்களைக் கண்டு திருப்தியடையலாமென்று அங்கேயே இருந்து விட்டது, ஒருநாள் ஓர் நரி அவ்விடத்துக்கு வந்து அக்நண்டைப் பிடித்து வாயிற்போட்டுக் கொண்டு விழுங்குகையில் நண்டு "ஐயோ, நான் இயற்கையாயிருக்க வேண்டிய சமுத்திரத்தை விட்டு தரையில் வலித்தது மூடத்தனம். அதனாலன்றோ என் பிராணனை யிழக்கிறேன்" என்று சொல்லிச் சொல்லிக்கொண்டே இறந்தது.

"உள்ளும் புறமும் ஒன்றாயிருக்க வேண்டும்." எல்லோருடைய முன்னிலையிலும் வேதாந்தம் பேசி பொருளாசையும், பொறாமையும், அகங்காரமும் அதிகமாய்க் கொண்டவன் ஆசாரியனாகான் அவன் ஊரிலுள்ள சாஸ்திரங்களையெல்லாங் கற்றால் என்ன? கற்கக் கசடறக் கற்றபின் நிற்க அதற்குத்தக என்பகை யுணராமல் பொறுமையே குடிகொண்டு பொருளாசையே மேலிட்டு தன்னைப் போன்ற மற்ற ஆசாரியர்களையும் வித்வான்களையும் நிந்தித்துக் காலங்கழித்தால் ஏதேனும் பிரயோஜன முண்டா? ஒருபோதும் உண்டாகாதென்றபடி.

சூரியன் மிகப்பெரிதாயிருக்று ஒளியை வீசியும் உலகத்தை யெல்லாம் பிரகாசிப்பதும் அதன் இருப்பையுங் குணத்தையும் உபயோகந்தையுங் குருடன் அறிகிறதில்லை அது போல் பெரியோர்களின் மகிமையையும் நல்ல பத்திரிகைகளின் பெருமையையும் ஞான நூல்களின் அருமையையும் மதியீனர்கள் அறியமாட்டார்கள்.

வெகு தூரத்திலிருக்கும் புஷ்பத்தின் வாசனையை வண்டுகள் எப்படியோ அறிந்து செல்லுகின்றன அதுபோல் நன்மையைத் தரும் விஷயங்களைப் புத்திமான்கள் எப்படியோ தேடியனுபவிக்கின்றனர்.

விஷத்தையும் அமிர்தத்கையும் ஒரேகாலத்தில் உட்கொள்பவன் புத்திசாலியா? நல்ல ரோடுந்தீயாரோடும் ஒரே காலத்திற் பழகுகிறவன் யோக்யனாவானா? முன்னும் பின்னுமாக ஓர் வண்டியை யிழுத்தால் அதை நம்பி ஏறலாமா? அதுபோல ஒன்றிற்கொன்று விரோதமாயிருக்கும் இரண்டு மதங்களை யனுசரிப்பவன் மூடனே.

பிரம்மமானது ஜெகஜீவ பரங்களாய்த் தோன்றுகின்றது. ஜெகம் என்றால் உலகம். ஜீவன் என்றால் உலகத்தில் வாழும் பிராணிகள். பரம் என்றால் சிருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை நடாத்தும் பிரம்மா விஷ்ணு ருத்திரர்கள். ஜெகஜீவபரங்களெல்லாம் உண்மையில் பிரம்மத்தின் தோற்றமேயன்றி வேறல்ல. இவ்வாறிருக்குப் புறமதத்தார் ஒருவர் பள்ளியில் வாசிக்கும் மாணாக்கர்களை உங்கள் மதத்தில் மூன்று கடவுளிருக்கின்றன. கடவுள் ஒன்றாயிருக்க மூன்று என்று எப்படிச் சொல்லலாமெனக் கேட்கிறார்கள். அதற்கு சமாதானஞ் சொல்லத் தெரியாத இந்துப் பிள்ளைகள் ஆந்தைபோல் விழிக்கின்றனர். இத்துடன் விடுகிறார்களா கிறிஸ்துவர்கள்?

பிரம்பாதானே உலகிலுள்ள எல்லாவற்றையுஞ் சிருஷ்டித்தவர். ஸரஸ்வதியையும் அவர் தானே சிருஷ்டித்தார். அப்படியிருக்க அவர் தம் பெண்ணாகிய ஸரஸ்வதியைத் தாமே கல்யாணஞ்செய்து கொள்ளலாமாவென்னும் அஸந்தர்ப்பமான கேள்வியை கேட்கிறார்கள். முன் கூறியபடி பிரம்மமானது திரிமூர்த்திகளாய்த் தோன்றி சிருஷ்டி, திதி ஸம்ஹாரம் என்னும் முத்தொழில்களை நடத்துகிறதென்று வைத்துக்கொள்வோம். சிருஷ்டிப்பதற்கு வித்தை அவசியம். ஆதலின் பிரம்மமானவர் வேதமாகிய வித்தையைக் கொண்டிருக்கிறார், வித்தையைத்தான் ஸரஸ்வதியென்கிறோம். ஸரஸ்வதியென்பது கையுங் காலுந் தலையுமுள்ள ஓர் ஸ்திரீயைக் குறிக்கவில்லை. வித்கையையே குறிக்கிறது. அவனுடைய நாக்கில் ஸரஸ்வதி யிருக்கிறாளெனின் அவனுடைய நாக்கில் ஸரஸ்வதியென்று 150 - பவுண்டு நிறையுள்ள ஓர் பெண்ணிருக்கிறாளென்று அர்த்தமாகுயா? இப்படித்தான் பிரம்மாவின் நாக்கில் ஸரஸ்வதியிருக்கிறாளென்பதும், பிரம்மாவுக்கு ஸரஸ்வதி மனைவியென்பதும். இந்த தத்வக்தை யறியாமல் கிறிஸ்துவர்கள் அவலக்ஷணமான கேள்விகள் கேட்கின்றனர். இக்கேள்விகள் ஆபாஸமென்பதை அறியாமல் பள்ளிப் பிள்ளைகள் வீணாய்க் கெட்டுப்போகின்றனர். இரக்ஷிக்குந் தொழில் விஷ்ணுவுக்கு முண்டு. இரக்ஷிக்கவேண்டுமானால் பணமிருக்க வேண்டும். பணத்தை லக்ஷ்மியென்கிறோம். இப்போதும் பணக்காரனை லக்ஷ்மி புத்திரன் என்கிறோம். நிஜமாகவே லக்ஷ்மியென்பவள் ஓர்பெண்ணாகவும் அவள் விஷ்ணு எனும் புருஷனுக்கு மனைவியாகவுமிருந்தால் அவ்விஷ்ணுவுக்குச் சொந்தமான வைகுண்டத்தை லக்ஷ்மிபுத்திரர்களாகிய பணக்காரர்களன்றோ பங்கிட்டுக்கொள்வார்கள். ஆதலின் லக்ஷ்மியென்பது தனத்தைக் குறிக்குஞ் சொல்லென்றறிக. இம்மாதிரியே ஸம்ஹாரஞ் செய்வதற்குத் தோள்வலி வேண்டும். அதவாது சக்தி அவசியம். இந்த சக்தியைத் தான் ருத்திரனுக்கு மனைவியென்று சொல்லுகிறோம். மேற் கூறியவற்றால் ஸரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதியென்னும் பதங்களெல்லாம் முறையே வித்தையையும், செல்வத்தையும், சக்தியையுங்குறிக்கின்றனவென்று புறமதஸ்தர்

கண்டுகொள்வராக. முதலில் பிரஸ்தாபிக்கப்பட்ட பிரம்மமே ஸரஸ்வதி, அந்த பிரம்மமே லக்ஷ்மி, அந்த பிரம்மமே பார்வதி, அந்த பிரம்மமே திரிமூர்த்திகளும், அந்த பிரம்மமே சகலமும் ஆனதால் இந்த தத்துவத்தையுணர்ந்து இந்து மாணாக்கர்கள் புறமதஸ்தர்களின் வினாக்களுக்குத் தக்கபடி விடையளிப்பார்க ளென்றெண்ணுகிறோம்.

"நம்பினவன் நலம் பெறுவான்" என்றொரு பழமொழியுண்டு. முற்காலத்தில் புங்கனூர் என்னுங்கிராமத்தில் ஓர் பிராமணனி ருந்தான். அவன் ஒருநாள் விடியற்காலமே எழுந்து ஒரு குயவனுடைய முகத்தில் விழித்தான். அந்த குயவனுக்கு முன் பல் நீண்டு விகாரமாயிருந்தது. பிராமணன் அந்தப் பல்லைப்பார்த்து இனி நமக்கென்ன கேடோ தெரியவில்லை. இந்த குசப்பயல் மூஞ்சியில் விழித்தோம். அதிலும் அவனது நீண்ட முன் பல்லைப் பார்த்திருக்கிறோம். பிரதிதினமுங் கிடைக்கும் அபிசிரவண தக்ஷணையாகிய அரையணா கூட கிடைக்குமோ கிடைக்காதோவென்று ஸந்தேகித்து உபாதானச் செம்பை கையிலெடுத்துக்கொண்டு புறப்பட்டான். ஒவ்வொரு வீட்டிலுஞ்சென்று "ஸ்ரீ கிருஷ்ணாயநம:" என்று சொல்லி அரிசியால் செம்பை நிரப்பி வழக்கம் போல் வீட்டுக்கு வந்தவுடன் அதை ஓர் முறத்தில் கொட்டினான். இரண்டு ரூபாய் அரிசியுடன் கிணுக்கென்று விழுந்தன. பிராமணன் ஒருநாளும் இரண்டு ரூபா சம்பாதித்ததில்லை. ஆதலின் மிகுந்தஸந்தோஷங்கொண்டு இன்றைக்குப் பகவான் நமக்கு கிருபை செய்தார். யாரோ மகராஜி அரிசி போடும்போது இரண்டு ரூபாயையுங் கலந்து போட்டுவிட்டாள். நல்ல பொழுதாக விடிந்தது. அடடா அந்தக் குயவனை வைதோமே அவன் பல்லைப் பார்த்தகாலன்றோ இரண்டு ரூபா கிடைத்தன. இனி அவன் முகத்திலேயே விழிக்கவேண்டும். அதிலும் அவன் பல்லைப்பார்ப்பது தான் ஸ்வாரஸ்யம். இந்த சங்கதியை வேறொருவரிடஞ் சொன்னால் நமக்கு வரும்படி குறைந்து போமென்று மறுநாள் முதல் குயவன் முகத்திலேயே விழித்து வந்தான் பிராமணனைப் பிடித்த அதிர்ஷ்டமோ, அல்லது குயவனுடைய வக்கிர தந்த மகிமையோ, பிரதிதினமும் இரண்டு மூன்று ரூபாய்க்குக் குறையாமல் அவனுக்கு வரும்படி கிடைத்துக் கொண்டிருந்தது.

“உருசிகண்ட பூனை அடுப்பங்கரையைத் தாவும்” என்றபடி பிராமணன் பிரதிதினமும் அதிகாலையில் எழுந்து குயவன் வீட்டுக் கெதிரிலுட்கார்ந்து அவன் பல்லைப் பார்த்துப் பிறகுதான் உபாதானத்துக்குப் போகிற வழக்கம். இவ்வாறிருக்கையில் ஒரு நாள் குயவன் ஏதோ கழனி காரியமாக விடிய ஜாமத்துக்கெழுந்து வெளியே போய்விட்டான். பிராணன் அவனைப்பார்க்க முடியவில்லை. அவன் குயவனைத் தேடிக்கொண்டு எல்லா விடங்களிலும் அலைந்து பகல் 15 - நாழிகை வேளையில் அவனைக் கால் மைல் தூரத்தில் கண்டு அவனது பல்லைப்பார்க்கவேண்டி வெகு வேகமாய் ஓடி வநதான். இதற்குள்ளாக குயவன் ஓரிடத்திலுழுது கொண்டிருக்கையில் ஆற்றங்கரையில் புதையலொன்று தென்பட்டது. அதை யெடுத்து ஒருவருக்குந் தெரியாமல் பத்திரப்படுக்கிக் கொண்டிருந்தான். அந்த ஸமயத்தில் குயவன் பல்லைப்பார்ப்பதற்காக ஓடிவந்த பிராமணன் "அப்பா; கண்டேனடா" என்றான்.

"**"குயவன்பாடு கொஞ்சங் கடகடத்தது"** ஓகோ இந்தப் பிராமணன் நாம் எடுத்த புதையலைக் கண்டுகொண்டான். இனி இவனுக்கு ஏதேனும் பங்கு கொடாவிட்டால் வெளியே சொல்லி விடுவானென்று ஐயா, உமக்கும் இந்தப்புதையலிற் பாதி தருகிறேன், வெளியே சொல்லாதேயும் என, பிராமணன் உடனே ஸங்கதியை யறிந்து ஜாக்கிரதைப்பட்டு புதையலிற் பாதியை எடுத்துக்கொண்டு போய்ச் சேர்ந்தான். அதில் ஆயிரம் ஸவரன்களிருந்தன. இந்தக் கதையால் நம்பினவன் நலம் பெறுவான் என்னும் பழமொழி உண்டாயிற்றாம். ஆதலால் நாம் எல்லோரும் பகவானை பஜித்தால் நன்மைகிடைக்குமென்ற முழுநம்பிக்கையைக்கொள்ளவேண்டும்,

"சுகமுந் துக்கமும்" ஓர் தனவான் வீட்டில் கழுதைக்குப் புல் போடாமல் இரண்டு காலையுங்கட்டி வெளியே துரத்தி. வெள்ளாட்டுக்கு மட்டும் புல்லையுந் தழையையும் ஏராள மாகப்போட்டுக் கொழுக்க வைத்தனர். அதைக் கண்டு அவ்வாடு இறுமாப்படைந்து 'ஏ, கழுதையே, நீ நமது எஜமானுக்கு சுமையெடுக்கிறாய். நன்றாய் உழைக்கிறாய். உனக்கு அவர் தீனிபோடுகிறதில்லை. நீ கிட்டவந்தால் உன்னை அடித்து விரட்டுகிறார். என்னை அவரே யழைத்து உடம்பெல்லாந் தடவிக்கொடுக்கிறார். எனக்கு வேண்டிய புற்களைப் போடுகிறார். வேலை யிடுகிறதேயில்லை நான் ஜென்மாந்திரத்தில் புண்யஞ்செய்தேன் இப்போது சுகமடைகிறேன். நீ போன ஜென்மத்தில பாபஞ்செய்தாய் இப்போது துன்ப மடைகிறாய் என்றது. அதைக்கேட்ட கழுகை ஆமப்பா, நீ சொல்லுகிறது ஸரிதான். ஆயினுஞ் சுகமுந் துக்கமும் மாறிமாறி வரும். கொஞ்சநாள் பொறுத்துக்கொண்டிரு வென்றது. சிலநாள் சென்றபின் பிடாரிகோயிலில் ஓர் திருவிழ நடந்தது. அதற்காகப் பலி கொடுக்க வேண்டி ஆட்டை யவிழ்க்க வந்தார்கள். அதன் கண்ணீர் ஆறாக வோடிற்று. அப்போது கழுதை 'அதை நோக்கி ஏனப்பா அழுகிறாய்? நீ முன் சுகத்தையனுபவித்தாய். இப்போது தக்கானுபவிக்கிறாய். எனக்கு முன் துக்கமாயிருந்தது. இப்போது உன் கதியைப் பார்த்தவுடன் அது நீங்கிச் சுகம் உண்டாயிற்று' என்றது. ஆதலின் இன்பத்துக்குத் தக்கபடி துன்பமு மிருக்குமென்பதை தனவந்தர்களறிந்து சர்வப்படாமலும் ஏழைகளை ஹிம்ஸியாமலு மிருக்க வேண்டும்.

ஒரூரில் பொது நன்மையான காரியார்த்தமாய் ஒருவரை வரி கொடுக்கும்படி மற்றவர்கள் நிர்ப்பந்தித்தனர். அவர் நான் கொடுக்கவேண்டிய காரணமென்னவென நீர் இந்தவூரில் குடியிருப்பதால் வரி கொடுக்கத்தான் வேண்டுமென்றார்கள். அவர் உங்களால் எனக்கு வருஷந்தோறும் இருபது முப்பது ரூபா செலவாகிறது. நீங்களில்லாவிட்டால் நான் வஸ்திரமின்றி உபாயமாகக் காலங்கழிப்பேன். உங்களாலன்றோ எனக்கு துணிச் செலவு நேரிடுகிற தென்றார்.

"மகம்மது, சுல்தான், போப்" ஆகிய இவர்கள் தங்கள் பிரஜைகளுக்கு ஒவ்வொரு கட்டளை யிட்டிருக்கிறார்கள். அதாவது மகம்மது தமது சிஷ்யர்கள் சாராயங்குடிக்கக் கூடாதென்று உத்தரவு செய்திருக்கிறார். சுல்தான் தமது தேசத்தில் கல்வியை பரவச் செய்யவில்லை, போப் பாதிரிகளல்லாத மற்றவர்கள் வேதபுஸ்தகத்தைப் படிக்கக் கூடாதென்றார். இவைகளால் நாமறிவ தொன்றுண்டு.

அதாவது மேற்கூறியவற்றை மிகமிஞ்சி உபயோகிப்பதால் தங்களுடைய கருத்து நிறைவேறாமற் கெட்டுப்போ மென்பதே. மகம்மது தம்மார்க்கத்தை சண்டைபோட்டே ஸ்தாபிக்க வேண்டுமென்னுங் கருத்தைக்கொண்டதால் சாராயம் அருந்துவதால் பலம் குன்றுமென்றும் ஜெயம் கிடைப்பதருமையென்றும் அதையருந்தக் கூடாதென்றும் விதியேற்படுத்தினார். சுல்தான் தம் நாட்டுப் பிரஜைசள் படிப்பாளிகளா யிருந்தால் தம் இஷ்டப்படி நடத்த முடியாதென்று படிப்பு வேண்டா மென்றனர். போப் தம்முடைய மடாதி பத்யம் நிலைத்திருக்க வேண்டுமானால் மூட பக்தி போய் விடுமென்றறிந்து வேதத்தைப் பாதிரிகள் மட்டுமே படிக்கலாமென்று கட்டளையிட்டார்.

"புத்திமானுக்கும் மூடனுக்கும் என்ன வித்யாஸம்?" புத்திமானுங் குற்றஞ்செய்கிறான் மூடனுங்குற்றஞ் செய்கிறான். புத்திமானுடைய குற்றம் அவனுக்கு மட்டுந்தெரியும். உலகத்தாருக்குத் தெரியாது. மூடன் செய்யுங்குற்றம் அவனுக்குத் தெரியாது, உலகத்தாருக்குத் தெரியும். இது தான் இருவர்களுக்குமுள்ள வித்தியாஸம்.

"காடு வாவா என்கிறது வீடு போபோ என்கிறது" என்று சில கிழவர்கள் பிறரிடம் பேசுவார்கள். ஐயோ என்னை எமன் கொண்டு போனால் நல்லது என்பார்கள். அந்த எமன் பிரத்யக்ஷமாக வந்தால் அப்போது உள்ளே ஓடிப்போய் கதவை முடிக்கொள்வார்கள். முன்னொரு சமயம் கூலிக்காரக் கிழவனொருவன் தலையில் பெரிய மூட்டையைத் தூக்கிக்கொண்டு வெயில் வேளையில் நடந்து போனான், மிகுந்த அலுப்பினாலுங் களைப்பினாலும் அந்த மூட்டையை யிறக்கி 'ஐயோ, எமனே நீ வரமாட்டையா' என்றான். அதைக்கேட்டு எமன் இதோ வந்து விட்டேனென்று அக்கிழவனுக்கெதிரில் பிரத்யக்ஷமாகி ஏன் என்னைக் கூப்பிட்டாய். உனக்கு என்ன வேண்டும் என்றான். கிழவன் பயந்து எனக்கு ஒன்றும் வேண்டாம். இந்த மூட்டையை என் தலையில் ஏற்றிவை, இவ்வுபகாரஞ் செய்தபின் நீ போகலாம் என்றான். எமன் சிரித்துக்கொண்டு அவ்வாறே மூட்டையை அக்கிழவன் மேல் ஏற்றித் தான் மறைந்து போனான். இக்கதையால் யாருக்கும் இறந்துபோக மனம் வராதென்பதை யறிந்து கொள்ளுக்றோம்.

"சிவ, சிவ, கிர்ஷ்ண, கிர்ஷ்ண," என்னும் பதங்கள் ஸர்வபாபங்களையும் போக்கடிக்கும் வல்லமையைப் படைத்துள்ளன. மகா பாபங்களுக்கு விதித்திருக்கும் பிராயச்சித்தம் இரண்டுதரஞ் சிவ, சிவ என்று சொல்வதே. இவ்வளவு பெருமை வாய்ந்த சிவநாமத்தை ஸதா ஸ்மரணை செய்வோர் சீக்கிரத்தில் ஞான ஸம்பத்தை யடைவர்.

"விருப்பம் வெறுப்பு" இரண்டுமில்லாதிருத்தல் நன்று. ஏனெனில் சுகத்தால் விருப்புத் துக்கத்தால் வெறுப்பும் உண்டாவதாலும் சுகத்தின் நிழலே துக்கமென்று மேலே கூறியிருப்பதாலும் இந்த ஜெகத்திலுள்ள எந்தப் பொருளிலும் ஞானிகள் விருப்பம் அல்லது வெறுப்பைக் கொள்ளுகிறதில்லை. அவ்வாறு இரண்டையுங் கொள்ளாதிருப்பதால் என்ன பயன் உண்டு? இதற்கு ஒருதாரணங் கொடுக்கிறோம். நம்முடைய தேகத்திலுள்ள நாடிகள் சுகத்தையுந் துக்கத்தையும் நமக்குத்

தெரிவிக்கின்றன.மிருதுவான வஸ்து நமது கையிற் பட்டால் சுகமுண்டாகிறது. கரடுமுரடாயிருக்கும் வஸ்துபட்டால் துக்கமுண்டாகிறது. இவ்விரண்டையும் ஸ்பரிசித்தவுடன் கையிலுள்ள நரம்புநாடிகள் மேற்கூறிய இருவகை வஸ்துக்களின் குணத்தையும் மூளைக்குத் தெரிவிக்கின்றன. ஒரே நாடியானது சுகத்தையும் அறிவிக்கிறது. துக்கத்தையு மறிவிக்கிறது, கை மரமரத்துப்போனால் சுகமுந் தெரிகிறதில்லை. துக்கமுந்தெரிவிக்கிறதில்லை. அதுபோல் சுக துக்கங்க ளிரண்டையும் அடையாதிருக்க வேண்டி எந்த வஸ்துவிலும் விருப்பம் வெறுப்பு ஆகிய இரண்டையும் கொள்ளாதிருப்பது நன்று.

"உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்" என்பது ஓர் சிறந்த பழமொழி. இதை நிரூபிக்க ஓர் கதை சொல்லுகிறோம். வெகு நாளைக்கு முன் பிராஞ்சு தேசத்தில் லூபி என்ற ஓர் தனவானி ருந்தான். அவன் சிற்றின்பத்திலேயே ஸகல ஸொத்துகளையுஞ் செலவிட்டு வருங்கால் பாரிஸ் நகரத்தில் சிங்கார வனத்துக்குள் உலாவிக் கொன்டிருந்த அழகிய ஓர் ஸ்திரீயைக்கண்டு மோகங்கொண்டான். அவளுடன் சேரவேண்டு மென்னும் விருப்பம் லூயிக்கு அதிகமாயிற்று. ஒருவருமில்லாத ஸமயத்தில் அவளருகே சென்று தான் கொண்ட எண்ணத்தைத் தெரிவித்தான். அம்மாது ஓரிரவு தன்னுடன் இருக்கவேண்டுமானால 500 - பவுண்டு தர வேண்டுமென்றாள். லூயிக்கு 500 பவுண்டு லக்ஷியமில்லை. ஆகையால் உடனே அந்தத்தொகையை அவளிடந் தந்து மேல்விலாஸத்தைக் கேட்டு கொண்டு தன்னிருப்பிடஞ் சென்றான். அஸ்தமனமானவுடன் சிறந்த ஆடைகளை யணிந்து மிகுந்த குதூகலத்தோடு ஒய்யாரமாக வீதியில் கையைவீசி நடந்தி மேற்கூறிய பெண்மணியின் வீட்டுக்குப்போனான். அவள் வெகு மரியாதையாய் லூயியைத் தன படுக்கையறைக்குள் அழைத்துப்போய் நல்ல கீர்த்தனைகளைப் பாடிப் பலவித ஸம்ப ஷணைகளால அவனுக்கு ஸந்தோஷத்தை யுண்டாக்கிக் கடைசியில் தன் ஆடையாபரணங்களைக் களைந்து வலது கையி னுதவியால் இடது கையைக் கழற்றிவைத்தாள். லூயிக்கு ஆச்சரியமுண்டாயிற்று. இவளுக்கு ஒரு கைதானு ண்டென்பதும் மற்றொருகை போலிக்கை என்பதும் இவனுக்கு முன்னாடி தெரியாது. ஷெயாள் ஒரு கண்ணைக் கழற்றிவைத்தாள். லூயிக்கு வெறுப்பு உண்டாகத் தலைப்பட்டது. பிறகு அம்மாது ஒரு காலைக் கழற்றிவைத்தாள். ஐயோ இந்த முண்டத்தின் பேரில் நாம் ஆசை கொண்டோமேன்யறு லூயி துக்கித்தான். கைநொண்டி, கால்நொண்டி, கண்பெட்டை இவ்வளவு அவலக்ஷணமுள்ள ஸ்திரீயைக் கண்ணால் பார்ப்பதே கஷ்டம். லூபி அவளுடன் எவ்விதம் இணங்கியிருப்பான். அவன் ஒரே ஓட்டமாக ஓடி தன் வீட்டை யடைந்தான். தூக்கம் வரவில்லை, அப்போது அடடா வெளிப்பகட்டைக்கண்டு ஏமாந்து 500 - பவுண்டு கொடுத்தோமே. உற்றுப்பாராத தோஷத்தால் இத்தனை நஷ்டமுண்டாயிற்றென்று எண்ணிக் கொண்டான். இந்த லூயியைப்போல் பிரஜைகள் பிரபஞ்சத்தில் ஏதோ சுகமுண் டென்று நினைத்து வீண் பிரயாஸைப் படுகின்றனர். நன்றாக ஆராய்ந்து பார்த்தால் ஐம்புலன்களாலும் அனுபவிக்கப்படுஞ் சுகம் போலி சுகமேயன்றி உண்மையான சுகமல்ல. லூயிக்கு எவ்வாறு வெறுப்புண்டாயிற்றோ அவ்வாறே இப்பிரபஞ்சத்தின் உண்மையை யறிந்த ஞானிகளுக்கு இதிலுள்ள சிற்றின்பங்கள் வெறுப்பாகத்தோன்றும்.

ஏகாக்கிரசித்கமாயிருக்க வேண்டிய பெரியோர்கள் யோகாப்பியாஸஞ் செய்கின்றனர். மனது சலிக்காகல் ஒரே நிலையில் நின்றாலன்றி நம்மை நாம் காண முடியாது. நம்மை நாம் இப்போது காணவில்லையாவெனின் நமது கண் நம்முடைய சரீரத்தைப் பார்க்கிறதேயன்றி நமது கண் நாமாகிய ஆத்மாவைப் பார்க்கவில்லை. ஆத்மாவை தரிசிக்க இவ்வூன் கண்ணால் முடியாது. நமது சரீரம் நாமல்ல. சரீரத்கை நாம் என்று நினைப்பது நாஸ்திகர்களின் காரியம். ஆஸ்திக சிரோமணிகள் யாவருஞ் சரீரத்தை நாம் என்று நினையார்கள். காற்றினால் அலைகளுண்டாகும் போதுங் கலங்கி யிருக்கும் போதுந் தண்ணீரில் நம்முடைய நிழலை நாம் காணமுடியாது. ஆதலின் சித்தவிர்த்தியின்றி ஒரே நிலையில் மனம் நிற்கும் போது ஆத்மாவைத் தரிசிக்கலாம் யோகமானது சித்தத்தைப் பல விகாரங்களை யடைய வொட்டாமல் தடுக்கின்றது.

வெளியேயுள்ள பொருள்களைப் பிடிப்பதற்கு மனம் ஓர் கருவியாகிறது. இங்தப் பத்திரிகையை யெடுத்துக் கொள்வோம் பத்திரிகை யென்ற வியவகாரத்தில் இது வெளியேயில்லை. வெளியே யிருப்பது இன்னதென்று தெரியாது. அதை யறியவும் முடியாது மனதுக்கு ஓர் யோசனை யுண்டாக்கி அதனால் அது அடிபட்டு உடனே அவ்வடியை வெளியே தள்ள பத்திரிகையென்னும் ரூபமுண்டாகிறது. ஓர் கல்லைக் கிணற்றில் போட்டால் கிணற்றுத் தண்ணீருக்கு அடிகிடைக்கிறது. அடியைப்பட்டுக் கொண்ட தண்ணீர் அலைரூபமாகக் கல்லையடிக்கிறது. உண்மையான ஜெகந்தான் மனதிலிருந்து வரும்படியான பிரதி அடிக்கு ஸந்தர்ப்பம் அல்லது காரணம். பத்திரிகை ரூபம், புள்தகரூபம், யானைரூபம் ஆகிய ரூபங்கள் ஒன்றும் வெளியேயில்லை. வெளியேயுள்ள உலகத்தால் மனதிற்கு ஓர் அடிகிடைத்து அதன் பிரதி அடி வெளியே வருவதைத் தான் நாம் காண்கிறோம்.

"தைரியமே பிரதானம்" ஸ்விட்ஸர்லாண்டு என்னும் மலை நாட்டில் திருடர்களதிகம் அத்தேசத்தில் அஞ்சாத தீரராகிய ஸ்காட் என்னும் ஓர் பிரபு விருந்தார் இவர் ஓர் நாள் குதிரை வண்டியில் காட்டு மார்க்கமாய்ச் சவாரி போகையில் ஓர் திருடன் வெகுதைரியமய் வண்டியிலிருந்த பலகணிவழியாய்ச் சிறு துப்பாக்கி யொன்றை நீட்டி ஸ்காட்டன் முகத்தக்கெதிரே பிடித்து "ஓய், நீர் உம்மிடமுள்ள பணத்தைத் தருகிறீரா அல்லது இந்தத் துப்பாக்கியால் சுடட்டுமா? திருடனிடம் நீர் அகப்பட்டுக் கொண்ட தில்லை யென்று வீரம் பேசிக்கொண்டீரே, இப்போதென்ன சொல்லுகிறீர் என்றான். தனவான் தம்முடைய சொக்காய்ப் பைக்குள்ளிருக்கும் பணத்தை யெடுப்பதுபோல் கையைப் போட்டு "அடே, உன்பின்னாலிருப்பவனாலன்றா நான் அகப்பட்டுக் கொண்டேன். இல்லாவிட்டால் உன்னிடம் நான் அகப்படுவேனா" வென்றார். திருடன் திடீரென்று திரும்பிப் பார்த்தான். தக்ஷணமே தனவான் பையிலிருந்தெடுத்த துப்பாக்கியால் ஷை திருடனைச் சுட்டுக்கொன்றார். இந்தக் கதையில் வரும் திருடன் தன் பின்னால் யாரோ விருப்பதாக பிரமித்து திருமபிப் பார்த்து பிராணனையிழந்தது போல் அவிவேகிகள் வெளியே சுக மிருக்கிறதென் றெண்ணி அங்குமிங்கு மலைகின்றனர்.

ராஜஸ்தானம் என்னுந் திவ்யதேசத்தில் ஓர் பெரியவரிருக்கிறார். அவர் எப்போதுஞ் சிறுபிள்ளைகளிடம் பிரீதி கொண்டு அவர்கள் கேட்குங் கேள்விகளுக்குத்

தக்க விடையளிப்பார். எல்லோரையுஞ் சன்மார்க்கத்தில் கொண்டு வந்து தெய்வ பக்தியைப் புகட்ட வேண்டுமென்பது அவரது முக்கியகருத்து. ஒருநாள் நீலகாந்தன் என்னும் ஓர்பக்தன அவரிடஞ்சென்று "ஜனங்கள் கடவுளைத் தங்களுக்குப் பரமபிதாவென்றும் ரக்ஷகரென்றுஞ் சொல்லுகிறார்கள். ஆயினும் அவர் விஷயமாய்ப் பணஞ்செலவிட மட்டும். மனமிசைகிறதில்லை. இதற்கென்ன காரணம்?" என்றான். அதற்கு அவர் சொல்லுகிறார். அப்பா! கடவுள் வஞ்சனை யில்லாதவர். ஸகல வஸ்துக்களையஞ் சிருஷ்டித்து அவைகட்குப் பணம் வாங்காமல் இனாமாக ஜனங்களுக்குக் கொடுக்கிறார். அதனால் ஜனங்கள் அவரிடம் நன்றி பாராட்டுகிறதில்லை. சூரியனைச் சிலநாள் ஒளித்து வைத்தால் பிரஜைகள் வேண்டிய பணங்கொடுத்துப் பெற்றுக் கொள்வார்கள். காற்றையும் நெருப்பையும் மறைத்து வைத்தால் கலப்பணந்தருகிறோமென்று கதறுவார்கள். பகவான் அவ்வாறு செய்யாமல் யாதொரு வஞ்சனையுமில்லாமல் தாம் படைத்த எல்லாப் பொருள்களையும் மனிதர்களுக்கு இலவசமாய்க் கொடுத்து விடுகிறார். அதனாலன்றோ மாந்தர்கள் நன்றி கெட்டுப் போகின்றனர், என்றார். அது போல் உபயோகமான எந்தப் பொருளையும் இலவசமாய்க்கொடுப்பதால் பிறரை நன்றி யற்றவர்களாய்ச் செய்வதுடன் அப்பொருளின் பெருமையையுங் குறைத்து விடுகிறோம். இதனால் தர்ம்ச்ஞ் செய்யப்படாதென்பது கருத்தல்ல. தர்மத்தைச் செய்யவேண்டிய தவசியமே. அதை யாருக்குச் செய்யவேண்டியதென்பது அதி அவசியம். அதை மறந்து கடவுளைப் போல் எல்லோருக்குந் தர்மஞ்செய்வது கூடாது. ஏனெனில் அவருக்கும் நமக்கும் அனேகவித்யாஸங்களுண்டு. நன்றி கெட்டவனைத் தண்டிக்குந்திறமை அவருக்குண்டு. நமக்கு அதில்லை. சூரியனக் கொடுத்த சுடலையாடியை ஸ்தோத்திரஞ் செய்யாத பாதகனது கண்களைக் கடவுள் பொட்டை யாக்குகிறார். அவன் தன் கண் திறந்து பிரகாசமடைய வேண்டுமானால் சூரிய நமஸ்காரஞ் செய்யவேண்டும். எதேஷ்டமான தானியங்களை யளித்ததற்காகப் பரமனிடம் நன்றி பாராட்டாத பாமரனுக்குக் குன்மாதி வியாதியைக் கொடுக்கிறார். அவன் சோறு உண்ண முடியாமல், தவிக்கிறான். தண்ணீரையருளிய தயாநிதியை மறக்கும் மனிதனைத் தண்டிக்குமாறு கோடைகாலத்தை வருவித்து ஜலத்தை வற்றச் செய்கிறார். அப்போது ஆ, சாமி சாமி! தண்ணீரில்லையே யென்று வருண ஜெபஞ் செய்கிறான். இவ்விதமான சக்தி பகவானுக்கு உண்டு, நமக்கில்லை. ஆதலின் நாம் உபயோகமான பொருளை அயோக்கியர்களுக்கு விலையின்றிக் கொடுப்பது பெரும்பிசகேயாம்.

தன் கடமையைச்செய்யும் வேலைக்காரன் நம்மைக் கண்டு எழுந்திருக்காதது பிசகல்ல. அதற்காக நாம் அவனிங் கோபங்கொள்வது அறியாமையே. முன்னொரு சமயம் ஒரு பிரபுவினிடம் மாட்டுக்காரப் பையனொருவன் பசுங்கற்றின் கழுத்தில் கயிற்றைக் கட்.டி இரண்டு கையாலும் இழுத்து வந்தான். அதனைக்கண்ட எஜமானன் ஏன் தனக்கு கும்பிடு போடவில்லையென்றார். அதற்கு அச்சிறுவன் இந்கக்கன்றை நீங்கள் பிடித்துக் கொண்டால் தங்களை இரண்டு கைகளையும் உயரத் தூக்கிக் கூப்பிக் கும்பிடுபோடுவதில் ஆக்ஷேபமில்லை யென்றான். இது சரிதானென்று பிரபுவின் மனதிற்பட்டது.

வருத்தமில்லாமையே இன்பமென்பர். வெகு சிரமப்பட்டுகற்களை யெறிந்து கைகளோய்ந்து பின்னர் விழுந்த ஓர் மாங்காயைத் தின்பதே இன்பமெனப்படுகிறது. வெகுதூரஞ் சுமை தூக்கி அலைந்து திரிந்தவன் சுமை தாங்கிக்கல்லில் மூட்டையை யிறக்கிச் சிலநேரம் அப்படாவென்று இளைப்பாறுகிறான். இதுவும் ஒருவித இன்பம். இன்பமென்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாய்க் காணப்படுகிறது. ஒருவன் சங்கீதம் கேட்பதில் இன்பங் கொள்கிறான். மற்றொருவன் சுராபானஞ் செய்வதில் இன்பங்கொள்ளுகிறான். இவ்வாறு இன்பமானது பலவகைப் பட்டிருப்பதால் விவேகிகள் அதைத்தவிர்த்து ஞானத்தை பிரதானமாக நாடுகிறார்கள்

"அரியும் அரனும் ஒன்று" ஒருவர் முராரி, மற்றொருவர் புராரி; ஒருவர் ஸ்ரீதரர், ஒருவர் கங்கதரர்; ஒருவர் ரமாபதி, மற்றொருவர் உமாபதி. பெயர்களில் கூட அனேகமாய் வித்தியாஸமின்றி யிருத்தலால் பக்தர்கள் யாவரும் ஒருவரே டொருவர் சண்டை போடாமல் தத்தந் தெய்வங்களைப் போற்றிக் கடைத்தேக்கடவர்;

"துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம்" என மூன்று மதங்களிருக் கின்றன. அனேகமாய் மாத்வர்களெல்லாந்துவைதிகள், ஸ்மார்த்தர்களெல்லாம் விசிஷ்டாத்வைதிகள் அவ்வாறிருந்தும் வேதாந்திகள் என்னும் பெயர் அத்வைதிகளுக்கே பெரும்பாலும் வழங்குகிறது. இதற்குக் காரணம் யாது? அத்வைதிகள் தங்கள் மதக்கோட்பாடுகளுக்கு அனேகமாய் வேதத்தையே ஆதாரமாகக் கொள்ளுகின்றனர். துவைதிகள் கடவுளானவர் ஜீவாத்மா, பிரகிருதி ஆகிய இரண்டினின்றும் வேறாயிருக்கிறார். ஜீவாத்மா, பிரகிருதி, கடவுள் ஆகிய மூன்றும் லயத்தையடையா. ஆனால் பிரகிருதியும் ஆத்மாக்களுக் தோன்றி மாறுகின்றன. கடவுள் மட்டும் மாறுகிறதில்லை. அவருக்கு சரீரமில்லை. குணங்களுண்டு ஸத்குணங்களெல்லாம் அவரிடம் பொருந்தியிருக்கின்றன. துர்க்குணமென்பது சிறிதேனுமில்லை. இவ்வுலகங்களை ஆக்கியளிப்பவர் அவரே. அவர் இரக்கமள்ளவர். நீதி தவறாதவர், ஸர்வோத்தமர், ஸர்வ வல்லமையுள்ளவர். அவரிடம் நாம் போகலாம்,. அவரை ஸ்தோத்திரஞ் செய்யலாம். அவரை நேசிக்கலாம். அவரும் நம்மை நேசிப்பார். அவர் பிரகிருதியினின்றும் உலகத்தைச் சிருஷ்டிக்கிறார். மண்ணைக்கொண்டு குடத்தைச் செய்வது போல் ஈசுவரன் பிரகிருதியினின்று உலகத்தையுண்டாக்குகிறார் இந்தப் பிரகிருதியானது அனுக்கூட்டங்களாலாகியது. ஈசுவரனுடைய ஸங்கல்பத்தால் இவ்வணுக்கள் ஒன்று சேர்ந்து பிரகிருதியாகிறது என்கிறார்கள். அத்வைதிகள் அது பிசகென்று கூறுகின்றனர். அணுவென்பது பகுக்கப்படாதது. அகல நீளாற்றதெனின் சூன்யமாயுள்ள அவ்வணுக்கூட்டங்கள் ஒன்று சேரின் பெருஞ்சூன்யமாகுமேயன்றி, பிரகிருதியாகவும் உலகமாகவும் ஆகுமா? ஒரு பூஜ்யத்துடன் ஆயிரம் பூஜ்யங்களைச் சேர்த்தாலும் ஏதேனும் பயனுண்டா? பெருந்தொகையாமா? ஆதலின் துவைதிகள் கூறுவது நியாயத்திற் கொவ்வாதது என்று அத்வைதிகள் ஆக்ஷேபிக்கின்றனர். உலகத்திலுள்ள அனேகர் துவைதிகளாகவே யிருக்கின்றனர். ஸாதாரணமாக மனுஷ்யன் பகவானை ஓர் மனுஷ்ய ரூபமாகப் பாவிக்கக் கூடுமேயன்றி உருவற்றது, குணாதீதம் என்று பாவிக்கமுடியாது. மிகுந்த புத்திசாலிகள் மட்டுமே அத்வைக உண்மைகளை யறிய முடியும்.

"**அத்வைதிகளின் மதம் யாது**" அத்வைகள் என்ன சொல்லுகிறார்கள்? கடவுள் ஒருவருளரேல் அவரே இவ்வுலகத்திற்கு காரணராயும் இவ்வுலகமாயுமிருக்க வேண்டும். அவரே சிருஷ்டிப்பவர். சிருஷ்டிக்கப்படுவோரும் அவரே. அவர் தான் இவ்வுலகமும். அது எப்படியிருக்கக்கூடும்? சூக்ஷ்மரூபியும் பரிசுத்தருமான கடவுள் இவ்வுலகமாக எப்படி ஆவார். ஆம் அவ்வாறே ஆகிறார். அஞ்ஞானிகளாகிய நாம் பார்க்கும் இவ்வுலகம் உண்மையில் இல்லை. உலகம் பொய். நீ, நான், இதரவஸ்துக்கள் ஆகிய பொருள்களெல்லாம் என்ன? எல்லாம் மாயையின் தோற்றங்கள். ஒன்று தானுண்டு. அது அகண்டமானது. எப்போது மிருப்பது. அதில் நாம் பற் பல ஸ்வப்னங்களைக் காணுகிறோம். அதுதான் ஆத்மா. அது மூலமாகவே நாம் இல்வுலகத்தைப் பார்க்கிறோம். உண்மைப் பொருள் அஃதொன்றே. அது தான் நாற்காலி, அதுதான் சுவர், அதுதான் பூமி, சூரியன், சந்திரன், நக்ஷத்திரம் ஆகிய ஸகல பொருள்களும். அதுவே நாமமும் ரூபமுந்தான் பொருள்களை வித்யாஸப்படுத்துகின்றன. அவ்விரண்டையும் நீக்கிப் பார்த்தால் எல்லாம் ஒன்றெனத் தெரியவரும்.

ஆத்மா ஆணுமன்று பெண்ணுமன்று. ஒவ்வொரு வஸ்துவினின்றும் நாமத்தையும் ரூபத்தையும் பிரித்துப்பார். அப்போது ஆண் பெண் என்ற வியவகாமிராது. பேதந் தோன்றுவதெல்லாம் மாயையின் காரியமே யல்லாது வேறல்ல. நாமத்கையும் ரூபத்தையும் நீக்கிப்பார்த்தால் ஸகலபொருள்களும் ஒன்றெனவே தோன்றும், இரண்டென்னும் வியவகாரமேயில்லை. ஆத்மா ஒன்று தானுண்டு. மற்ற ஜெகஜீவ பரங்களெல்லயங் சொற்பனம். நானும் நீயும் ஒன்று தான் பிரகிருதியுமில்லை சிருஷ்டிப்பவருமில்லை, உலகமுமில்லை, பரப்பிரம்பம் ஒன்று தானுண்டு. அதினின்றும் நாம ரூபங்களால் பற்பல தோற்றங்களுண்டாகின்றன. அவ்விதத் தோற்றங்களும் ஞாளிகளுக்கில்லை. சர்வஞ்ஞராகய பிரம்மத்தைநாம் அறியமுடியுமா? உன் ஆத்மாவை நீ எப்படி காணலாம். (உன் கண்ணை நீ எப்படி பார்க்கலாம், கண்ணாடியில் அதன் பிரதி பிம்பத்தைச் கண்டு தெளியலாம் அது பேல் பரப்பிரம்மபத்தினிருப்பை அதன் பிரதி பிம்பமாகிய உலகத்தால் அறியலாம், ஆனால் பிரதி பிம்பம் உண்மையோ? இல்லை. அது போல உலகமும் உண்மையல்ல. கண்ணாடியில் நாம் பிரதியிம்பத்தைப் பார்ப்பது பொய்யோ? அல்ல அதுபோல் நாம் உலகத்தைப் பார்ப்பதும் பொய்யல்ல, ஆதலின் உலகம் மெய்யுமல்ல, பொய்யுமல்ல. அது இன்னதென்று சொல்ல முடியாதது. இதைத்தான் அநிர்வசனீபமென்று பெரியோர் கூறுகின்றனர். ஆத்மா பரிசுத்தமானது. பரிசுத்தமான கண்ணாடியில் கழுதையின் ரூபங் கழுகையாகவே தோன்றும்!

அதுபோல் ஆத்சா ஒன்றாயினும் வியவகாரதசையில் மனிதர்களெல்லாந் தங்கள் கர்மங்களுக்குத் தக்கபடி நல்லவர்களாயுங் கெட்டவர்களாயுங் காணப்படுகிறார்கள். தன்னை பிரமமென்று அறிவதே மோக்ஷம் என்று அத்வைதிகள் கூறுகின்றனர் இதனால் துவைதமதம் பிசகென்று அத்வைதிகளும் விசிஷ்டாத்வைதிகளும் சொல்லவில்லை. துவைதமதம் உண்மையைக் கண்டு பிடிப்பதற்கான மார்க்கம் ஆனால் அத்துடன் நின்று விடுவது மட்டும் பிசகு முதலில் துவைதத்தில் ஆரம்பித்துப் பின்னர் விசிஷ்டாத்வைதயாகி முடிவில் அத்வைதியாக வேண்டும். ஆதலின் எல்லா மதங்களும் உண்மைப் பொருளை அறியும்

மார்க்கங்களென்று உணர்ந்து எதையும் வெறுக்காமல் நல்ல ஞானத்தைத் தரும்படி பகவானை போற்றக் கடவோம்.

"**பொறாமை பொல்லாது**" மனிதர்களிலும் விலங்குகளிலும் பொறாமையுடைய பிராணிகள் சுகமடைகிறதில்லை. ஒருவனது வாழ்க்கையையும் ஆக்கத்தையுங் கண்டு பொறாடைப் படுவதால் நமக்கே பெரிய துன்பத்தை விளைவித்து சொள்ளுகிறோம். முன்னாளில் வடாரண்யம் என்னும் காட்டிலுள்ள ஓர் புலத்தில் உச்சை சிரவம் என்னுங் குதிரை மேய்ந் கொண்டிருந்தது. வெகு நாளாய் அப்புலத்தில் வேறு பிராணிகள் வராததால் அது ஒன்றே அங்குள்ள புற்களை யெல்லாந்திந் தின்று வயிற்றை நிரப்பிக் கொண்டு சுகமாய் வாழ்ந்து வந்தது. அவ்வாறிருக்கையில் எங்கிருந்தோ ஓர் ஆண் மானொன்று வழிதப்பி அப்புலத்தில் வந்து பச்சென்றிருக்கும் புற்களைக்கண்டு மேய்ந்து அங்கேயே வாஸஞ் செய்யத் தொடங்கிற்று. இந்த மானைக்கண்டு பொறாமை கொண்டு குதிரை ஓர் மனிதனிடஞ் சென்று அதைக் கொல்லும்படி வேண்டிக்கொண்டது.

அம்மனிதன் 'நல்லது அப்படியே செய்கிறேன், என்னை முதுகிலேற்றிக் கொள். மானைக் கொல்லும் வரையில் உன் வாயிற் கடிவாளம் போடும்படி யனுமதி கொடு' என்றான். குதிரை ஸம்மதித்தது. தக்ஷணமே மனுஷ்யன் அதன் வாயிற் கடிவாளத்தைப் போட்டு முதுகின் மேலெறி உட்காந்து கொண்டான். அது முதல் குதிரை ஸ்வயாதீனத்தை இழந்தது. மான்பேரில் பழிவாங்கச்சென்று தானே அவஸ்தையில் அகப்பட்டுச்கொண்டது. ஆதலின் எப்போதும் பிறரைக் கண்டு பொறாமைபடுகிறதும் அசூயை கொள்வதும் நமக்கே துன்பந் தருமாதலின் அவ்விரண்டு துர்க்குணங்களையும் ஒழிக்கக் கடவோம்.

"**அத்திப்பழத்தை பிட்டுப் பார்த்தால் அத்தனையுஞ் சொத்தை**" யென்பது பொய்யல்ல. வேதாந்த உபன்யாஸஞ் செய்பவர்களெல்லாம் நம் மோக்ஷத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பார்களென் றெண்ணலாகாது. அவர்களுடைய குணத்தை ஆராய்ந்து பார்த்தால் தெரியவரும். சிலருக்கு பொருளசையிருக்கும், சிலர் சபையில் தம்பைப்போன்ற இதர வித்வான்களை பழிப்பார்கள். சிலர் தம்மையே தோத்திரஞ் செய்து கொள்வார்கள். ஆதலின் உபன்யாஸகர்களின் வல்லமையை மட்டும் அறிந்து மகிழ்ந்து அந்த மட்டில் அவர்களை விட்டுவிட்டு ஸ்வயமாகவே உசிதமான அப்பியஸங்களைச் செய்யவேண்டும். நல்ல மார்க்கததிலேயே நம் மனதைச் செலுத்த வேண்டும். வாய்ப் பேச்சையும் பிரஸங்கத்தையு மட்டுங் கேட்டு மோசம் போகலகாது.

"**உபதாரிகளுக்கு அபகாரஞ் செய்வது உலகவியல்போ?**" முன்னொரு சமயஞ் சாலை யோரத்தில் சாய்ந்து வளர்ந்த ஓர் மாமரம் பல கிளைகளும் அவைகளில் பழங்களும் நிரம்பி அழகாயிருந்தது அதைப்பார்த்தவர்கள் அதிலுள்ள கனிகளைப் புசிக்கவெண்ணி கல்லால் எறிந்து பயன் படாவிட்டால் மரத்திலேறி கிளைகளை மித்த்து காம்புகளையாட்டி இலைகளையசைத்துப் பழங்களைக் குலுக்குவது வழக்கம். அதைக்கண்டு அம் மரம் அடடா, நாம்பழங்களை வைத்துக்கொண்டு ஜனங்களுக்கு உபகாரஞ்செய்வதாலன்றோ நம்மேல் அவர்கள்

ஏறிமிதித்து ஆட்டிதிசைக்திக் குலுக்கிக் கல்லை விட்டெறிகிறார்கள். நாம் பழுக்காமலிருந்தால் மெத்த நன்மையாயிருக்குமேயென்றது. இதனால் உலகத்தில் எப்போதும் உபகாரஞ்செய்வோர்களுக்கு அபகாரஞ்செய்வது அறியாதவர்களின் சுபாவமென் றெண்ணியாரிடமுங் கோபங்கொள்ளாதிருத்தல் பெரியாரினியல்பு.

"நன்றி மறந்தார் நலிவடைவார்" வெகுநாளைக்கு முன் வேட்டைக் காரர்களைக்கண்டு அரண்டோடிவந்த ஓர்மான் அவர்களுடைய கண்ணுக்குப் புலப்படாமல் திராக்ஷக் கொடிகளுக்கிடையில் பதுங்கி யொளிந்தது. வேட்டைக்காரர்கள் அதனிருப்பையறியாது வெடிதீர்த்தகால் அவ்வெடி மரன் பேரில் படாமல் வியர்த்தமாய்ப் போயிற்று. மான் சிறிது நேரத்துக்கெல்லாந் தான் அபாயத்திலிருந்து தப்பித்துக்கொண்டதாக எண்ணி மெள்ள திராக்ஷீ இலைகளைத் தின்னத்தொடங்கிற்று. இலைகள் அசைவதை ஓர் வேட்டைக்காரன் கு.றிப்பாகப் பார்த்து வில்லில் அம்பைத்தொடுத்து மான்பேரில் விடுத்தான். அது காயமடைந்து இறக்கும் போது ஐயோ, என்னைக் காப்பாற்றிய திராக்ஷச் செடியை நான் நன்றி மறந்து தின்னத் தொடங்கினேன். அந்த கோஷத்திற்காக இப்போதி பிராணனை விடுகிறேன் என்றது. ஆகலின் நன்றி கெட்டாருக்கு எப்போதும் இடுக்கண் உண்டாகுமென்பது நிச்சயம்.

"பரத்தைபோற்றி பவத்தையகற்று" என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். பரம் என்பது தரமூர்த்திகளைச் குறிக்கிறது. அவர்களைப் பரப்பிரம்மமென்றறிந்து வணங்கினால் ஸகல தீவினைகளும் நெருப்பிலிட்ட பஞ்சாய்ப் பறக்குமாம். பிரதிதினமும் பிரதி நிமிஷமும் பகவானைப் பிரார்த்திப்பதை விட வேறு மார்க்கமிலலை. ஆதலின் அவரது பாதாரவிந்தங்களை ஸதாதியானிக்கக் கடவோம்.

"திரிகரணங்கள் என்பன எவை?" மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றுந் திரிகரணங்களாம். இவற்றால் நாம் புண்யபாவங்களைச் செய்கிறோம். மனதால் ஒருவனைக் கொல்லவேண்டுமென்று நினைப்பது பாவம், வாயால் கொல்லுவேன் என்று சொல்வது அதைவிட அதிகமானபாவம். கொல்வது மகாபாவம். இம்மூன்றுக்குந் தண்டனை படிப்படியாய் அதிகப்படும். புஷ்பங்களை எடுத்து விக்கிரகத்துக்கு அர்ச்சனை செய்வது புண்யம். ஈசுவரனை வாயால் வழுததுவது அதைவிட அதிகபுண்யம். எந்த செய்கைக்கும் மனமே காரணமாயிருப்பதால் அதையடக்கியாள்வது அறிவாளிகளின் கடமை கெட்ட வழியில் நாடவொட்டாமல் நாளடைவில் மனதைத் தடுத்து நல்வழியில் நடத்துவதற்காகவே ஸமஸ்த கர்மானுஷ்டானங்களு மேற்பட்டிருக்கின்றன. ஆதலின் நாம் கர்மங்களை யனுஷ்டிக்க வேண்டும். ஒவ்வொரு படியாய் ஏறி மெத்தைக்கு போவது போல் விவேகியானவன் கர்மம், பக்தி முதலிய மார்க்கங்களை யனுஸரித்துக் கடைசியில் ஞானியாக வேண்டும்.

"சுருதி யுக்தி யனுபவம்" என்னும் மூன்றனுள் இரண்டாவதாகிய யுக்தியைப்பற்றி ஓர் கதை சொல்வோம். கங்காநதிதீரத்தில் இலந்தைவனத்தில் திர்ஜெயசேகரி என்னும் ஓர் சிங்கம் வசித்துக் கொண்டிருந்தது. ஓர் நாள் இரையகப்படாமல் அது திரிந்து கொண்டிருக்கையில் ஒரு குடியானவனும்

அவனுடைய அழகிய பெண்ணும் எதிர்ப்பட்டனர். ஸிம்ஹம் குடியானவனைப் பிடித்துப் புசிக்க எத்தனித்தது. அவன் ஐயா, ஸிம்ஹராஜாவே நான் தங்கள் வலிக்கு எம்மாத்திரம். யானையைக் கொன்று தின்பதன்றோ தங்களுடைய கவுரவத்துக்கழகு. என்னைத் தயை செய்து விட்டுவிட வேண்டும் என்று கெஞ்சினான். குடியானவன் செய்த ஸ்தோத்திர த்தைக்சேட்டு விம்ஹம் ஸந்தோஷமடைந்து "நல்லது உன்னை மன்னித்தேன், ஆனால் எனக்கு ஆனால் எனக்கு ஒரு விருப்பமுண்டாயிருக்கிறது. அது என்னவெனில் உன்னுடைய பெண்ணைக் கல்யாணஞ் செய்ய வேண்டு மென்னும் எண்ணம் பலமாயிருக்கிறது. ஆதலின் நீ இப்போதே நல்ல முகூர்த்தம் பார்த்து அவளை எனக்கு விவாகஞ்செய்து கொடு" என்றது. குடியானவன் பயமடைந்து இதற்கென்ன செய்வதென்று யோசித்தான். சிலநேரங்கழித்து சிங்கத்தை நோக்கி "ஐயா, ஹிம்ஹராஜனே தங்களுடைய இஷ்டப்படியே என் பெண்ணைக் கொடுக்கிறேன். ஆனால் ஒரு விஞ்ஞாபன முளது. என் குமாரத்தி தங்கள் பற்களையும் நகத்கையுங்கண்டு பயமடைகிறாள். அவைகளை தட்டிவிடும்படி எனக்கு அனுமதி கொடுத்தால் பிறகு உங்கள் பேரில் மோஹங் கொள்வாள்" என்றான். கேசரி அதற்கு ஸம்மதிக்கவே குடியானவன் ஒரு பல்லைக் கூட தவிரவிடாமல் தட்டியெறிந்தி நகங்களைப் பெயர்த்தான். அதன் பிறகு கண்டீரவங் குடியானவனை நோக்கி ஏன் இன்னுந்தாமதம், உன் பெண்ணை வரச்சொல் என, அவன் பெரிய தடியை தூக்கி சிங்கத்தின் முதுகில் மொத்த அது அவனை எதிர்க்க மாட்டாமல்வெட்கி ஓடிப்போயிற்று.

"ஸ்தானம்வேறு பொருள்வேறு" மாஜிஸ்திரேட் என்னும் ஸ்தானத்துக்கு மரியாதையேயன்றி அவ்வதிகாரத்தைவசிக்கும் ஆசாமிக்கு மரியாதையில்லை. எவன் எந்த பீடத்திலேறுகிறானோ அவன் அந்த பீடத்திலிருக்கும் வரை மரியாதை பெறுகிறான். இடம் விட்டுப்பெயர்ந்தால் இருந்த கௌரவம் பறந்து போகிறது. இதை அறியாமல் அனேகர் தங்களுக்கு இயல்பாயே யாரும் மரியாதை செய்ய வேண்டுமென்னுங் கர்வங்கொண்டு ஏழைகளை ஹிம்விக்கின்றனர். இத்தகையோரு க்குப் புத்திவருமாறு அடியில் வருங் கதையைக் கூறுகிறோம். முற்காலத்தில் கிரீஸ் என்னும் நாட்டின் பிரதானநகரில் ஓர் பெரிய கோயிலைக்கட்டி அதில் விக்கிரகத்தை ஸ்தாபிக்க வெண்ணி சில கனவான்கள் ஒன்றுகூடி ஒரு கழுதையின் மேல் புதிதாய்ச் செய்த விக்கிரகத்தை வைத்து வீதி வழியே ஓட்டி வந்தனர். அவ்விக்கிரகத்தைகண்ட ஜனங்களெல்லோரும் வீதியில் ஸாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தனர். கழுதை பார்த்தது. ஓகோ! நம்மைக்கண்டன்றோ இத்தனை ஜனங்களும் அடிபணிகின்றனர். நமக்குள்ள சிறப்பு வேறு யாருக்கு வரும் என்று கர்வங்கொண்டு ஒய்யார நடை போடத் தொடங்கியது. கழுதை ஓட்டுபவன் அது மந்தமாய்ப் போவதைக் கண்டு தடிகொண்டு சாடினான். அப்போது தான் கழுதைக்குப் புத்தி வந்தது. ஓகோ நாம் தாங்கி கொண்டிருக்கும் விக்கிரகத்துக்கன்றோ ஜனங்கள் மரியாதை செய்கின்றனர். நமக்கல்ல, இனி, நாம் கர்வப்பட்டு விரைவாய்ப் போகாதிருந்தால் ஓட்டுகிறவன் கொடுக்கும் பூசையால் உயிர் போய்விடுமேன்றறிந்து ஓடத் தொடங்கியது. இதைப்போல் அதிகாரம் விக்கிரகமாகவும் அதை வகிப்பவர் ஸாதாரணப் பிராணியாகவு மிருப்பதால் மாந்தர்களில் எவருங் கர்வங்கொள்ள நியாயமில்லை.

"மௌனம் ஸர்வார்த்த ஸாதகம்" என்று பழமொழியுண்டு. மௌனத்தின் பெருமையை தக்ஷணாமூர்த்தியென்னும் பரமகுரு ஸனகாதியோகிகட்கு அறிவித்திருக்கிறார். அந்த நிலைமையை அடைவதென்றால் எளிதல்ல. ஆனால் அந்நிலைமையை அடைந்தவர்கள் அனுபவிக்கும் ஆனந்தத்தை யொருவாறு நாம் ஊகிக்கக்கூடும். இவ்வுலகத்தில் அதிகமான வியாபாரத்தை வைத்துக்கொள்ளாமல் பிரவிருத்தியைக் கொஞ்சங்கொஞ்சமாய் விடுவது மனதிற்கு ஸந்தோஷத்தைத் தருகிறது. கவலை நீங்கினால் வியஸனமில்லை. உலகிலுள்ளாரை இருவகையாகப் பிரிப்போம். நல்லவர்கள், கெட்டவர்களென்னு மிருவகுப்பாருள் கெட்டவர்களுடன் ஸகலாஸஞ் செய்யாமலிருப்பதால் பல கவலைகளையுந் துன்பத்தையும் நீக்கிக் கொள்ளலாம். புற்றுக்கருகில் வஸித்தால் பாம்பு கடிக்குமோ வென்னும் பயமுண்டாகும். அதைவிட்டகன்றால் அந்தபயமும் நீங்குகிறதன்றோ. இதையனுசரித்தே துஷ்டனைக்கண்டால் தூரவிலகென்று பெரியோர் கூறுகின்றனர். இப்போது நல்லவர் கெட்டவர் என்னுமிருவகுப்பாரில் கெட்டவரின் நேசத்தை யொழிப்பதால் நாம் கொள்ள வேண்டிய கவலையிற்பாதியை யொழித்துவிடுகிறோம் முன் இருவகையாரோடும் நேசஞ்செய்ககாலத்தில் நமக்கிருந்த சுகத்தைவிட இப்போது ஒருவகையாரோடு மட்டும் நாம் நட்புக்கொள்வதால் அதிக சுகமுண்டாகிறது. சுகமென்பது கஷ்டமின்றியிருத்தலைக் குறிக்கிறது. மூட்டை தூக்குகிறவன் அதை யிறக்கியபின் சுகமாயிருக்கிறதென்கிறான். இதனால் கவலையின்றியிருத்தல் சுகமென்றேற்படுகிறது. நல்லோர் என்ற ஓர்வகுப்பிலும் விவேகிகளோடு மட்டும் ஸம்பாஷிப்பதென்றும் மற்றவர்களுடன் ஏதேனுங் கேட்டகேள்விக்கு மட்டும் மறுமொழிசொல்லி சும்மாவிருப்பது நலமென்றும் எண்ணி அவ்வாறு செய்வது அதிக ஆனந்தத்தைத் தரும். எவரெவர் எந்தெந்த விஷயத்தைச் சிலாகித்துப் பேசினாலும் அவரவர்க்குத் தக்கபடி அனுஸரித்து விடை கொடுப்பதால் மிகுந்த நன்மையை அடைகிறோம். எந்த மனுஷ்யன் நாம் கொண்ட கருத்துக்கிசைந்து சொல்லுகிறானோ அந்த மனிதனிடம் நமக்குப் பிரீதி உண்டாவது ஸகஜம். அதன்பிறகு ஒருவர் காரியத்திலுந் தலையிட்டுக் கொள்ளாமல் தனிமையாயிருப்பது சுகத்தை விளைக்கிறது. இதனாற்றான் இனிது இனிது ஏகாந்த மினிது என்று ஔவை கூறியிருக்கிறாள். இவ்வாறு ஏகாந்தமாயிருந்து அனுபவிக்கும் ஆனந்தத்தைவிட அவ்வேதாந்தத்தில் மௌனமாயிருந்து எல்லாவஸ்துக்களையும் பிரம்மஸ்வரூபமாகப் பார்ப்பது மகத்தாகிய ஆனந்தம், இதுவே பிரம்மாநந்த மெனப்படுகிறது.

ஒரு பெரிய மனிதன் இரண்டாட்களுக்குச் சம்பளங்கொடுத்து இராப்பகலாய் பங்கா இழுக்கச் சொல்லுகிறான். இவனுக்குள்ள ஆனந்தத்கைவிட ஏழையாகிய ஒருவன் ஆற்றங்கரையில் நின்று சுகமாய் வீசுங்காற்றை ஸ்பரிசிப்பது எத்தனை சந்தோஷத்தை விளைக்கும். ஸங்கீதவித்வானுக்கு ஏராளமான பணத்தைக்கொடுத்து அவனிடங்கேட்கும் பாட்டைவிட வனத்திற் கிளிகள் பாடுவதைக் கேட்டு ஸந்தோஷிப்பது மேல். காட்டிலுள்ள அருவிகள் ஓடுவதைக்கண்டு நாம் ஆனந்தங் கொள்வதில் யாது தடை? இம் மாதிரி ஸகல ஸுகங்களும் ஏழை பணக்காரனென்ற வித்தியாஸமின்றி ஸர்வேசுவரனால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

"கிர்ஷ்ண, கிர்ஷ்ண, கிர்ஷ்ண" வென்றால் மகா பாதங்களெல்லம் விநாசமாகின்றன. கருடன் தினமொன்றுக்கு ஆயிரம் பாம்பைக் கொன்றுங் கிர்ஷ்ணாவென்று சப்திப்பதால் ஸகல பாபங்களும் நீங்கி ஸர்வ ஜனங்களாலும் போற்றப்படுகிறது. விருஷபமோ புல்லைத்தின்று நிலத்தையுழுதி வண்டியையிழுத்து மனிதர்க்குப் பல உதவிகள் செய்துங் கிர்ஷ்ண ஸ்மரணை செய்யாத காரணத்தால் அவஸ்தைப்படுகிறது. கட்டுத்தறியில் கட்டப்படுகிறது. பட்டியில் அடைக்கப்படுகிறது. படாதபாடு படுகிறது. கருடனைக் கண்டால் ஹரி ஹரி யென்று கையெடுத்துக் கும்பிடுகிறார்கள். காளை மாட்டைக்கண்டால் அடி அடி யென்று தடி யெடுத்துப்புடைக்கிறார்கள். கருடனுக்கு தாங்களே ஆகாரங்களை விட்டெறிகின்றனர். காளை மாடு ஒருகை நெல்லைத்தின்றால் விரட்டுகின்றனர். ஒரு விதத்திலும் உபயோகமாகாத மாம்ஸ பக்ஷணியான கருடன் கிர்ஷ்ண ஸ்மரணை செய்வதால் பெருமையடைந்திருப்பதையும் பலவிதத்தில் உயோகப்படுஞ் சாகபக்ஷணியான விருஷபம் அந்த ஸ்மரனையைச் செய்யாததால் சிறுமை யடைந்திருப்பதையும் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம். ஆதலின் நாம் எப்போதுங் கிர்ஷ்ணனை ஸ்துதித்து பெருமை அடையக்கடவோம்.

"உருவுகண்டெள்ளாமை வேண்டும்" என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். இரத்னக்கல் வெகு சிறிது, விலையோ ஆயிரம் பதினாயிரம். கருங்கல் வெகுபெரிது, கூலி கொடுத்தாலுங் கொண்டுபோகார்கள். வியாதி பெரிது. அதை நிவர்த்திசெய்யும் மருந்து சிறிது. ஆத்மா அணுவிலும் அணு. அது ஒன்றில்லையானால் சரீரங் கட்டை தான். கால் கை முதலிய உறுப்புகள் அசைவற்றுப்போ கின்றன. ஆகலின் புத்தியான் உருவத்தைக்கண்டு பெருமைபாரா ட்டான். எந்த வஸ்துவும் அதன் குணத்தினாலே மகிமையடைகி றது. இதற்கொரு கதை சொல்லுகிறோம் முன்னொரு சமயம் ஓர் ரரசன் அரண்மனையில் சதிர் கச்சேரியொன்.று நடந்தது. அதைப் பார்க்கவேண்டி ஆசைகொண்ட ஏழையாகிய ஓர் தமிழ் வித்தவான் மெள்ள உள்ளே நுழையத்தொடங்கினான். சேவகர்கள் கழுக் கைப்பிடித்து நெட்டித் தள்ளியதால் மன வருத்த மடைந்து ஓர் யுத்திசெய்தான்.

“வெள்ளையுஞ் சள்ளையுமுண்டனால் வேண்டிய காரியம் ஸாதிக்கலாம்” என்று வெள்ளையான உடை தரித்து அரை ரூபாய் கொடுத்து வாடகைப் பல்லக்கில் வந்து வாசற்காப்போனிடம் இராமனுக்கு அண்ணன் வந்திருப்பதாய் தெரிவி என்றான். அவ்வாறே காவலாளி உள்ளே சென்று தெரிவிக்க அரசன் அதிசயப்பட்டு ராமனுக்குப் பரதன், லக்ஷ்மணன், சத்துருக்னன் என்ற தம்பிகளுண்டு. அண்ணனில்லையே, இதென்ன ஆச்சரியமென்று அள்ளே அழைத்து வரும்படி கட்டளையிட்டான் அவ்வரசனுடைய ராஜ்யத்தில் பொய் சொல்லுகிறவர்களின் தலையை வெட்டி விடுவதென்னும் விதியிருந்தது, வித்துவான் அரசனுக்கெதிரில் உட்கார்ந்தார். மன்னன் அவரை நோக்கி 'நீர் யார்?' என, அவர் "நான் இராவணனை ஸம்ஹாரஞ்செய்த ஸ்ரீராமனுக்கு அண்ணன்” என்று பயப்படாமல் சொன்னார். உடனே அரசன் அதை ருஜுப்படுத்தாவிட்டால் உம்முடைய தலையை இப்போதே வாங்கிவிடுவேன் என, வித்வான் சற்றேனும் பயப்படாமல் "நல்லது, அரசனே உம்முடைய ஸமஸ்தானத்திலுள்ள பெரியவைத்தியரை அழைப்பியும்" என்றான். அவர் வந்தவுடன் வித்வான் தன் காலை நீட்டி 'இதிலென்ன இருக்கிறது'

சொல்லுமென "வைத்தியர் வாயுபிடிப்பு" உண்டென்றார். உடனே வித்வான் 'ஸரி, அரசனே, ஸ்ரீராமருடைய பாதத்தை ஹனுமார் தாங்கினார்.' ஆதலின் நான் ராமனைவிடப் பெருமை பெற்றவன். அதனாலே ராமனுக்கு அண்ணன் என்றேன் என், எல்லோருங் கலீரென்று நகைத்தார்கள். பிறகு அரசன் அவர் நல்ல வித்வானென்றும் அவரது உருவத்தைக்கண்டு காவலாளிகள் அலக்ஷியஞ் செய்ததற்காக இவ்வாறு யுக்தி செய்தாரென்றும் அறிந்துகொண்டான். இதனால் ஒருவன் தன்னை உயர்ந்தவனாகச் சொல்லிக்கொண்டால் மட்டும் போதாது, எந்த விஷயத்தில் உயர்ந்தவன் என்பதை விவேக்கள் கவனிக்க வேண்டுமென் றேற்படுகிறது.

"உண்பான் உடுப்பான் சிவப்பிராமணன் குத்துக்கு நிற்பான் வீரமுஷ்டி" என்றொரு பழமொழி யுண்டு. அதுபோல் பெரியோர்களாற் செய்யப்பட்ட கிரதங்களை வாசிப்பவர்களாயும் அவர்களால் விதிக்கப்பட்ட ஆசாரங்களை அனுஸரிப்ப வர்களாயும் அனேகரிருக்க நாம் அவர்கள் செய்யத்தகாதென்று விலக்கிய கருமங்களையும் அனுஸரிக்சக் தகாதென்று ஒதுக்கிய அனாசாரங்களையும் அனுஷ்டித்து வீணாகக் கெட்டுப் போகிறோம். முன்னொரு முறை பரமசிவனை நோக்கி ஓர் பக்தன் கூறியிருக்கிறான், அதாவது 'ஹே பரமேசுவரா, உம்முடைய சிரசிலுள்ள சந்திரனை ஆகாயத்திற்கண்டு அனேகர் அதன் குளிர்ந்த கிரணங்களை யனுபவிக்கின்றனர். உமது ஜடா மகுடத்திலுள்ள கங்கையைப் பூமியிற்கண்டு எல்லோரும் ஸ்நாநஞ் செய்து பரிசுத்தர்களாகின்றனர். உம்முடைய திருவடியை அடைந்த ஒவ்வொருவருக்கும் உம்மிடமுள்ள நல்ல பதார்த்தங்களைக் கொடுத்துவிட்டதால் கடைசியாக உம்மைச்சரணாகதி அடைந்த எனக்கு உமது பிக்ஷாபாத்திரத்தைக் கொடுத்தீர்போலும். அதனாலன்றோ நான் இப்போது கையிற் செம்பைக் கொண்டு வீடுவீடாய் நுழைந்து பிச்சையெடுக்கிறேன், என்றான். இதைப்போல் பகவானையே கதியென்று நம்புஞ்சிலர் பலவிதத்தில் கஷ்டப்படுவது முண்டு, ஆயினும் அதனால் யாரும் அதையே மடையலாகாது.

"முன்னுக்கெல்லாம் வெயில் பின்னுக்கெல்லாம் மழை" என்பது போல் முதலில் பகவான் வறுமையைக் கொடுத்தாலுங் கடைசியில் மிகுந்த கிருபையைச் செய்வாரென்பது நிச்சயம்.

"பொறுமையே சிறந்த பூஷணம்" ஒருவன் பொறுமை என்னுங் குணத்தை வகித்தால் யாதொரு இடையூறுமின்றி வாழக்கூடும். பிறர் நம்மை நிந்திக்குமிடத்தும் நாம் பொறுமையாயிருப்பது நன்று. நம்மைவிட உயர்ந்தவர்கள் நம்மை நிந்தித்தால் நம்மிடம் ஏதோ குறையுளதென்றெண்ணி அதை நிவர்த்திக்க எத்தனப்பட வேண்டும். நமது குறையை யெடுத்துக் கூறினதற்காக அப்பெரியோர்களிடம் நன்றி பாராட்டவேண்டும். நம்மைவிடத் தாழ்ந்தவர்கள் நம்மை நிந்தித்தால் அதையோர் பொருட்டா யெண்ணாமல் மறுமொழியுஞ் சொல்லாமல் சும்மா விருப்பது நன்று. கீழ்த்தரமானவர்கள் செய்யும் நிந்தையை விவேகிகள் லக்ஷியஞ் செய்யார்கள். நமக்கு ஸமானர்கள் நம்மை நிந்திப்பார்களாகில் அவர்களுக்குத்தக்க ஸமாதானஞ் சொல்வது கடமையே. அப்போதும் பொறுமையுடன் விடைகொடுக்கவேண்டுமே யல்லாது வரம்பு கடந்து

வசனிக்கலாகாது. மேற்கூறிய நீதி லௌகீகர்களுக்கே யன்றி ஞானிகளுக்கில்லை. ஞானிகளும் ஸாதுக்களும் யார் எவ்விதமான நிந்தை செய்தாலும் அதை பாராட்டார்கள். இதற்குக் கங்கா நதியே திருஷ்டாந்தம். பரிசுத்தமான கங்கையில் சாக்கடை ஜலம் விழுகிறது, அதற்காக கங்கையம்மன் ஜனங்களிடங் கோபங் கொண்டு வற்றிப் போகிறதில்லை. அதுபோல் ஞானிகள் யாரிடமுங் கோபங் கொள்ளுகிறதில்லை.

"அம்பிகையின் பாதத்தில் நம்பிக்கை வை" என்று காளிதாஸன் என்னுங் கவி சிரேஷ்டர் கூறியிருக்கினர். ஆபத்காலத்தில் அம்பாளுடைய பாதமே கதியென்று நம்புகிறவர்கள் அவ்வாபத்தினின் றுந்தப்பித்திக் கொளவார்கள் பிள்ளைகளிடந் தந்தையைவிட தாய்க்கு அதிகப்பிரீதியுண்டு, இதற்கு உதாரணமாக ஸ்ரீமத் ராமாயணத்திலிருந்து ஓர் விஷயஞ் சொல்லுகிறோம். இராவகப்பெருமான் சீதை யம்மனுடன் வனவாஸஞ் செய்கையில் விராதன் முதலிய அரக்கர்களைச் சம்ஹரித்தார். அப்போது அம்மனுடைய கண் கலங்கி நீர் வடிந்தது. இதற்கென்ன காரணமெனில் ஜானகி உலக மாதா வாதலின் தன் பிள்ளையாகிய விராதனாதியர் இறந்து போகின்றனரே யென்று வியஸனமடைந்தாள். துஷ்டப்பிள்ளையாயினுந் தாயின் அன்பு மாறுகிறதில்லையன்றோ, பிள்ளை வைதால் வாழைப்பழமாகவும், திட்டினால் திரட்டுப் பாலாகவும், அடித்தால் அப்பமாகவும், குட்டினால் கொழுக்கட்டையாகவம் எண்ணி சந்தோஷப்படுவது தாயின் இயல்பு தான் பட்டினி கிடந்தாலும் பிள்ளைக்கு அமுதூட்டி வளர்ப்பது தாயின் உத்தம குணமாதலால் பரப் பிரம்ப ஸ்வரூபியாகிய ஸ்ரீ அகிலாண்டேசுவரியை நாம் தியானிப்பது நன்று. அதனால் ஸகல ஆபத்துகளும் நீங்கி, சீக்கிரத்தில் காரியஸித்தி யுண்டாகிச் சுகத்தை யடைவோம்,

"கண்ணே காதே நமஸ்காரம் கண்டதைக்கேட்டதைச் சொல்லாதே" யென்னும் பழமொழி வழங்குகிறது. இதற்கு சிலர் விபரீதமான அர்த்தத்தைச் செய்கிறார்களா. அதாவது கோர்ட்டில் ஸாக்ஷியஞ் சொல்லும்போது கண்ணால் கண்டவற்றையும் காதால் கேட்டவற்றைறயுஞ் சொல்லாதே, பொய் சொல்லாதே என்று பொருளாம். இது சுத்தப்பிசகு அக்கிரமஞ்செய்யென்று முன்னோர்கள் கூறியிருப்பார்களா? இதன் அர்த்தம் வேறு. கண்ணையுங் காதையும் நம்பாதே. அவ்விரண்டும் எப்போதும் உண்மையைத் தெரிவிக்கின்றனவென்று நினைத்து மோசம் போகதே. எந்தக்காரியத்தையும் புத்தியினால் ஊகித்துப்பார். சாஸ்திரத்தை நம்பு. பரிசோதனை செய். முரட்டுத்தனமாய் நான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று பிடிவாதஞ் செய்யாதே, ஆராய்ந்து நிதானித்து குணாகுணங்களைக் கிரகித்துக்கொள். என்பது மேற்கூறிய பழமொழியின் தாத்பரியம். அதெப்படி? கண்ணாற் கண்டதை நம்புவதற்கென்ன தடையெனில் சொல்லுகிறோம். ஜாலவித்தைக்காரன் ஒரு பையனைப் படுக்கவைத்துக் கத்தியால் குத்தி இரத்தத்தைக் காட்டுகிறான். உன் கண்ணுக்குக் குத்தியதும் இரத்தம் வடிகிறதுந் தெளிவாய்த் தெரிகிறது. அதை நம்புகிறையா? இல்லை சூரியன் சிறிய உருவமாய்த் தோன்றுகிறது. சாஸ்திரத்தைப் பார்த்தால் அது பூமியைவிட எத்தனையோ மடங்கு பருமன் என்று அறிகிறோம். சாஸ்திரத்தைப் பாராமல் சூரியன் பெரிய அப்பளம் போலிருக்கிறது, என்றான். கண்ணாற் கண்டேனென்றால் புத்திமான்கள்

நம்புவார்களா? வெகு தூரத்திலுள்ள மலை வெகு ஸமீபாயிருப்பது போல் காணப்படுகிறது நாமிங்கிருந்து பார்த்தமட்டில் இரண்டு மைல் துரத்தில் மலை யிருக்கிறதென்று சாதிக்கலாமா? ஆகாசமும் பூமியும் ஒன்றாய்ச் சேருவது போல் நம்முடைய கண்ணுக்குத் தென்படுகிறது. அவ்விரண்டுஞ் சேருமிடத்தைப் பார்ப்பதற்காக நாம் ஆயுள் நாள் முழுவதும் நடந்து போனாலும் அலைந்து திரிந்தாலும் ஸாத்தியப்படுமா? ஆகாசமும் பூமியுஞ் சேருகிறது தானுண்டோ? மேற்கூறிய காரணங்களால் கண்ணை நம்பதேயென்று பெரியோர் கூறுகின்றனர். ஒரு இந்திரியமாகிய கண் நம்மை இப்படி யேமாற்றத் தொடங்கினால் மற்ற இந்திரியங்கள் நம்மை மயக்குவதைக் கேட்கவேண்டுமா? நிமிஷத்துக்கு நிமிஷஞ் சலித்துக்கொண்டிருக்கும் மனதால் நாம் மோசம் போவதற்குக் கணக்கில்லை ஆனதால் புத்திமான் கேவலம் விஷயசுகங்களையே பெரிதாயெண்ணி சும்மா விராமல் தத்வார்த்தங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு க்ஷணமேனும் வீண் காலக்ஷேபஞ் செய்யலாகாது.

"பொய்சொல்லி வாழலாமா" வென்பது பெரியோர் வாக்கியம். நிஜம் சொல்லி நெடுந்தூரம் போகலாம். முன் காலத்தில் சமரபுரியென்னும் நகரத்தரசன் ஜெயபுரி நாட்டின் மேற் படையெடுத்து அதையாண்ட ஜெயகாந்தனை யோட்டி ராஜ்யத்தைத் தன் ஸ்வாதீனமாக்கிக் கொண்டான். அப்போதவன் தன் போர் வீரர்களை நோக்கி 'நீங்கள் இந்த ஜெப்புரியிலுள்ளவர்களைச் சிறிதேனும் ஹிம்ஸிக்கலாகாது. அவர்களுக்குச் சொந்தமான ஓர் துரும்பைக்கூட அபகரிக்க படாது' என்று கண்டிப்பான கட்டளையிட்டான், இவ்வாறிருக்கையில் ஒருநாள் அத்தேசத்துக் குடியானவன் வீட்டுக்கோழிக்குஞ்சை ஓர் போர் வீரன் திருடிக் கொண்டு போனான். அக்குடியானவன் அரசனிடம் ஓடிவந்து தன் வீட்டில் நுழைந்து கோழிக் குஞ்சைக் கொள்ளையடித்துக் கொண்டு போனதாகப் போர் வீரன் மேல் குற்றஞ்சாட்ட அரசன் தன்னாளைக் கோபிக்க அவன் அடியில் வருமாறு உத்தரஞ் சொன்னான். மகாராஜாவே, தாங்கள் செய்த அக்கிரமத்தை விட நான் அதிகஞ் செய்யவில்லை. தாங்கள் இந்நாட்டு அரசனது ராஜ்யத்தைப் பிடுங்கக் கொண்டு அவனைத் துரத்திவீட்டீர்கள். நான் இந்தக் குடியானவனுக்குச் சொந்தமான அனேக கோழிக் குஞ்சுகளில் ஒன்றை மட்டுந் திருடினேன். வேறுவிதமான இம்சை செய்யவில்லை யென்றான். மகாராஜா உண்மை சொன்னதற்காக போர் வீரனைத் தண்டியாமல் விட்டு அவனை நோக்கி "அடே இந்த ராஜ்யத்தை எனக்காக நான் அபகரித்துக் கொள்ளவில்லை. ஜனங்களுடைய நன்மைக்காக இதை ஜெயித்தேன். பிரஜைகளே இவ்விராஜ்யத்தின் பொருள்களை யனு வித்து சுகமடைகின்றனர் நீ திருடிய கோழிக்குஞ்சு உன்னுடைய உபயோகத்துக்கன்றோ? ஆதலின் நான் அடித்தது கொள்ளையாகாது" என்றான். போர்வீரன் சரிதானென்று ஒப்புக்கொண்டு வெட்கிப் போனான்.

"பொறாமை பொல்லாது" ஓர் இருண்ட தோப்பில் அனேக குரங்குகளிருந்தன. அவற்றில் ஒன்று மிகுந்த பொறாபைக் குணமுள்ளது. அது அத்தோப்பிலுள்ள பற்பல மரங்களினின்று பழங்களை யுதிர்த்து எல்லாவற்றையும் பொறுக்கி தன்னிடம் வைத்துக் கொண்டது. மற்றக் குரங்குகளெல்லாம் அதனிடம் ஓடிவந்து தங்களுக்குப் பங்கு கொடுக்கும்படி கேட்க அது எல்லாவற்றையு மெதிர்த்து

ஒவ்வொரு பழத்தாலும் அக்குரங்குகளை யடித்தி விரட்டி கடைசியில் ஜெயமடைந்து தன்னிடமுள்ள பழங்களை எண்ணும் போது ஒரே பழம் மீதியிருந்தது. ஐயோ! எல்லோரோடுஞ் சண்டைபோட்டுக் கடைசியில் ஒரு பழமே மீந்தது. நாம் சண்டை போடாமல் தயையும் அன்பும் பாராட்டி ஆளுக்கொருபழங் கொடுத்திருந்தால் எல்லோரும் நம்மை தர்மவானென்று கொண்டாடுவார்கள். வீணாக நற்பெயரைக் கெடுத்துக் கொண்டோமேயென்று ஏக்கமடைந்தது. அது போல் பொறாமைக்காரர்கள் சகல வரும்படிகளையுந் தாங்களே அடையவெண்ணி. எல்லோரையும் பகைத்து முடிவில் திரவிய நஷ்டமடைகின்றனர்.

"உலகம் பலவிதம்" ஒருவனுக் இரண்டு குமாரத்திகளிருந்தனர். அவர்களில் ஒருத்திபை செங்கலறுத்து சூளை போடுபவனுக்கும் மற்றொருத்தியைத் தோட்டக்காரனுக்கும் விவாகஞ் செய்து கொடுத்தான். சில நாட்கள் சென்ற பின் அவன் தன் மூத்த குமாரத்தியிடஞ் சென்று 'அம்மா, சுகமா?' என்றான். அவள் ‘சுகந்தான். ஆனால் இப்போது பெய்கிற மழை ஓய்ந்து நல்ல வெயிலெறித்தால் செங்கல் உலரும்' என்றாள். பிறகு இரண்டாவது குமாரத்தியிடஞ் சென்று 'என் குழந்தாய், சுகமாயிருக்கிறாயா? வென்றான். அதற்கவள் 'அண்ணா சுகந்தான், இப்போது பெய்கிற மாதிரி மழை பேய்ந்து கொண்டிருந்தால் தோட்டத்தில் செடிகள் நன்றாய் வளரும்' என்றாள். தந்தை அவ்விரண்டு குமாரத்திகளையும் நோக்கி 'குழந்தைகாள்! உங்களில் ஒருத்தி மழையையும் மற்றொருத்தி வெயிலையுங் கோருகிறீர்கள். ஆனதால் நான் எதைக்கோருகிறதென்பது தெரியாமல் விழிக்கிறேன்” என்றான். இதனால் உலகம் பலவிதமென்றும் உலகத்தாரெல்லோருக்கும் திருப்தி உண்டாகும்படி நடக்க முடியாதென்றும் அறிக்றோம்,

"சிவனே வல்லவன், அவனே நல்லவன்" என்று ஓர் பெரியவர் அடிக்கடி கூறுவதுண்டு. நல்லவன் என்னும் பட்டம் வல்லனுக்கே கொடுக்கவேண்டும். வல்லவனல்லாத மற்றவன் நல்லவனா யிருந்தென்ன? கெட்டவனா யிருந்தென்ன. ஆதலின் ஸர்வ சக்தியுள்ள பரபசிவனை தியானித்தால் ஸகல நன்மைகளு முண்டாம்.

“உலகம் பலவிதம்” ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தில் பிரீதி கொள்ளுகிறார்கள். எல்லோருடைய இஷ்டப்படி நடப்பது ஸாத்தியமல்ல. ஆயினும் ஒவ்வொருவருக்கும் பிரீதியாக நடந்தாலன்றி நல்லவனென்ற பெயர் எடுக்க முடியாது.

“மோசங்களிற் பலவிதமுண்டு." சிலர் ஜோஸ்யர்களாகவும் மாந்திரீகர் களாகவும் வைத்தியர்களாகவும் தோன்றி அதிசீக்கிரத்தில் அந்தர்த்தானமாகிறார்கள் சென்னையில் ஓர் மாந்திரீகர் ஒரு கனவானிடம் ரூ. 50 - பெற்றுக் கொண்டு அவருக்கு ஸாதகஞ் செய்வதாய்ச் சொல்லி ஏமாற்றிவிட்டார். தென்னாட்டில் ஒருவர் ஜோஸயஞ் சொல்வதாகப் பெயர் வைத்துக் கொண்டு ஏனைவாயனிடம் பணம் பறித்துக் காலங்கழிக்கிறார் இப்போது வைத்தியர்களைப் பற்றி மட்டும் பிரஸ்தாபிப்போம்.

"புலி பெரிதோ கிலி பெரிதோ" யென்றொரு கேள்வியுண்டு. புலியால் வருங்கேட்டைவிட கிலியால் வருங்கேடு அனந்தம். இதை நிரூபிக்க ஓர் கதை சொல்லுகிறோம். ஆரியூர் என்னுங் கிராமத்தில் அப்பாவையர் என்னுமோ ரந்தணரிருந்தார். அவருக்கு ஏதேஷ்டமான திரவிய மிருந்தும் அதை யாருக்கும் உபயோகப்படுத்தாமல் வீட்டிற் புதைத்து வைத்துக்கொண்டிருந்தார். இதையறிந்த ஓர் வைத்தியன் அவருடைய பொருளை நஷ்டப்படுத்த வெண்ணி ஓர் யோசனை செய்யலானான். தன்னுடன் மூன்று பேர்களை யழைத்துக்கொண்டு சிறிது தூரத்துக்கப்பால் ஒருவர் பின் ஒருவர் வர காவேரியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். அப்பாவையர் எதிர்ப்பட்டார். அவரிடம் முதல்வன் சென்று "ஐயா, உம்முடைய முகத்தில் கரிமேகம் படர்ந்திருக்கிறது" என்றான். அப்பாவையருக்குக் கொஞ்சந் திகிலுண்டாயிற்று. சிறிது தூரஞ்சென்ற பின் இரண்டாவன் எதிர்ப்பட்டான். அவன் அப்பாவையரை நோக்கி "என்ன ஸ்வாமி, தங்கள் முகத்தில் கரிமேகம் படர்ந்திருக்கிறது. அத்துடன் காதுந் தடிப்பாயிருக்கிறது" என்றான். அப்பாவையருக்கு ஏற்கனவே உண்டான திகில் அதிகமாயிற்று. அவர் இதென்ன ஆச்சரியமா யிருக்கிறது. நம்முடைய முகத்தில் கரிமேகம் படர்ந்திருக்கிறதாக இரண்டு பேர்கள் சொன்னார்கள். ஐயோ, வியாதியைப் பரிகரிக்கவேண்டியதி அவசியம். அதற்காக ஒரு வைத்தியனைத் தேடவேணு மென்றெண்ணினார். இதற்குள்ளாக மூன்றாவன் எதிர்ப்பட்டு ஐயரை நோக்கி "ஸ்வாமி தங்கள் முகத்தில் கரிமேகம் படர்ந்து காது தடித்து துர்நீர் பெருகியிருக்கிறது' என்றான் அப்பாவையர் திகில் அதிகரித்தது மூன்று பேர்கள் ஒரே மாதிரியாகக் கரிமேகம் உண்டென்பதை ஸ்தாபித்து அதற்குரிய சின்னங்களைச் சொல்லிவிட்டார்களென்று கிலி பிடித்து வீட்டுக்கு வந்த உடனே ஊர் வைத்தியனாகிய நாலாவனை கூப்பிட்டுத் தமது கையைக் காட்டினார். அவன் 'ஸ்வாமி கர்ப்பச்சூடு அதிகமாயிருக்கிறது. உங்கள் முகத்தில் இப்போது மேகம் படர்ந்து வருகிறது. தேகஞ் சிறிது சிறிதாய்த் தடிக்கிறதால் சில நாளில் ஊன் தண்ணீர் வடியும். நாற்றம் வீசும். உயிருக்கே ஆனியுண்டாகும்' என்றான். அப்பாவையர் நடுநடுங்கி 'நல்லது, இற்கென்ன செய்யலாம்' என, வைத்தியன் ஐம்பது ரூபா செலவழித்து கந்தகபஸ்மஞ் செய்து சாப்பிட்டால் திருமென்றான். அப்பாவையர் அவ்வாறே செலவழித்து மருந்துண்டு பொன் போன்ற தேகத்தைப் புண்ணாக்கிக் கொண்டு எதேஷ்டமான பொருளையுங் காலத்தையுஞ் செலவழித்து இல்லாத நோயை வரவழைத்து அவஸ்தைப்பட்டார். ஆதலின் மோசகாரர்களான வைத்தியர்களிடம் நம்பிக்கை வைப்பது பிசகேயாம்.

"பித்தம் அதிகரித்தால் பைத்தியம்" என்பார்கள். யாதொரு நூலையும் படிக்காமலே நமது நாட்டு வைத்தியர்கள் சுக்கு மிளகு திப்பிலி முதலியவற்றை வைத்துக்கொண்டு வைத்தியஞ் செய்கிறார்கள். ஆங்கிலேயர்களோ அப்படியல்ல. வைத்திய நூல்களை முறையுடன் கற்றுக்கொடுக்க வேண்டி வெகு திரவியஞ் செலவழித்துக் கலாசாலைகளேற் படுத்தியிருக்கின்றனர். அவற்றில் பயிலும் மாணாக்கர்களுக்கு உதவி சம்பளங் கொடுப்பதுடன் வைத்திய நூல்களடங்கிய புஸ்தகங்களையும் இனாமாகக் கொடுக்கின்றனர். அவற்றுள் (Insanity) பைத்தியத்தைப்பற்றிய புஸ்தகமொன்று. அதில் பைத்தியம் பிடித்தவர்களின் படங்களிருக்கின்றன. ஒரு பைத்தியக்காரன் ஆகாசத்தைப் பார்த்த வண்ண மாயிருக்கிறான். அவனுக்கு யாரைக் கண்டாலும் பயம். உலகமே அவனுக்கு

விரோதி போல் தோன்றுமாம். அந்த பயத்தால் அவன் கீழ்நோக்குகிறதில்லை. இரண்டு மூன்று பேர்கள் துணியைப் பிடித்து அவனுடைய இடுப்பில் கட்டினாலன்றி அதி அரையிலிருப்பதரிது. இவன் ஜென்மாந்திரத்தில் செய்த பாபகர்மத்தால் எல்லோருந் தனக்குவிரோதிகளென்றெண்ணி உலகத்தைக்கண்டு பயப்படுகிறான். உலகமானது அவரவர் சித்த விர்த்திக்கு ஏற்றபடி பயங்கரமாயுந், துக்கமாயுஞ், சுகமாயுங் காணப்படுகிறது அத போல் சிலருக்கு பிராமணர்களைக்கண்டால் வெறுப்பு உண்டாகிறது. இதற்குக்காரணம் ஓர் வித பைத்தியமேயன்றி வேறில்லை.

"போகியென்று பாம்புக்குப் பெயர்." இதென்னவேடிக்கை? பாம்பைக்கண்டால் எல்லோருந் தடியெடுத்தடிக்கிறார்கள். இதற்குத்தான் அதற்குப் போகியென்ற பெயர்வந்கதோ? ஆகிலும் அப்பெயரை அது மாற்றிக்கொள்ள முடியாது. மனிதர்களன்றோ அப்பெயரை வைத்தார்கள். ஆதலின் பாம்பின் பேரில் குற்றமில்லை. அது போகியென்று தனக்கு ஏற்பட்ட பெயரை இப்போதே ராஜி நாமா கொடுத்த விடும். இது இருக்கட்டும் மனிதர்களில் அநதிகாரிகளான சிலர் ஸ்வாமிகளென்று பெயர்வைத்துக்கொண்டு பெரியோர்களை நிந்தித்துத் தங்களைப் பிசாசுகளென்று பிறர் எண்ணும்படி செய்கின்றனர். இந்த ஸ்வாமிகள் பட்டத்தைப் பிறர் சூட்டவில்லை யென்பது நிச்சயம். ஆதலின் அந்தப்பட்டத்தை ஏன் உடனே ராஜிநாமா கொடுக்கலாகாதோ அறியோம்.

"பரத்தைப் போற்றி பாவத்தை யகற்று" என்ற வாக்கியப்படி ஜெகதீசனைப் பிரார்த்தித்து சகலபாபங்களையும் போக்க வேண்டும். நாம் தினந்தோறுந் திரிகரணங்களாற் செய்யும் பாபங்களுக்கு அளவில்லை. ஒரு நிமிஷநேரமாவது நம்மனம் நல்லவழியிலிருப்பதரிது. பிறர் செல்வக்தைக்கண்டு பொறாமைப்படாத நாளில்லை. நமது காலிற்பட்டு மாயும் எறும்புகளனந்தம். உட்கொள்ளுந்தண்ணீரில் ஏரா'ளமான பூச்சிகளுண்டு இத்தனை பூச்சிகளுக்கும் நமது வயிறே நன்காடாயிருக்கிறது. நன்றாக ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு நிமிஷமும் நாம் பாபஞ் செய்துகொண்டிருப்பது செவ்வனே புலப்படும். இந்த பாபங்களைச் செய்யாமலிருக்க முடியாது, பூச்சிகள் இறந்துபோமென்று நீரருந்தாமலிருக்க முடியுமா? எறும்புகள் நசிக்குமேயென்று நடக்காமலிருக்க முடியுமா? ஆதலின் தினந்தோறும் நம்மாற் செய்யப்படும் மேற்கூறிய பாபங்கள் நிவர்த்தியாகும் பொருட்டு பகவத்பக்தி செய்யவேண்டும். அடிக்கடி சிவசிவா, ராமராமா, கிர்ஷ்ண கிர்ஷ்ணாவென்று ஸ்மரிப்பது நன்று.

“ஞானிக்கில்லை இன்பமுந் துன்பமும்" கர்மபாசத்தால் கட்டுண்டவர்களுக்கே சுகமுந் துக்கமும் உண்டாகின்றன. ஞானிகளை கர்மம் பீடிக்காது. இகை நிரூபிக்க ஓர் கை நிரூபிக்க ஓர் கதை சொல்லுகிறோம். முற்காலத்தில் துர்வாஸரென்னும் மகரிஷியிருந்தார், இவர் வருஷத்துக்கொருநாள் அன்னம் புசிப்பதும் மற்ற நாட்களெல்லாந் தவமிழைப்பதும் வழக்கம். இந்த மாகானு பாவனுக்கு அன்னம் படைக்கும் பாக்கியத்தை கோபிகா ஸ்திரீகள் பெற்றிருந்தனர். துர்வாஸ மகரிஷிக்காக கோபிகைகள் ஷட்ரஸ பதார்த்தங்களுடன் பலவகை பக்ஷணங்களையு மெடுத்துக்கொண்டு அவர் கண்ணைத் திறக்குந் தினத்தில் கொண்டு வருவார்கள். ஓர் சமயங் கோபிகைகள் ருசிகரமான பதார்த்தங்களை

சிறந்த பாத்திரங்களில் நிரப்பி எடுத்து வருகையில் நடுவழிலுள்ள ஓராற்றில் வெள்ளம் பெருகி அக்கரை போகத் தடையுண்டாயிற்று. ஆற்றின் பெருக்கத்துக்கஞ்சி போகாமல் நின்றுவிட்டால் தூர்வாஸருடைய கோபத்தக் கிலக்காகி சாபத்தையடைய நேரும். ஆதலின் கோபிகா ஸ்திரீகள் மனக்கிலேச மடைந்து ஒன்றுந் தோன்றாமல் தியங்கினார்கள். பின்னர் ஸ்ரீ கிர்ஷ்ணமூர்த்தியின் சரணத்கையடைந்து தாங்கள் படுஞ் சங்கடத்தைச் சொல்ல அப்பெருமான் அவர்களை நோக்கி நீங்கள் அந்த ஆற்றண்டை சென்று ஸ்ரீ கிர்ஷ்ணன் பிரம்மசாரி யென்பது நிஜமானால் எங்களுக்கு வழிவிடு, விலகிப்போ என்று சொல்லுங்கள். ஆறு விலகிப்போம். நீங்கள் சிரமமின்றி அக்கரைபோய்ச் சேரலாமென்றார் இதைக்கேட்ட கோபிகைகள் கைகொட்டி சிரித்தனர். அவர்கள் கிருஷ்ண பரமாத்மாவுடன் பலவித கிரீடைகள் செய்து சுகமனுபவித்தவர்கள். ஆதலின் பகவான் தன்னை நித்திய பிரம்ம சாரி மென்று சொல்லிக்கொள்வதை அவர்கள் எப்படி நம்புவார்கள்? ஆயினும் ஜனார்த்தரின் வார்த்தை பொய்யாகாதென்பதை கோபிகைகள் நன்றாயறிந்துளர். ஆதலின் அவருடைய சொற்படியே எல்லோருந் திவ்யான்னங்களைத் தலையிலும் இடுப்பிலும் வைத்துக்கொண்டு ஆற்றருகே சென்று கண்ணன் நித்ய பிரம்மசாரி யென்பது உண்மையானால் இவ்வாறு விலகி எங்களுக்கு வழிவிடட்டும் என்றார்கள். உடனே ஆறு விலகிற்று. கோபிகைகள் சந்தோஷத்துடன் அக்கரை சேர்ந்து தூர்வாஸரைச் சேவித்தார்கள். அம்மகரிஷி அவர்கள் கொண்டுவந்த போஜனத்தை வயிறார உண்டு பசி தீர்த்தார் இதன் பிறகு தர்மிஷ்டைகளாகிய கோபிகைகள் திரும்பி வரும்போது மறுபடியும் ஆற்றைக்கடப்பதற்கு வழியின்றிப் பரதவித்து தூர்வாளரிடமே திரும்பி வந்தனர். அவர் ஸ்திரீ ஜனங்களை நோக்கி "நீங்கள் ஆற்றருகே சென்று தூர்வாஸர் எப்போதும் பட்டினியாயிருக்கிறார். ஒரு எள்ளளவுகூட போஜன முண்பதே யில்லையென்பது நிச்சயமானால் வழிவிடு என்று சொல்லுங்கள். "அவ்வாறு விலகும்" என்றார். கோபிகைகள் அவ்வாறே சென்று சொல்ல ஆறு வழிவிட்டது. அதைப் பார்த்து அதிசயித்தனர். சிறிது நேரத்துக்குமுன் தாங்கள் எதேஷ்டமான அன்னம் பக்ஷணம் முதலியவற்றை தூர்வாஸருக்கு கொடுத்ததையும் அவற்றை அவர் வயிறார உண்டதையும் நேரிற் கண்ட கோபிகைகள் மகரிஷி பட்டினியென்பதை எப்படி ஒப்பு கொள்வார்கள். ஆயினும் ஆறு வழி விட்டதால் அதை நிஜமென்றே நம்பவேண்டியிருக்கிறது. மட்டற்ற மகிழ்ச்சியுடனும் அளவில்லாத ஆச்சரியத்துடனுங் கோபிகா ஸ்திரீகளெல்லாங் கிர்ஷ்ணனிடம் வந்து தங்கள் சந்தேகத்தை விநயமாய்த் தெரிவித்துக்கொண்டார்கள். அவர் ஞானிகளைக் கர்மம் பீடிக்காதென்னும் அரிய விஷயத்தை எடுத்துக் கூறினார். கோபிகா ஜனங்கள் கொண்ட சந்தேகமும் ஒழிந்தது.

"பக்தியில் பத்துவிதமுண்டு." முதலாவது சிரவணபக்தி, இதைப் பரீக்ஷித்து மகாராஜன் அனுசரித்து பதம்எய்தினான். 2-வது கீர்த்தன பக்தி, இதை சுகர் அனுசரித் நற்கதிபெற்றார். சுகர் பிரம்மஞானி. 3-வது ஸ்மரணபக்தி, இகை யனுசரித்கவர் பிரகலாதர். 4-வது சேவனாபக்தி, இதைச் செய்து கொண்டிருப்பவள் லக்ஷ்மி. 5-வது வந்தனபக்தி, இதைச்செய்து பதவியடைந்தவர் அக்குரூரர். இவருக்குக் தான் பரமாத்மா சதர்ப்புஜத்துடன் ஆற்றில் ஸ்நாநஞ் செய்தபோது பிரசன்னமானார். 7 - வது தாஸத்வபக்தி, ஹனுமார் இந்த பக்தியைச் செய்து உத்கிருஷ்டமான நிலைமையை யடைந்தார், இவர் வஜ்ர சரீரமுஞ்

சிரஞ்சீவிபட்டமும். படைத்தார். 8-வது சத்ய பக்தி, இதை யனுசரித்தவன் அர்ஜுனன். இவனுக்குத்தான் பகவான் தேரோட்டி பார்த்தசாரதி யென்னும் பெயர் படைத்தார். சினேக தர்மத்தை நன்றாயறிந்த பகவான் தேரோட்டுவதை இழிவென்றெண்ணாதது போல் நேசர்கள் தாங்கள் ஒருவருக்கொருவர் செய்யும் ஊழியத்தை இழிவாகக்கருதுகிறதில்லை. 9-வது ஆத்மநிதேனபக்தி, இந்த பக்தியைச் செய்து பாக்கியம் பெற்றவன பலி. இவனுக்கு பரமாத்மா வாசற்காப் போனாயிருந்தார். 10-வது பிரேமலக்ஷணபக்தி, இதை புரிந்தவர் கோபிகைகள். மேற்கூறிய 10-வித பக்திகளில் கடைசியிற்கூறியதே வெகு சிலாக்யமானது.

“பக்திசெய்வதற்கு நம்பிக்கையே முக்கியகாரணம்." தெய்வதைப் பிரார்த்தித்தால் அது நம்மைக்காப்பாற்று மென்னும் நம்பிக்கை ஒவ்வொரு பக்தனுக்கு மிருக்கவேண்டும். அவ்வித நம்பிக்கை யில்லாமல் பக்தி செய்கிறவன் ஒருநாளுங் கடைத்தேறமாட்டான். மங்கோ என்னும் ஓர்வெள்ளைக்காரன் சில வருஷங்களுக்கு முன் ஆப்பிரிக்கா கண்டத்தில் ஓர் பாலைவனத்திற் செல்லுகையில் பகல் பதினைந்து நாழிகையாயிற்று. சூரியோஷ்ணம் பொறுக்க முடியவில்லை. தாகத்தின் கொடுமையும் அதிகமாயிருந்தது. தான் புறப்பட்ட விடத்துக்குத் திரும்பிப்போவதுஞ் சாத்தியமாயில்லை. நாவரண்டு நெஞ்சுலர்ந்து நடந்து சலித்துக் களைத்து தரையில் விழுந்து விட்டான். இனி என்னசெய்கிறதென் றெண்ணமிட்டுக் கொண்டிருக்கும் மங்கோ தன்னருகில் பச்சென்றிருந்த ஓர் செடியைக்கண்டு அதிசயித்து இந்தப் பாலைவனத்தில் பசுமை நிறம் வாய்ந்த இந்தச்செடியை உண்டாக்கிப் பாரிபாலிக்குங் கடவுள் தாம் சிருஷ்டித்த மனிதரூபமாகிய என்னைத்தானா கைவிடுவார். கட்டாயமாக என்னைக் காப்பாற்றுவர் என்று தைரியத்துடன் ஈசுவரனை ஸ்தோதாத்திரஞ் செய்து நடந்து போனான். சிறிது தூரம் போவதற்குள் அவ்வழியாய் வந்த வர்த்தகர்கள் அவனைக்கண்டு ஆகாரங்கொடுத்து உபசரித்துத் தங்களுடன் அழைத்துக்கொண்டு போனார்கள். எந்த ஜாதியானாயினும் எந்த மதஸ்தனாயினுங் கடவுள் காபாற்றுவாரென்னும் உண்மையான நம்பிக் கைகொண்டால் சகல ஆபத்துகளினின்றுந் தப்பித்துக்கொள்வான். அவ்வித நம்பிக் கையில்லையேல் பக்தியுண்டாகாது. பரமபதமுங் கிடைக்காது.

எவன் தான் சொல்வதை சத்தியமென்று நீ நினைக்கும்படி பலவித பிரமாணங்கள் செய்கிறானோ அவன் பொய் சொல்லுகிறா னென்பது நிச்சயம். இல்லையேல் அவ்வளவு சிரமப்பட்டு சத்தியஞ் செய்வதற்குக் காரணமில்லை யன்றோ?

ஓர் துணியில் எண்ணெய்க்கறை பட்டிருப்பதை யறிந்த புத்திமான் அதை நீக்குவதற்கு உடனே உபாயந்தேடுவன். அதை விட்டு இந்த எண்ணெய்க்கறை ஏன் பட்டது? எப்போது பட்டதென்று கேள்வி கேட்பவன் மூடனே. இதைப்போல் அனேகர் நம்மை ஏன் கடவுள் சிருஷ்டிக்கவேண்டும்? சிருஷ்டியாமலிருந்தால் பாபஞ் செய்யமாட்டோமேயென்று அநாவசியமான கேள்வி கேட்கிறார்கள். அது பிசகு. இனி ஜெனன மரண துக்கங்களுண்டாகாதபடி முயற்சி செய்வதன்றோ சிலாக்கியம்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று படித்திருக்கிறோம். ஜெகன் மாதாவாகிய பரமேசுவரியை ஸ்தோத்திரஞ் செய்வதே நாம் செய்ய வேண்டிய முதற்கடமை. ஈசுவரியைத் தியானஞ் செய்தால் ஸகல தேவர்களும் நமக்கு கிங்கரர்களாயிருந்து ஊழியஞ் செய்வார்கள். அன்றியுங் குழந்தை பசிக்கிறதென்றால் உடனே ஓடிவந்து அன்னமளிப்பவள் தாயேயன்றி வேறல்லர். தாயின் கருணைக்கு ஒப்பான வேறொன்றில்லை. ஆதலின் சர்வலோக ஜனனியாகிய ஸாக்ஷாத் அகிலாண்டேசுவரியை நாம் ஸதா தியானிக்கக் கடவோம்.'

"ஊத்தைக்கிடங் கொடுத்தாலும் வார்த்தைக்கிடங் கொடுக்க லாகாது" என்பது பெரியோர் வாக்கியம். பிறர் நம்மிடங் குறை காணாதவாறு நாம் ஒழுகவேண்டும், ஆயினும் எதார்த்தவாதி வெகு ஜனவிரோதி யென்றிருப்பதால் உண்மையைச் சொல்லுமிடத்து அதற்கு மாறாக நடக்கும் பேர்வழி நமக்கு விரோதியாகவே ஏற்படுவன். அவன் நியாயவாதஞ் செய்தால் மட்டும் நாம் விடையளிக்க வேண்டுமேயன்றி கேவலம் பொறாமையாலும் பொருளாசையாலும் வாயில்வந்தபடி வழங்கத்தகாத வசைமொழிகளைக் கூறுவனாயின் அப்படிபட்டவனைக் கண்டு ஐயோ இவனுக்குப் பகவான் இவ்வளவு அறியாமையை ஏற்படுத்தினாரே என்று அவன் விஷயமாய் மிகுந்த இரக்கம் பாராட்டவேண்டும். இதுவே. அறிவாளிகளின் இலக்ஷணம்.

"கோட்டைப்பிள்ளையாரே கேட்டுக்கொள்?" என்ற ஓர் பழமொழியுண்டு. இதன் வரலாற்றைச் சற்று விசாரிப்போம். ஒரூரில் ஒரு பிராமணனும் அவன் மனைவியும் அன்யோன்யமாய் வாழ்ந்து கொண்டிருந்தனர். அவ்வாறிருக்கையில் எதிர்வீட்டா னொருவன் பிராமணனது மனைவியின் மேல் மோகமுற்று பலவித தந்திரங்களால் அவளது பிரியத்தை அடைந்தான், ஆயினும் புருஷன் எப்போதும் வீட்டை விட்டகலாமலிருந்ததால் இருவருக்குந் தக்கசமயம் வாய்க்கவில்லை. இதையறிந்த பிராமணமாது ஓர் யுக்தி செய்தாள். ஒரு நாள் தன் புருஷனை நோக்கி பிராணநாதா, என்மனதிலோராசை யிருக்கிறது, அதைத் தீர்க்கவேண்டியது உமது கடனன்றா.

"சாலுக்குப் பதமான முள்ளும், பல்லுக்குப் பதமான கல்லும்" எனக்கு வேண்டும். நீர் எங்கேயாவது சென்று அவ்விரண்டு வஸ்துக்களையும் தேடிக்கொண்டு வாருமென்றாள். நாயகியின் ஆக்ஞையைத் தள்ள முடியாத மூடப் பிராமணன் அந்தக்ஷணமே புறப்பட்டு ஊரூராய்ச் சென்று தரையிற்கிடக்கும் பலவித கற்களையெல்லாம் வாயிற்போட்டுப் பல்லால் கடித்துப் பார்த்தான். ஒரு கல்லாவது பதமாயில்லை. காட்டிலும் படுகையிலுஞ்சென்று ஒவ்வொரு முள்ளையுந் தன் காலில் குத்திப்பார்த்தான். ஒன்றும் பதமாயில்லை. இவ்வாறு இரண்டு வருஷம் அலைந்தலைந்து மனம் வருந்தி ஓர் நாட் காலமே ஆற்றங்கரையில் உள்ள முட்களையுங் கற்களையும் பரீக்ஷித்துப் பார்க்கையில் விவேகியான வேறொரு பிராமணன் அவரைக் கண்டு சங்கதியை அறிந்து அடியில் வருமாறு கூறலுற்றார்.

"ஐயா, நீர் சூதுவினை அறியாதவர். பெண்சாதியின் மேலுள்ள அத்யந்தப் பிரீதியால் லௌகீக விஷயங்களை முற்றும் மறந்தவர், உமது மனைவியின் துர்

நடத்தையை உமக்கு பிரத்யக்ஷமாகக் காட்டுகிறேன், என்னை உமது கிரகத்திற்கு அழைத்துப்போம்" என்றார். ஒருவாரத்தில் இரண்டு பேர்களும் ஊரையடைந்தனர். அந்தி நேரத்தில் விவேகி மூடப் பிராமணனை விரைக்கோட்டையில் வைத்து மூடித் தலையில் சுமந்துகொண்டு பிராமண ஸ்திரீயிடஞ் சென்று "அம்மா, இன்றிரவு மட்டும் உங்கள் தெருக்திண்ணையில் படுத்துக் கொள்ள இடந்தாருங்கள். இந்த விரைக்கோட்டையை மட்டும் உள்ளே வைக்கிறேன்" என்றார். பார்ப்பினி 'ஐயா குளிர்மிகுதி தெருத் திண்ணையில் படுக்கவேண்டாம். உள்ளே படுத்துக்கொள்ளும், நானும் என் புருஷனு மட்டுமிருக்கிறோம். நாங்களிரண்டுபேரும் ஸங்கோசமின்றி உல்லாஸமாயிருப்பது வழக்கம்' என்றாள். விவேகி 'அதனாலென்ன? கர்நாடக அசடுகளன்றோ ஸங்கோசப்படுவார்கள். நானும் என் மனைவியும் மத்துப்பிளப்போம், குக்ஷிக்கட்டானாடுவோம்' என்றார், பிராமணஸ்திரீ மிகுந்த ஸந்தோஷமடைந்தாள். இரவு 8 மணி ஆயிற்று. எதிர் வீட்டான் உள்ளே நுழைந்தான். பிராமணஸ்திரீ அவனுடன் ஸரஸமான வார்த்தைகள் பேசிக் கொண்டிருக்கையில் 'அந்தப் பைத்தியம் வெளியேபோச்சே. இரண்டு வருஷம் ஆச்சே. இனி எப்போது வரும்' என்றான். வியபிசாரி 'அந்தப்பிணத்தைப்பற்றி இப்போ தென்ன கவலை. அது பல்லுக்குப்பதமான கல்லுங் காலுக்குப்பதமான முள்ளுக் தேடிக் கொண்டிருக்கும். இனி வருகிறதேது' என்றாள். உடனே விவேகி 'கோட்டைப்பிள்ளையாரே கேட்டுக் கொள்' என, மூடப்பிராமணன் விரைக்கோட்டையினின்று எழுந்து ஒரு தடியைத் தூக்கிக்கொண்டு அடி, முண்டே, அப்படியா ஸங்கதி' யென்று அவளையுஞ் சோரபுருஷனையுங் கைசலிக்குமட்டும் அடித்துப் புடைத்து இருவர்களையும் வீட்டைவிட்டோட்டி குணவதியான வேறொரு பெண்ணை விவாகஞ்செய்து சுகஜீவியாய் வாழ்ந்தான். இதனால் புருஷர்கள் ஸ்திரீகளின் வார்த்தையிலும் நடவடிக்கையிலும் அதிக நம்பிக்கை வைக்கலாகாதென்றுந்து ஷ்டசுபாவமுள்ள பெண்சாதிக்குக் கடைசியில் கட்டாயமாய் துக்கமுண்டாகுமென்றும் ஏற்படுகிறது.

ஆங்கிலேய விக்யார்த்திகள் நல்ல நாகரீகமும் தெளிவான புத்தியும் அடைந்திருக்கிறார்களென்பதில் ஐயமில்லை. அனேகர் பி.ஏ. எம்-ஏ. பி-எல் முதலிய பெரிய பரீக்ஷைகளில் தேறி ஏராளமான திரவியத்தை ஸம்பாதிக்கிறார்கள். அதுவும் ஸந்தோஷமே. நியாயந் தெரிந்தவர்களாய் மரியாதையில் மிகுந்தவர்களாயிருப்பது மட்டும் போதுமென்று ஷெ வித்யார்த்திகள் நினைத்து முன்னோர்கள் அனுஸரித்த ஆசாரங்கள், மதம் ஸம்பிரதாயம் முதலியவற்றை முற்றிலும் மறந்து கைசோர விடுகின்றனர். ஐயோ, இந்நாகரீகர் செய்யும் அக்கிரமத்தை நினைக்குந்தோறும் அன்னிய ஜாதியாருக்கே அதிவெறுப்பு உண்டாகிறதெனின் ஆரியர்களாகிய அவர்களின் தாய் தந்தையர் பிதுர்க்கள் முதலானோர் நேரில் பார்க்குமிடத்து என்ன பாடுபடார்கள்! முன்னோர்களாகிய ஆரியர்களின் அடிவயிறு பற்றியெரியுமே. எத்தனையோ நாளாக வெயிலிலும் மழையிலும், பனியிலும், இருந்து உலர்ந்து வருந்தி சருகுகளைப் புசித்து தீக்ஷண்யமான புத்தியினாலும் மிகுந்த ஞானத்தாலும் பல நல்வழிகளைக்கண்டுபிடித்து சாஸ்திரங்களில் எழுகி ஆன்ஹிகம் ஏற்படுத்தி விதிகளுண்டாக்கி தங்கள் ஸந்கதியார் கடைத்தேறட்டும் ஆரியமதங் குறைவின்றி எந்நாளும் நீடித்தி வாழட்டும் என்னுந் தீர்க்கமான ஆலோசனையுடன் ஏற்படுத்தியிருந்த அவைகளைச் சிறிதேனும் மதியாமல் மனவைக் கருங்கல்லாக்கி மானத்தை யொழித்து மனச்சாக்ஷியை அழித்து ஐயோ, வெகுதாராளமாக ஈனஜா

தியாரிடங் காபி, டீ, கோகோ முதலிய பானங்களைப் பெற்ற மிகு ஸம்பிரமமாக உட்கொண்டு மதப்பிரஷ்டர்களாய், ஆசாரஹீனர்களாய்ப் போகின்றனரே! அப்பன் பாட்டன் பாடுபட்டு சேகரித்த ஆஸ்திக்குமட்டுந் தாங்கள் வார்ஸுகளென்று கோர்ட்டில் வியாஜ்யஞ் செய்யத் தெரிகிறதே. பரம்பரையாய்ச் சொந்தமாயிருக்கும் ஞானஸம்பத்தையடைய வேண்டுமென்னும் எண்ணமுண்டாகவில்லையே. ஐயோ! இப்படியா நமது குழந்தைகள் விவேகமின்றிப்போக வேண்டும்? ஜெகதீசா இவர்களுக்கு நல்லவழி காட்டாயா, புத்தியை ஆரியமத ஸம்பிரதாயங்களில் நாட்டாயா என்று மனமுருகிப் பகவானை நோக்கி ஆன்றோர்களின் முன்னோர்கள் கதறுவார்களன்றோ? ஆதலின் படிப்புடன் ஆசாரமாயிருப்பது அவசியமென்பதை ஒவ்வொருவரும் அறியக்கடவர்.

பித்தம் அதிகரித்தால் பைத்தியமாகும். பைத்தியமுண்டானால் சித்தம் ஸ்வாதீன மற்றுப்போகும். ஆதலின் அநேகமாய் புத்தி ஸ்திரமில்லாத போதும் மனம் நிலை தடுமாறும் போதும் பைத்தியம் உண்டாயிற்றென்றே சொல்ல வேண்டும், மனிதர்களுக்குக் கோபம் உண்டானால் சித்தம் ஸ்வாதீன மாயிருக்கிறதில்லை, அதிக சந்தோஷமாவது வியசனமாவது உண்டானால் மனம் நிலை தடுமாறுகிறது. திடீரென்று கிடைத்த பணம் அதிகாரம் முதலியவற்றால் கர்வமுண்டாகி புத்தி ஸ்திரமின்றிப்போகிறது, அதிபால்யர்களும் நோயாளிகளும் விருத்தர்களும் நீதி நெறி தெரியாமல் வாயில் வந்தபடி உளருகிறார்கள், அவர்களின் சித்தமும் பேதிக்கிறது, மேற் கூறியவர்களுக்கெல்லாம் பைத்தியமுண்டென்று தெரியவருகிறதால் பெரியோர்கள் அவர்களிடங் கோபங் கொள்ளுகிறதுல்லை.

பாபங்களெல்லாவற்றிலும் ஒருவரை அவதூறு செய்வது மிகக்கொடியது. ஒரு தீக்குச்சியைக்கிழித்து வைக்கோற் போரில் வைப்பதால் போர் முழுவதும் எரிந்து தீனியின்றி மாட்டின் வாயில் மண் விழுகின்றது. ஒரு தீக்குச்சியைக் கிழித்து கூரையில் வைப்பதால் அனேகவீடுகள் பற்றி யெரிந்து பண்டங்கள் கரிந்து வஸிக்க இடமின்றி ஜனங்கள் தவிக்கின்றனர். வெகுசிரமப்பட்டு பலர் போட்டிருக்கும அணையை ஓரிடத்தில் திறந்து விட்டால் ஜலப்பிரளயமாகி பயிர்களுங் கிராமங்களும் முழுகிப்போகின்றன. ஊமத்தை, எட்டிக்கொட்டை; அரளிவேர் முதலிய விஷங்களைக் கொடுப்பதால் உயிருக்கே ஹானி உண்டாகிறது. மேற்கூறியதிஷ்ட காரியங்களைச் செய்கிறவர்களுக்கு மஹாபாபம் நேரிடுவதுடன் ராஜதண்டனையுங் கிடைக்கிறது. இவைகளெல்லாவற்றிலுங் கொடுமையானது அவதூறு; எத்கனையோ நாளாக நன்னடைத்தையாலும் ஒருவன் அடைந்த நற்பெயரைக் கெடுக்கவெண்ணங்கொண்டு அவதூறூட்டும், ஆரியமத மகாபாதகர்கள். பிராணனை விட மானம் பெரிதாகையால் மானத்தைக்கெடுக்குஞ் சொற்களை வழங்குவது கொலையைக்காட்டிலும் பெருத்த குற்றம். ஆதலின் அவதூறு செய்கிறவர்கள் கொலையாளிகளுக்கு அண்ணன்கள். ஒருவர்மேல் அபூத கற்பனையாய்ப் பழிபோடுவதங் குற்றங் கூறுவதும் அவ்வாறு கூறுபவரின் செல்வத்தையும் புகழையுங் கெடுக்குமென்பதை விவேகிகள் அறிந்திருக்கின்றனர். அவிவேகிகள் அதையறியாமல் நல்லோரைப் புறங்கூறி நிந்தித்துப் பாபிகளாகின்றனர்.

காசியில் வெள்ளைக்காக்கை தலைகீழாய்ப் பறக்கிறதென்றால் அதை நம்பும் பேர் வழிகளுமுண்டு. இதோஜலமிருக்கிறதென்று கானலைக்காட்டி ஏமாற்றுவோர் சிலர். தாமிரததைப் பொன்னாக்கித் தருவேனென்று கூறுவோர் சிலர். ஒருகரன்ஸிநோட்டைப்போல் இன்னொன்று சிருஷ்டிப்பேனென்று சொல்வோர் சிலர். இப்பொய்யர்கள் கூறும் மொழியை நம்பி மோசம் போகலாகாது. திடீரென்று வந்து நமக்கும் பிறருக்கும் பிரதியுபகாரத்தை இச்சியாமலே நன்மை செய்யப் பழகிய பிறகே அவரது குணந்தெரியுமாதலின் யாரையும் உடனே நம்பிப் பொருளைக் கொடுப்பது நன்றல்ற.

"மாதவனை மனனஞ்செய்" என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். ஸர்வ ஸம்பத்துகளையும் அளிக்க வல்லவராகிய ஸாக்ஷாத் மகாவிஷ்ணுவின் கிருபையுண்டாகுமாறு பிரதிதினமும் அவரைப் பத்திர புஷ்பங்களாற் பூஜிப்பதும் வாயால் வழுத்துவதும் மனதால் ஸ்பரிப்பதும் அவசியம். இவ்வாறு விஷ்ணுபக்திசெய்கிறவர்கள் இகலோகத்தில் ஸகல போகங்களையும் அனுபவித்து பரலோகத்தில் பகவானுடைய ஸமீபத்திலிருந்து ஸதா ஆனந்தத்தை யனுப விக்கின்றனர். ஆதலின் நாம் கேசவா, நாராயணா, மாதவா, கோவிந்தா என்ற திவ்யநாமங்களை ஸதா உச்சரிக்கக் கடவோம்.

"ஆரியக்கூத்தாடினாலுங் காரியத்தில் கண்" ணாயிருப்பது நன்று, நமக்குப் பலவித லௌகீக காரியங்களிருந்தாலும், எப்போதும் பகவானையே நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். அதற்காக நமது முன்னோர்கள் செய்திருக்குஞ் சிறந்த யுக்தியைப் பாருங்கள். மனுஷ்யன் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போதே 'ஹரி ஸ்ரீஹரி' என்று எழுந்திருக்க வேண்டுமாம். இதனால் பகவானுடைய நினைவு வருகிறது. பிறகு குளிரைப்பாராட்டாமல் காவேரி முதலிய நதிகட்கு ஸ்நானஞ் செய்யச் செல்லும் போது, 'நாராயணா மகாதேவா' என்று சொல்லிக்கொண்டே போகவேண்டும். அதன் பின்னர் ஆற்றில் ஸ்நானஞ் செய்யும் போது 'ஹரி' என்று சொல்ல வேண்டும், பிறகு ஸந்தியா வந்தனம் ஜெபம் முதலியவற்றில் பகவானுடைய ஸ்மரணையே மிகுந்திருக்கிற தென்பதை நாம் சொல்ல வேண்டிய தில்லை, வீட்டுக்கு வந்தவுடனே பூஜையாரம்பம். அது ஆனவுடன் ஸ்ரீமத் ராமாயண பாராயணம். இவைகளெல்லாம் முடிந்தவுடன் போஜனம். இந்தக் காலத்திலாவது பகவானை ஸ்மரிக்காம லிருக்கலாமோமோ வெனின் முடியாது. ஒவ்வொரு கவள அன்னத்தையும் வாயிற்போட்டுக்கொள்ளும் போதே 'கோவிந்த கோவிந்த, கோவி ந்தா' வென்று சொல்லவேண்டும். போஜனமான பிறகு ஆசமனீயம், உபநிஷத், பகவத்கீதை முதலிய வேதாந்த கிரந்தங்களைப் படிதுக் கொண்டிருப்பது. அஸ்தமனமானவுடன் ஸந்தியா வந்தனம், சிவதரிசனம், ஔபாஸனம், போஜனம், புண்பக்கதாசிரவணம், பகவந் நாமஸ்மரணை இவ்வாறாக ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நாழிகையும் ஒவ்வொரு நிமிஷமும் நாம் பகவானை ஸ்மரித்துக் கொண்டே யிருக்க வேண்டுமென்ற பரமோத் திருஷ்டமான எண்ணத்துடன் நமது முன்னோர்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர். அத்துடன் விட்டார்களா நம்மை? வில்வ மரத்தைக் கண்டால் பிரதக்ஷிணாம். வில்வ தளத்தைக்கண்டால் சிவனாகப் பாவித்து 'ஹர ஹர' என்று சொல்லவேண்டும். துளஸிச் செடியைக் கண்டால் நமஸ்காரஞ் செய்ய வேண்டும். அரசமரத்தைக் கண்டால் நூற்றெட்டுப் பிரதக்ஷிணம். அதன்

அடியில் பிரம்மாவும், மத்தியில் விஷ்ணுவும், நுனியில் பரமசிவனும் வஸிக்கிறார்களாம். கோபுரத்கைக் கண்டால் நமஸ்காரம், பெரியோரைக் கண்டால் கும்பிடு, குழந்தைகளைக் கண்டால் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் நினைவு. இப்படியாக எதைக் கண்டாலும் ஈசுவரனென்று தோன்றும்படியும் ஓர்வித பக்தி ஜனிக்கும் படியும் நமது முன்னோர்கள் செய்திருக்கின்றனர். இவ்வளவுதானா? இன்னும் அனேக மிருக்கின்றன. ஆகாசத்தைப் பார்ப்போம். சூரியனைக் கண்டவுடன் நமஸ்காரம். கருடனைப்பார்த்தால் ஸ்ரீஹரியின் ஞாபகம். பூமியைப் பார்ப்போம். பன்றி திருமால்வதாரம். நாய் பைரவ மூர்த்தி. விருஷபத்தைக் கண்டால் பரமசிவனுடைய நினைவு யானையைக் கண்டால் கஜேந்திர ஆழ்வானுக்கு மோக்ஷமளித்த ஆதிமூலப் பொருளாகிய எம்பெருமானுடைய நினைவு. குரங்கைப் பார்த்தால் ஹனும வாகனராகிய ஸ்ரீ கோதண்டபாணியின் நினைவு. ஜலத்தைப் பார்ப்போம். அதில் என்ன விருக்கிறது? மீன்கள் மத்ஸயாவதார மெடுத்த மகாவிஷ்ணுவின் நினைவு உடனே உண்டாகிறது. இம்மாதிரியாக உலகெங்கும் ஈசுவரமயமாய்த் தோன்றும்படியும், நமக்கு 'ஸர்வம் பிரம்மமயம் ஜெகத்' என்னுஞ்சிறந்த அத்வைத உண்மை புலப்படும் படியும், ஸகல பிராணிகளிடத்தும் அன்பு உதிக்கும் படியும் வைகுண்டநாதரிடம் பக்தி ஜனிக்கும் படியும் உபாயஞ் செய்த நம்முன்னோர்களின் மதத்தையும் ஆசார ஸம்பிரதாயங்களையும் நாம் மறக்கலாமா? அன்யமதப் படுகுழியில் விழுந்திறக்கலாமா மூடர்களன்றோ அவ்விதஞ் செய்வார்கள்? விவேகிகளாகவிருக்க விரும்பும் நாம் பெருமை தங்கிய நமது மதத்தையும் ஆசாரங்களையும் அனுஸரிக்து பரம பக்தர்களாய் திவ்ய ஞானிகளாய் விளங்கி முடிவில் முக்தியை அடையக்கடவோம்.

“வாதத்தில் பல விதமுண்டு" ரஸவாதம், திமிர்வாதம், விவாதம், நியாயவாதம், பித்தவாகம் முதலியன. இவைகளெல்லாவற்றிலுங் கொடிதாகியது பிடிவாதம். பெரியோர்சொல்லும் ஹிதத்தைக் கவனியாமல் துஷ்டகாரியங்களைச் செய்வதில் பிடிவாதமுடைய பேதையர்கள் அந்தோ நரகத்தில் அழுந்தி அவஸ்தைப் படுகின்றனர். முற்காலத்தில் நந்த கூபம் என்னும் ஓர்கிணற்றில் நயவசனன் என்றொரு தவளையிருந்தது. இதற்குப் பிடிவாதன் என்றொரு நண்பனுண்டு. இப்பெருந்தவளை சாலையோரத்தில் மழைத்தேக்கத்தில் வஹித்துக் கொண்டிருந்தது. நயவசனன் அதை நோக்கி 'நண்பா இங்கேயிருப்பது பிசகு உனக்கு அபாயம் நேரும் ஆனதால் என்னுடன் கிணற்றுக்கு வந்து வாழ்ந்திரு. உனக்கு யாதொரு குறைவும் நேராது. ஆகாரங்களும் அபரிதமாசக் கிடைக்கும்' என்றது, பிடிவாதன் அதற்குச் சமமதியாமல் 'நான் வெகு நாளாய் இங்கேயிருக்கிறேன். ஆதலின் இதைவிட்டுப் பெயர மாட்டேன்' என்றது. உடனே நயவசனன் 'நேசா நீ உன் பெயருக்கேற்ற பிடிவாத குணத்தையே கொண்டிருக்கிறாய். அது பிசகு. என் வார்த்தையைத் தள்ளாதே. இனி கோடை காலம் வரப்போகிறது. தண்ணீர் வற்றிப்போம், நீ என்னுடன் வந்து விடு' என பெருந்தவளை ஸம்பதிக்கவில்லை, நயவசனன் தன் வீடுபோய்ச் சேர்ந்தது. சில நாள் கழித்து ஓர் பாரவண்டி சாலையிற்போக பெருந்தவளை அதன் சக்கரத்திலகப்பட்டு உயிரிழந்தது. அதுபோல் இதமுரைப்பவர்களின் வார்த்தைக் கிணங்காத பிடிவாதக்காரர் பதங்கெட்டு நலிவுறுவர்.

"எமனெனும் கள்ளன்" ஒன்பது வாகலையுடைய நமது சரீரமாகிய கோட்டைக்குட்புகுந்து நடுவிலிருக்கும் விலைமதிக்கத்தகாத ஜீவன் என்னும் இரத்தினத்தைத் திருடுவதற்காக நாட்களை யெண்ணிக்கொண்டு சுற்றி வருகிறான். ஆதலின் நாம் பகவந்நாமத்தைச் சொல்லி ஜாக்கிரதைப்பட வேண்டுமென்று ஓர் பெரியவர் கூறுகிறார்.

“மக்கள் மனம்வேறு செய்கை வேறு” நாம் சொல்லுகிறபடி அனுஷ்டிப்பதில்லை. ஒரு நாள் ஓர் தத்துவ சாஸ்திரி கடற்கரையோரமாய் நின்றிருந்தான். சுமார் இரண்டு மைலுக்கப்பால் ஓர் கப்பல் வந்து கொண்டிருந்தது. சில நேரத்துக்கெல்லாம் அக்கப்பல் உடைந்து வெகுஜனங்கள் சமுத்திரத்தில் அமிழ்ந்து போனார்கள். அப்போது அந்த தத்துவ சாஸ்திரி ஆகாயத்தை நோக்கி 'பகவானே யாரோ ஒரு மனிதன் செய்த தப்பிதத்துக்காக எல்லோரையுங் கடலில் அழுத்தி விடுவது நியாயமா?' வென்றான். அந்த சமயத்தில் இவன் நின்று கொண்டிருந்தவிடத்தினின்று எறும்பு கூட்டங்கள் புறப்பட்டு தேகத்திலேறத் தொடங்கின. அவற்றில் ஓர் எறும்பு தத்துவசாஸ்திரியை வெடுக்கென்று கடித்தது. அந்த சாஸ்திரிக்கு கோபம் உண்டாகி எல்லா எறும்புகளையும் ஒருங்கே தேய்க்துக் கொன்று விட்டான். உடனே பகவான் அவனிடம் வந்து 'அடே, சில நிமிஷத்துக்கு முன்னால் ஓர் மனிதன் செய்த குற்றத்துக்காக எல்லோரையுங் கடலில் அழுத்துவது நியாயம், வென்று கடவுளை நோக்கி நொந்து கொண்டாயே. அடே உன்னை ஒரு எறும்பு தானே கடித்தது. நீ ஏன் எல்லா நீ ஏன் எல்லா எறும்புகளையும் ஒருங்கே தேய்த்திக் கொன்று விட்டாய். தான் சொல்லும் வண்ணம் அனுஸரித்துக் காட்டுவதன்றோ விவேகிகளின் கடமை' யென்றார். தத்துவசாஸ்திரி வெட்கித் தலைகுனிந்தான்.

“மனிதர்களுக்குரிய அஷ்டபோகங்களில் பெண்கள் ஒன்று.” எந்த வஸ்துவால் நாம் சுகத்தை யடைகிறோமோ அந்தவஸ்துவை வெகு ஜாக்கிரதையாய் காப்பாற்றுவதவசியம் ஒவ்வொருவனுந் தன் பெண் சாதியால் சுகத்தை யடைகிறதுடன் இல்லறத்கையும் நடத்துகிறதால் அவளிடம் பிரீதியாயிருக்க வேண்டிய தவசியம். ஒரு சமயம் அதிகமான விசுவாஸம் பாராட்டுகிறதும் மற்றொரு சமயம் மத்டது நாயை அடிக்கிறது போல் பொத்துகிறதும் சுத்தப் பிசகு. எப்போதும் ஒரு தன்மையாயிருப்பது நன்று. ஸ்திரீகள் குற்றஞ் செய்யாத சுத்தர்சளென்று நாம் சொல்லவில்லை. ஆனால் புருஷர்களுங் குற்றஞ் செய்யாம லிருக்கிறதில்லை. குற்றஞ் செய்கிறதென்பது மனிதப்பிறப்பையுடைய ஒவ்வொரு வருக்கும் இயல்பு. குற்றமே செய்யாத மனுஷ்யனும், குற்றமே செய்யாத ஸ்திரீயும் உலகத்திலில்லை. குற்றஞ் செய்வதானது அவரவர்களின் விவேகத்துக்கும் அனுபோகத்தும் ஏற்றபடி அடைந்திருக்கிறது. ஆதலின் புருஷனாயிருப்பவன் தன்னை மட்டுஞ் சுத்தனென்றெண்ணித் தன் பெண் சாதி செய்வதெல்லாங் குற்றமென்றுன்னி அவளைச் சிக்ஷிக்கத்துணிவது நியாயமல்ல. தானிருக்குங் கௌரவத்தாலும் பெருமிதமான நடையினாலுந் தன்னிடம் பெண்சாதிக்கு மதிப்புண்டாக்க வேண்டுமேயன்றி மூர்க்கத்தனமாய் அவளை அடித்து வசப்படுத்த எண்ணுவது அறியாமையேயாம். கோபத்தால் சிற்சில ஸமயங்களில் சித்த ஸ்வாதீனமற்று பெண்சாதியின் மிருதுவான சரீர'ரத்தில் தன்

பலமெல்லாங்கொண்டு அடிப்பது உயிருக்கு ஆனியுண்டாக்கி ஹத்திதோஷம் நேருவதுடன் இராஜ தண்டனையுங் கிடைக்கச் செய்கிறது. ஆதலால் உத்தமனாயிருப்பவன் பெண்களை அடித்து உபத்திரவிக்காமல் தன் கம்பீரமான நடத்தையால் இல்லறத்தை நடத்துவான். ஒருவேளை பெண்சாதி மிகுந்த துஷ்டையாயிருப்பின் அவளை அடியாமல் தான் விலகிப்போவது நன்று. "பத்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானால் எத்தாலுங் கூடியிருக்கலாஞ் சற்றேனும் ஏறுமாறாக யிருப்பாளேயாமாயிற் கூறாமற் சன்யாஸங்கொள்' என்ற பெரியோர் வாக்கியத்தைக் கண்டு தெளிக.

அப்பன் மதப்பட்டான், ஆத்தாள் எதிர்ப்பட்டாள், நான் வெளிப்பட்டேன் என்று சொல்லுகிற வாக்கியப்படி புருஷன் தன் மதத்தை யடக்கிக் கொள்ள வேண்டி பெண்சாதி யுடனிணக்கி கர்ப் போறபத்தி செய்கிறான். பின்னர் 10 மாதம்வரையுங் கர்ப்பத்தைச் சுமந்து எத்தனையோ கஷ்டங்களை யனுபவித்து பிள்ளை பெற்று அதைப் பாலூட்டி வளர்த்து சீராட்டி புருஷனைப் புத் என்னும் நரகத்தினின் மீளச்செய்து அவனுக்கும் அவனுடைய பிதிர்க்களுக்கும் நல்லகதி கிடைக்கும்படி. செய்யும் மகோபகாரியான பெண் சாதியைத் தயவின்றி நடத்தும் புருஷர்கள் நன்றி கெட்டவர்களன்றோ? நமது நாட்டில் ஸ்திரீகளைக் கொடுமையாக நடத்துஞ்சுபாவம் ஆங்கிலேயபடிப்பு ஏற ஏறச் சற்று அடங்கி வருகிறது. ஆயினும் ஆங்கிலத்தைப் பயின்ற சில புத்திமான்கள் இன்னும் பழைய ஸம்பிரதாயத்தைக் கட்டியழுது பெண் சாதிகளைப்பொத்துகின்றனரே. ஐயா என்ன கோரமிது!!

"ஒற்றுமை உயர்வுண்டாக்கும்" சிலசகோதரர்கள் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொள்வதால் மூன்றாவது மனுஷ்யருக்கு இலாபத்தை விளைவித்துத் தாங்கள் நஷ்டமடைகின்றனர். இதற்கொரு கதை சொல்லுகிறோம். ஸஹரா என்னும். வனத்தில் ஓர் புலியுங் கரடியும் ஒன்று சேர்ந்து மான் வேட்டையாடின. ஒரு மான் மட்டும் அகப்பட்டது. மற்றவை ஓடிப்போயின. பிறகு இரண்டு மிருகங்களும் அம்மானை எனக்குனக்கென்று அடித்து ஒன்றோடொன்று சண்டையிட்டுக் காயமடைந்து மூர்ச்சையாகி கீழே விழுந்தன. அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஓர் நரி வெகு தந்திர சாலியாகையால் இனி இரண்டு பிராணிகளும் மூர்ச்சை தெளிந்தெழுந்திருக்க மூன்று ஜாமமாகு மென்றறிந்து யாதொரு சங்கடமுமின்றி இறந்துகிடந்த மானை தன் வயிறாரத்தின்று பசிதீர்ந்தது, புலியுங்கரடியும் நரியைக் கண்டு வயிறெறிந்தனவே யன்றி எழுந்து தடுக்க முடியவில்லை. இதனால் இரண்டு மூடர்கள் சண்டை போடுவதால் ஒரு கெட்டிக்காரன் இலாப மடைகிறானென்றேற்படுகிறது.

"மித்தை யெது?" இல்லாத பிரபஞ்சத்தை பிரம்மத்தில் ஆரோபிப்பது. மாயையென்பது யாது? எவள் வாஸ்தவத்திலில்லையோ அவள் மாயை. பிரம்மம் ஸத்யம். ஜகத்பொய். சொப்பனம், மாயை, கந்தர்வநகரம் இவை யெங்ஙனமோ அங்கனமே இப் பிரபஞ்சம் வேதாந்தங்களிலே விவேகியானவர்களாற் பார்க்கப்படுகிறது. யாதொரு சராசர பிரபஞ்சமாகிற இந்த த்வைதமானது மனத்தோற்றமே. மனோநாசமானால் த்வைதம் விளங்குகிறதில்லை. பிரம்மத்தைக்

காட்டிலும் அன்னியமாய் அற்பமுமில்லை. ஸகலஜெகத்தும் இல்லவே யில்லையென்பதாக உபநிஷத்துக்கள் கூறுகின்றன.

முற்காலத்தில் தஞ்சை ஸமஸ்தானத்தில் ஓர் வித்வானிருந்தார். அவருக்குக் கதை செய்யும் (காலக்ஷேபம் செய்யும்) திறமை வெகுவாயுண்டு. இப்போதுள்ள பாகவதர்களைப் போல் ஐம்பது ரூபா என்ற விலையேற்படுத்திக் கொள்ளாமல் சகல ஜனங்கட்கும் இனாமாகவே பகவானுடைய சரித்திரங்களைச் சொல்லிவந்தார். இவ்வாறு காலக்ஷேபஞ் செய்துவருநாளில் ஓர் நாள் திரௌபதி வஸ்திராப ஹாரணம் என்னுந் திவ்ய சரித்திரம் வந்தது. அப்போது பாகவதர் திரௌபதியை துச்சாஸனன் சபையில் மயிரைப் பிடித்திழுத்துக் கலைகளை யுரிந்து வாதைப்படுத் தினானெனறு சொல்லி வருகையில் எல்லா ஜனங்களுங் கண்ணீர் விட்டழுதனர். ஒரு பெரிய மனுஷ்யன் மட்டும் இடிஇடி என்று சிரித்து சந்தோஷித்தான். இவன் சிரித்து ஸந்தோஷித்ததைக்கண்டு பாகவதர் மிகுந்த கோபங் கொண்டு அடே மகாபாவி பதிவிரதா சிரோமணியாகிய திரௌபதியை துஷ்டப்பயலாகிய துச்சாஸனன் மயிரைப் பிடித்திழுத்து மானபங்கப் படுத்தி சேலையரிந்ததாக நான் சொல்லி வருகிறேன். அதைக் கேட்ட சகல ஜனங்களுந் துக்கமடைகின்றனர். அவர்களின் கண்களில் நீர் தளம்புகிறது. மகா பாபியான உனக்கு மட்டும் ஸந்தோஷம் வருகிறதோ? அடே உன் மனைவியை இந்த சபையில் யாரேனும் மயிரைப் பிடித்திழுத்து வஸ்திரத்தைக் களைந்து மானபங்கஞ் செய்தால் உனக்கு சிரிப்பு வருமாடா, பல்லையிளிப்பாயாடா என்றார், உடனே பெரிய மனுஷ்யருக்கு உண்டான துயரத்துக்கு அளவில்லை. இதனால் பிறருடைய துக்கததைக் கேட்டு சந்தோஷிப்பதும் க்ஷேமத்தைக் கேட்டு துக்கிப்பதும் மகாபாதக மென்றறிகிறோம்.

"பக்தி செய்தால் முக்தி எய்தும்" என்பது பெரியோர் வாக்கியம். எந்த பிராணிக்கும் பக்தி செய்ய பாத்யமுண்டு, ஓர் யாகஞ் செய்வதென்றால் எல்லோராலுமாகாது, பிராமணராயினும் ஏராளமான பொருளுதவிவேண்டும். பத்தினியொருத்தி கிட்டவிருக்க வேண்டும். அனேக பிராமணர்களுடைய தயவு வேண்டும். உலகப் பற்றையொழித்து துறவியாவதென்றால் எல்லோருக்கும் சாத்தியப்படாது. பற்பல சாஸ்திரங்களைப் படித்து ஸத்ஸகவாசஞ்செய்து குருகடாக்ஷமிருந்தாலொழிய ஞானமுண்டாகாது. மனுஷ்யஜென்மத்தைப் பெற்றாலன்றி ஞானத்தையடைய முடியாது, மேலுந் துறவறமென்பது நெருப் பாற்றில் மயிர்ப்பாலம் போன்று ஸாதிக்க சாத்திய மற்றதாய் மிகுந்த சிரமத்தை கொடுப்பது. மேற்கூறிய எவ்விதமான தொல்லையும் பக்தி மார்க்கத்திலில்லை. விபீஷணன் ராக்ஷசனாயினும் ராம பக்தியால் மிகுந்த செல்வம் பெற்றான். ஜடாயு பக்ஷியாயினும் ராம பக்தியால் மோக்ஷம் பெற்றது. சபரீ ஸ்திரீஜாதியாயினும் ராம பக்தியால் முக்தியடைந்தாள். ஹனுமார் குரங்காயினும் ராம பக்தியால் உயர்ந்த பதவி பெற்றார். ஜாம்பவான் கரடியாயாயிருந்தும் சிறந்த பக்தியால் சிரஞ்சீவி பட்டம் பெற்றார். குகன் ஓடம் விடுவோனாயினும் ராம பக்தியால் மேன்மையடைந்தான். வால்மீகர் வேடர் தொழிலைச் செய்தாலும் ராமராமவென்று ஸ்மரித்ததால் முனிபுங்வவரானார். அஹல்யை கல்லாயிருந்தும் ஸ்ரீராமரது பாத தூளியால் உயிர் பெற்றெழுந்தாள். இவ்வாறு சகலப்பிராணிகளும் ஸ்ரீராம பக்தியால் க்ஷேமமடைந்திருப்பதால் நாமும் ஸ்ரீராகவனைப் போற்றி உய்யக்கடவோம்.

"பொறாமை பொல்லாது" எருதுகளின் உபயோகத்துக்காகக் குவித்திருக்கும் வைக்கோற்போரில் ஓர் நாய் காவலிருந்து மாடுகளைக் கண்டு குலைத்து சீறிவிழுந்து தடுப்பது போல் நற்காரியஞ் செய்யும் உத்தமர்களை க்ஷேமடைய வொட்டாமல் துஷ்டர்கள் பலவித இடையூறுகளையுண்டர்க்கிக் தடுக்கின்றனர். போரைக்காக்கும் நாய் வீணான பொறாமையைக் கொண்டு குலைக்கிறதேயன்றி வைக்கோலைக் தின்னுகிறதில்லை. அதற்கு வேண்டிய வஸ்து வேறாகவிருக்கிறது. அந்த வஸ்துவுக்காக மாடுகள் போட்டி போடுகிறதேயில்லை, அப்படியிருந்தும் நாய்கள் மாடுகளைத் தீனிதின்னவொட்டாமல் தடுப்பது அவைகட்குள்ள துர்க்குணத்தின் விசேஷமன்றோ? இது போல் அவிவேகியானவன் தானாக ஓர் நற்காரியத்தைச் செய்து முடிக்க அசக்தனாயினும் அதே காரியத்தை இதரர்கள் செய்யக்கூடாதென்று குறுக்கிட்டுத் தடைசெய்வதில் சக்தியுள்ளவனாயிருக்கிறான் இதற்குக்காரணம் கூடப்பிறந்த தீக்குணமேயாம்.

“அன்னமும் காக்கையும்" அன்னம் வெண்மை நிறம். காக்கை கருநிறம். வெளுப்பு உவப்பாயுங் கறுப்பு வெறுப்பாயுமிருப்பதை காக்கை கண்டு தான் வெள்ளை யாவதற்கென்ன செய்யலாமென்று ஆலோசித்தது. அன்னப்பக்ஷியைக் காணும் போதெல்லாங் காக்கையின் அடிவயிறு அடிவயிறு பற்றி யெரிந்தது. கடைசியாக ஓர். யோசனை செய்தது, 'ஓ'கோ! இந்த அன்னப்பக்ஷி ஏரிக்கரை, ஆற்றங்கரை குளக்கரை ஆகிய நீர் நிரம்பியவிடங்களில் வசிக்கிறது. அடிக்கடி ஆற்றிலும் ஏரியிலும் ஸ்நானஞ் செய்வதால் வெண்ணிறத்தை யடைகிறது. அந்தப்படி நாம் இந்த ஊரைவிட்டு ஆற்றங்கரையிலும் ஏரிக்கரையிலும் வாஸஞ் செய்தால் நமது சிறகும் வெள்ளையாகும் என்றெண்ணி அவ்வாறே பிரயாணமாகி ஆற்றங்கரையில் குடியிருந்து அடிக்கடி ஜலத்தில் முழுகிற்று. கறுப்பு மாறவில்லை. ஊரில் குடியிருந்தாலும் யாரேனுஞ் சோறு போடுவார்கள், அதுவுந் தொலைந்தது. கடைசியில் கறுப்பு மாறாமல், வெளுப்புமாகாமல், சோறுகிடைக்காமல் ஆவியிழந்தது. இப்போதும் அனேக அண்டங்காக்கைகள் அடிக்கடி ஜலத்தில் முழுகுவதைக் காணலாம். இதனால் ஒருவனைப்போல் நாம் ஆகவேண்டுமென்று ஆசைகொண்டு நமக்கு இயல்பாயுள்ள ஸௌகரியங்களை யிழப்பது கேட்டைத் தருமென்று அறிந்துகொள்ளுகிறோம்.

“ஜீவன் தன்னைப் பிரமமென்றறிவ தெப்படிக்கூடும்?” என்பதற்கு ஆரியன் என்னுங்கனவான் கூறுகிறார். அரசன் மகனொருவன் குழந்கைப் பருவமுதல் ஓர்வேடனிடம் அகப்பட்டு வளர்ந்ததாய் வைத்துக்கொள்வோம். அவன் தன்னை வேடனென்றே நினைத்துக் கொண்டிருந்தான். ஒரு சமயம் வேறொருவன் அவனிடம் வந்து “ஐயோ, நீ வேடனல்ல அரசன் மகன்' என்றான், அதை நிச்சயமாவென்று கண்டறிவது வேடனது காரியம். வேடன் தன்னை ராஜனாக அறியவுங், காணவும், அனுபவிக்கவும் விரும்பினான். பின்னர் அவனை ராஜன் வீட்டிற்கொண்டு போய்விட அவன் ராஜன் றானெனத் தீர்மானிக்கப்பட்டுப் பட்டாபிஷேகமாய் ராஜனாய் விட்டான். இதில் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில் வேடனாயிரு தே தன்னை ராஜனாகக்காணவும் அறியவும், அனுபவிக்கவும் விரும்பி ராஜபதவியை யடைந்தானென்பது. வேடனாய் நின்ற ராஜன் அவ்வேடனாயிராமல் வேறு வகையாய் நின்று தன்னையறியவுங் காணவும் அனுபவிக்கவும் முடியாது, அது

போல் ஜீவன் ஜீவனாயிருந்தே தான் பிரமமென்பதை யறியவேண்டுமேன்றி வேறு வகையால் முடியாது.

"உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்" என்பது ஓர் அரிய பழமொழி. ஒருவன் தான் செய்யும் பாபங்களை நினைத்துப் பரிதாபப்படுவது நன்மை. ஆனால் அவ்வாறு பரிதாபப்பட்டு மறுபடியும் அவ்வித பாபங்களைச் செய்யத் துடங்குவது பிசகு. திருடீனோமேயென்று மனஸ்தாபப்பட்டு தன்னைத்தானே வெறுத்து கொள்ளுகிறவன் மறுபடி திருடாமலிருக்கவேண்டும் எல்லோரும் பிரதி தினமும் ஏதேனும் பாபங்களைச் செய்து கொண்டேயிருக்கின்றனர். ஒருவன் கொலை செய்கிறான். இன்னொருவன் திருடுகிறான். மற்றொருவன் பொய் சொல்லுகிறான், வேறொருவன் கர்மஞ் செய்யாது பிரஷ்டனாகிறான்.

"நாமத்தின் மகிமை" ராமா, கிர்ஷ்ணா, கோவிந்தா, மகாதேவா என்று சில நாமங்களை வாயாற்சொல்லிவிட்டால் பாபங்கள் தொலைந்து விடுமா? இதெல்லாஞ் சுத்தப் பொய்யென்று தற்கால ஆங்கிலபாஷா விற்பனர்களில் சிலர் கேள்வி கேட்கின்றனர். அவர்கள் புரோடோஸ்டாண்டு மதஸ்தாபனராகிய லூதர் என்னும் விவேகியின் வசனத்தைக் கவனிக்கக்கடவர். எனக்கு இயேசு கிறிஸ்துவைப்பற்றி யாதொன்றுந் தெரியாது அவருடைய பெயர் மாத்திரந்தெரியும். நான் அவரைப் பற்றிக் கேட்டதுமில்லை. அவரை நேரிற் கண்டதுமில்லை. ஆயினும் வேதத்திலுள்ளவற்றைக் கற்றவுடன் என் மனம் திருப்தியடைந்தது. ஆதலால் அவரை இனி நான் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படவில்லை. இவ்வுலகத்திலுள்ள துஷ்டர்கள் என்னைக்கொல்ல எத்தனிக்கையில் நான் அவருடைய நாமத்தையே துணையாகப்பற்றினேன். அந்த நாமத்தின் மகிமையால் என் உயிர் தப்பியது. ஸகல ஆபத்துகளினின்றும் நீங்கினேன். இதனால் நாமத்தின் மகிமையைப் புறமதஸ்தர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்களென் றறியலாம்.

நமது நாட்டில் வெகுநாளாக ஓர் துராசாரம் ஏற்பட்டிருக்கிறது. ஆங்லேய பாஷையும், ஆளுகையும் நாகரீகமும் விர்த்தியாகியும் இந்த துராசாரம் நீங்கவில்லை. இதை நீக்குவதற்காகப் பிரயத்தினப்பட வேண்டியது ஜனங்களும் அரசாங்கத்தாருமே. துராசரம் எதுவெனில், புருஷர்கள் ஸ்திரீகளை நடத்துங் கொடுமையே, சிறு வயதில் விவேகமுண்டாகாத பருவத்தில் பெண்களைப் புருஷர்களுக்கு விவாகஞ்செய்து கொடுப்பது கெட்ட வழக்கம், ஒரு வேளை வயது முதிர்ந்தபிறகு கல்யாணஞ் செய்விப்பது சாஸ்திர விரோதமெனில் பெண்களைப் பெற்ற தாய் தந்தையுங் குணவான்களாகிய பிள்ளைகளைத் தேடிக்கொடுப்பது அசாஸ்திரீயமல்ல. பானையல்ல, சட்டியல்ல, பண்டமல்ல, பதார்த்தமல்ல, ஒருபுருஷனை மாலையிட்டால் ஆயிசுபரியந்தம் அவன் வெறியனோ, தடியனோ குடியனோ, முரடனோ, மூர்க்கனோ வறியனோ, அவனுடன் இல்லறத்தை நடத்தி அவனிறக்குமுன்னே தான் மங்கில்யத்துடன் மரணமடையாத துரதிர்ஷ்டத்தைப் பெற்றால் அவனிறந்தபின் ஆயிசுபரியந்தம் அமங்கலியாயிருந்து ஸர்வ சுகங்களையும் வெறுத்து இருக்கவேண்டிய தலைவிதி வெகு காலமாக இந்து மாதர்களைப் பற்றிக்கொண்டிருக்கிறது. இதை ஸ்பஷ்டமாக வறிந்தும் அந்தோ மகாபாதகனான அப்பன் காசுக்காசைப்பட்டோ அல்லது நம்மைவிட்டுத்

தொலைந்தாற் போதுமென்ற வறுமையாலோ தன் பெண்ணை கேவலம் படிப்பற்ற மூடனுக்குக் கொடுக்கிறான். இதனால் அப்பெண் ஆயுசுபரியந்தம் வியஸனத்தையே படைந்து பரிதபிக்கிறது ஐயோ! இப்பெண் அழுதுவிடும் கண்ணீர் அப்பனைக்குத்தாதோ! அவனை அனலைப் போல் எரிக்காதோ? ஏழை அழுதகண் கூரியவாளை யொக்கும் என்ற பழமொழி பொய்த்துப் போமோ? சில தந்தைகள் பெற்ற கடனைக்கழிக்க வேண்டி பெண்களை முன்பரிசயமில்லாத பேர்களுக்குக் கல்யாணஞ்செய்து கொடுத்து எக்கேடு கெட்டாலுங் கெடட்டுமென்று சும்மா விருக்கின்றனர். இத்தகைய பெண்களின் நிலைமையையறிந்த புருஷர்களாவது விசுவாசம் பாராட்டுவது நன்றோமே. அதுவுமில்லை. நமது நாட்டில் ஸ்திரீகளைக் கல்யாணஞ் செய்தால் அவர்களை யடிப்பதற்கு உடனே ஸ்வதந்திரம் உண்டாய் விட்டதாக எண்ணி அற்பவிஷயங்களில் தங்கள் உத்தரவுக்கு மீறி நடந்ததாக நினைத்துப் பொத்துகின்றனர். இது கொடுமையன்றோ ஒருவனுக்குப் பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொடுத்தால் அவன் எந்த தேசத்துக்குப் போகிறானோ அங்கே தன் பெண்ணும் போகவேண்டுமே, அவளுயிரையும் வாழ்வையும் புருஷனிடம் ஒப்பிக்கிறோமே யென்னும் எண்ணங்கொண்டு தந்தை நல்ல யோக்யனாய், குணவானாய், கல்வியானாய், தெய்வபக்தி யுள்ளவனாய்ப் பார்த்து விவாகஞ் செய்து கொடுக்க வேண்டும். அப்படி செய்யாது பெண்களின் இஷ்டப்படி நடவாது, வரனது யோக்யதயை யறியறியாது கொடுப்பது துரசாரபென்பதிற் றடையில்லை.

நம்மையாளும் ஆங்கிலேயர் வகிக்கும் நாடாகிய இங்கிலாந்து தேசத்தில் 17-வது நூற்றாண்டில் ஜேம்ஸ் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவன் காலத்தில் ஜெப்ரேஸ் என்னும் ஜட்ஜியிருந்தார். அவருக்கு அநியாயாதிபதி யென்னும் பட்டமே தகுந்தது. தமது மதத்துக்கு விரோதமாயிருப்பவர் சிறிது குற்றஞ் செய்யினும் ரௌத்திராகாரமாய்க் கோபங்கொண்டு மரண தண்டனை விதிப்பார். அவ்வாறு விதிக்கு முன் அக்குற்றவாளிகளை வாயில் வந்தபடி திட்டுகிற வாடிக்கையு முண்டு. ஓர்நாள் ஒரு கூலிக்காரன் இவரிடம் அகப்பட்டுக்கொண்டான் ஜெப்ரேஸ் தமது பிரம்பை அவன் தேகத்துக்கு நேரே நீட்டி இந்தப் பிரம்பின் ஓரத்திலிருப்பவன் பெரிய போக்கிரி என்றார். குற்றவாளி அவரை நோக்கி "சுவாமீ, எந்த ஓரத்தில் நிற்பவன்' என்று கேட்டான். ஜட்ஜி வெட்கித் தலை குனிந்தார். தலைக்கு மிஞ்சின தண்டனையில்லை யென்பதால் மரண தண்டனை விதிக்கப் பெற்றவர்கள் பயமற்றுப் பேசுவார்கள். அவர்களிடம் நியாயாதிபதி வாயாடுவது கஷ்டமாய் முடியும்.

ஸ்ரீநகர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் இரஞ்சித சிங்கு என்னும் ஓர் அரசனுண்டு அவன் பிறந்தபோது ஜாதகஞ் கணித்த ஜோஸ்யர் அவன் 25-வது வயதில் சண்டைபோட்டு காயமடைந்து இறந்து போவானென்றார். ஷை யரசன் தாய் தன் குழந்தையைக் காப்பாற்றவெண்ணி அதை அமிர்த ஸரஸில் உடம்பு முழுவதும் அமிழும்படி தோய்த்தாள். அவ்வாறு தோய்க்கால் கத்தி பாயாது காயம்படாது என்று சாஸ்திரம். ஷை தாய் அவனுடைய லது கையையைப் பிடித்து ஸரஸ்ஸில் அமிழ்த்தியதால் அந்தக் கைமட்டும் மேலேயிருந்துவிட்டது நனையவில்லை. கடைசியாக வயது 25 ஆனவுடன் ஓர் சண்டை நேரிட்டு அமிர்தஸரஸ்ஸில்

அமிழாத வலதுகையிற்குண்டுபட்டு உயிர் நீங்கியது. இதனால் விதிவலிதென்றும் அதைவெல்லுதல்யாராலும் சாத்தியமலலவென்று அறிகிறோம்.

"தவத்தையியற்றிப் பவத்தை யகற்று" என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். எப்போதும் மனதைச் சிற்றின்பங்களிற் செல்லவிடாமற் பகவானது பாதகமலங்களிற் றிருப்பி ஸதா தியானித்துக் கொண்டிருக்கவேண்டும். அவ்வாறு செய்வதால் நல்ல ஞானமுண்டாகி முக்திகிடைக்கும்.

"சிவமொன்றே யுண்டு" ஸச்சிதாநந்த சிவத்தினிடஞ் சுஜாதி, விஜாதி, சுவகதபேதங்களில்லை மரத்துக்கு மற்றொரு மரம் சுஜாதி. அதாவது மரத்தைப் போன்ற சாதி. மரத்திக்கு அதினின்றும் உண்டாகும் பூ, பிஞ்சு, காய் முதலியன சுவகதம், என்றால் தன்னிடத்தினின்று தோன்றி தன்னை விட்டு நீங்காதிருத்தல் என்பது பொருள். சிவசாதியைப்போல் வேறே யொரு பொருளுமில்லை, சிவசாதிக்கு வேறு சாதிப்பொருளுமில்லை. சிவத்தினின்றுந் தோன்றிய ஓர் பொருளுமில்லை. ஆதலின் சிவமொன்றேயுள்ள தென்றும் அதைத்தவிர மற்றொரு பொருள் இல்லை யென்றும் ஏற்படுகின்றன. இவ்வாறு பெரியோர் கூறுகின்றனர். ஆதலின் உண்மைப் பொருள் பரப்பிரம்மம் ஒன்றே யென்பதை ஊகிக்க வேண்டும்.

முன்னொரு சமயம் ஸ்விட்ஸர்லாந்து தேசத்தில் ஓர் பூனையை வெகு அன்புடன் வளர்த்து வருகையில் அயல்வீட்டானொருவன் யாது காரணக்காலோ அதைக் கொன்று விட்டான். இதைக் கண்டு ஷை துரைசானி மிகுந்த வியஸனங் கொண்டு எலிகளை எதேஷ்டமாகப் பிடித்து ஓர்பெட்டியில் அடைத்து பத்திரமாய் மூடி முத்திரை போட்டு அயல்வீட்டானுக் கனுப்பினாள். அவன் ஏதோ தனக்கு வெகுமதி கிடைத்ததென்ற ஆசையுடன் அதைத்திறந்து பார்த்தான். 100-எலிகள் புலு புலு வென்று புறப்பட்டு வீட்டின் அறைகட்குள் ஓடின. அன்று முதல் அவ்வீட்டுக்காரனுடைய துணிகளைக் கடித்துக் தொந்திரவு செய்தன, அவன் ஒருநாள் துரைசானியை நோக்கி 'ஏன் எலிகள் நிறைக்க பெட்டியை அனுப்பினாய்' என்றான். அவள் 'என் பூனை உனக்கு சத்துருவாயிற்றே, எலிகளாவது மித்திரர்களாயிருக்கட்டு மென்றனுப்பினோ' னென்றாள்.

"புத்தியினுஞ் சிறந்தது யுக்தி" ருஷியா தேசத்தில் மகாபீடர் என்னும் ஓர் சக்கரவர்த்தியிருந்தார். அவருடைய ஸமஸ்தான விகடகவியொருவனுண்டு. அவன் மகா யுக்திசாலிரொரு சமயம் அவனுடைய சகோதரன் ஏதோ கெட்ட காரியஞ் செய்து மரணதண்டனை விதிக்கப்பெற்றான். அவனுயிரைக் காப்பாற்றும்படி சக்கரவர்த்தியை வேண்டிக் கொள்ளுமாறு விகட கவி வந்து கொண்டிருச்கையில் மகா பீடர் கண்டு 'அடே, நீ, கேட்கப்போகிற வரனை நான் கொடுக்க மாட்டேன். இது சத்தியம். நீ ஏன் வீணாக அலைகிறாய்? என்றார், விகடகவி மகராஜ் அப்படியானால் என் சகோதரனைத் தூக்கிற் போட்டுவிடுங்கள். அவனுக்கு விதித்த மரண தண்டனையை உறுதி செய்யுங்கள்' என்றான். அரசன் தான் சொன்ள வார்த்கைக்குக் கட்டுப்பட்டு அவன் கோரிக்கொண்டபடி. குற்றவாளிக்கு விதித்த மரண தண்டனையை உறுதி செய்யாமல் மன்னித்து விட்டான். இம்மாதிரியாக விகடகவி, தான்கொண்ட கருத்தை நிறைவேற்றி அரசனிடஞ் சம்மானமும் பெற்றான்.

ஓர் ஆஸ்திரேலிய கனவான் வியன்னாவில் பெரிதாகிய ஓர் வீட்டைக்கட்டி அதில் "பேராசையின்றி பகவான் கொடுத்த மட்டும் போது மென்று திருப்தி யடைகிறவர்களுக்கு இந்த வீடு இனாமாய்க் கொடுக்கப்படும்" என்று எழுதியிருந்தார். அதை ஓர் மனிதன் படித்து அக்கனவானிடம் வந்து, "ஐயோ நான் பேராசைக்காரனல்ல எப்போதும் பகவான் கொடுத்த மட்டிலும் போதுமென்ற திருப்தி கொண்டவன். ஆகையால் தாங்கள் விளம்பரஞ் செய்திருக்கிறபடி எனக்கு இவ்வீட்டை இனாமாகக் கொடுங்கள்" என்றான். இவன் வார்த்தைதளைக்கேட்டு ஆஸ்திரேலிய கனவான் சிரித்து அடே, மூடா இப்போது இந்த வீடுவேணுமென்று ஆசைப்பட்டாயன்றோ. பகவான் உனக்குக் கொடுத்திருக்கும் வீடுபோதாதென்பது நீ இங்கு வந்து கேட்பதால் நன்றாக விளங்குகிறது. ஆதலின் பேராசைக்காரனாகிய உனக்கு நான் வீட்டைத் தரமாட்டேன் போவென்று துரத்தி விட்டான்.

நீதி நூல் படித்த இரண்டு வித்துவான்கள் ஊர்ப் பிரயாணம் போகையில் ஒருவரை யொருவர் சந்தித்து நேசராயினர். அவ்விருவரில் ஒருவன் கட்டுசோறு கொண்டு வந்திருந்தான். இன்னொருவனிடம் அன்னத்துக்கு ஐவேஜில்லை இவ்வாறிருக்கையில் ஐவேஜற்றவன் எப்படியாவது அவன் கொண்டுபோகுஞ் சோற்றில் பாதி நாம் வாங்கித் தின்னலாமென்றெண்ணி யிருந்தான். சோறு கொண்டு போனவன் ஐவேஜில்லாதவனை நாம் ஏமாற்றி கட்டமுதை முற்றிலும் நாமே சாப்பிடலாமென்றிருந்தான். பகல் பதினைந்து நாழிகையாயிற்று. இருவருக்கும் பசியுண்டாயிற்று. மத்தியில் ஓர் நதி யோடிற்று. அதன் கரையில் சோறு கொண்டு வந்த வித்வான் தன் மூட்டைபை யவிழ்த்து சாப்பிடப் போகையில் ஐவேஜற்றவன் 'ஐயா பாத்துண்' என்று நீதி நூல் கூறுகிறதென்றான். இவன் ஆம் அது மெய்கான். நீ உட்காரும் இதோ உமக்கு இலை போடுகிறேன், என, பசியேப்பக்காரன் உட்கார்ந்து கொண்டான். உடனே கட்டமுதுக்காரன் ஒரு பருக்கைபை எடுத்து நேசனது இலையில் வைத்து 'எள்ளளவாயினும் மலை யளவாய்க் கொள்வது சான்றோரியல்பு' என்று நீதி நூல் கூறுகிறது. ஆதலின் தாங்கள் இந்கப் பருக்கைபை அபரிமிதமாக வெண்ணி யுண்டு திருப்தியடைய வேண்டுமென்று தான் கட்டுச்சோற்றை முற்றிலுஞ் சாப்பிட்டான். ஐவேஜற்ற வித்வான் ஏமாந்து போனான்.

முற்காலத்தில் மகா அலெக்ஸாந்தர் என்னும் அரசன் இந்தியாவின் மேற் படையெடுத்து சிந்து நதிக் கரையிலுள்ள தேசங்களைச் கைபற்றினான். இவ்வரசன் போர்க்களத்திலேயே கவிகள் செய்யும் வல்லமையுள்ளவன். எப்போது பண்டிதர்களால் சூழப்பட்டு கல்விப்பிரியனாய் காலங்கழிப்பதே இவனது சுபாவம். இத்தகைய சாமர்த்திய சாலியான அலெச்சாந்தர் இந்து சாஸ்திரீகளை ப்பரீக்ஷிக்க வேண்டி ஓர் ஜோஸியனையும், ஒரு கார்க்கீகனையும் வர வழைத்தான், முதலில் தன் ஜோஸியனை நோக்கி இன்றைக்கு எவ்வளவு மழை பெய்யும் என்றான், அவன் கணக்குப்படி ஓர் குடம் மழை பெய்யுமென்றான். பிறகு தான் வரவழைத்த இந்து ஜோஸ்யனைக் கேட்டான். அவன் ஒருவிரற்கடை குறைய ஓர் குடம் மழை பெய்யும் என் கன். இவர்களில் இன்னார் சொன்னது உண்மையென்று அறியவேண்டி மழைபெய்ய வாரம்பித்தவுடன் ஓர் குடம் வைத்தான். அதில் உண்மையாகவே குடம் நிறைய மழை பெய்துங் கடைசியில் ஜலஞ் சற்று தளும்பி வழிகிற வாடிக்கை யாதலால் மழையோய்ந்து குடத்தைப் பார்க்கும் போது ஓர் விரற்கடை குறைவாக

விருந்தது. உடனே இந்து ஜோஸ்யனது லௌகீக ஞானத்துக்காக அகமகிழ்ந்து அவனுக்கு வேண்டிய வெகுமதிகள் கொடுத்தான். அதன் பிறகு தார்க்கீகனை யழைத்து அவனிடம் ஒரு பக்கங்கோணலாயிருக்கும் ஓர் கொம்பைக்காட்டி இது ஏன் இப்படி வளைந்திருக்கிறது என்றான். அதற்குத் தார்க்கீகன் "அலெக்சாந்தராகிய தாங்கள் வந்து என்னை இம்மாதிரி கேள்வி கேட்கப்போகிறதற்காகவே இந்தக் கொம்பு இப்படி வளைந்திருக்கிறது" என்றான். அவனுக்கும் நல்ல பரிசுகிடைத்தது.

"வேண்டும் போதழுவாள் சிரிப்பாள் விலைமாது" புருஷர்களின் மனதை ஸ்வதீனப்படுத்த வேண்டி ஸ்திரீகள் ஸமயத்துக்குத் தக்கபடி அழுவதுஞ் சிரிப்பதும் ஸ்வபாவம் ஆதலின் புத்திசாலியா யிருப்பவன் பெண்கள் அழுவதைக்கண்டு உடனே பரிதாபப்படுவதுஞ் சிரிப்பதைக் கண்டு ஸந்தோஷப் படுவதுங் கூடாது. தங்கள் காரியம் நிறைவேற வேண்டி கண்ணுக்குக் கலத்தண்ணீர்விடுவார்கள். விலைமாதர்கள் தாங்கள் படும் நோயைக் கவனியாது பணத்தில் மட்டுந் திருஷ்டியுள்ளவர்களாய் விட புருஷர்களைக்கண்டு வெற்றிலை போட்ட வாயுடன் பற்களைக்காட்டி நகைப்பார்கள்.

"பணத்துக்காசைப்பட்டு பெண்ணைக் கொள்பவன் பைத்தியக்காரன்." குணத்தைப் பெரிதாக எண்ணாமல் பணத்தைப் பெரிதாயெண்ணி ஓர் பெண்ணை விவாகஞ்செய்கிறவன் அவள் ஆடும் ஆட்டத்துக்கு உள்ளடங்கி தன் பெருமை யழிந்து எண்சானுடம்பும் ஒரு சாணாய்க் குன்றிப்போகிறான்.

"பெண்களிருப்பிடம் பேய்களிருப்பிடம்." பெண்களால் படுங்கஷ்டமும் பேய்களால் படுங்கஷ்டமும் ஒன்றென் பதைக்குறிக்க இப்பழமொழி வழங்குகிறது. பேய் பிடித்தவன் தன்னிஷ்டப்படி செய்ய முடியாமல் பேயின் இஷ்டப்படி ஆடிகிறான், பாடுகிறான், பல்லையிளிக்கிறான், கல்லையெறிகிறான். தனக்குத்தானே பேசிக் கொள்ளுகிறான், வீண்காலம் போக்குகிறான். அதுபோல் ஸ்திரீயின் மோகத்தால் பீடிக்கப்பட்டவன் சித்தஸ்வாதீனமற்று அவளிஷ்டப்படி செய்கிறான், பணத்தைச் செலவழிக்கிறான், சிற்றின்பத்தை நுகர்ந்து பல்லையிளிக்கிறான், மானத்தைத் தவிர்க்கிறான், மதிகெட்டு மதம்பிடித்தலைகிறான். ஆதலின் பெண்கள் செய்கையும் பேய்கள் செய்கையும் ஒன்றென் றேற்படுகிறது.

"சிவோஹம்" சிவோஹம்" என்று பெரியோர் கூறுகின்றனர். கருத்து யாதெனில் சிவனே நான் என்பது. சிவனே நானெனல்தகுமா வெனின் தகுமென்றே கூறுவோம். இங்கே "நான்" என்பது ஆத்மாவைக் குறிக்கிறது. சரீரத்தையல்ல. இந்த ஆத்மாவே எங்கும் நிறைந்துள்ள சிவனென்பது அத்வைதிகளின் கொள்கை.

"நியாயமே வெல்லும்" என்பது அடியில் வரும் கதையால் நிரூபிக்கப்படுகிறது. பாடலீ புரமென்னும் நகரில் தனிகனான ஓர் வணிகனிருந்தான். அவன் அனேக பட்டு வஸ்திரங்களை வெகுதூரத்திற்கப்பாலுள்ள காசியில் விற்பதற்காக ஓர் ஒட்டகத்தை வாடகைக்குப்பேசி அதன் மேற்போட்டுக்கொண்டு போனான். ஒட்டைக்காரன் நடுவழியில் வியாபாரிக்கு ஜுரங்கண்டதால் அவனை ஓர் ஊரில் விட்டுத் தான் மட்டும் ஒட்டையை யோட்டிக்கொண்டு காசிப்பட்டணம்

போனான். அங்கே பட்டு வஸ்திரங்களை விற்று ரூபா ஆயிரஞ் சேர்ந்தவுடன் ஓர் கடைவைத்து வியாபாரஞ்செய்யலா மென்றெண்ணிக் கொண்டிருந்தான். சில நாட்களுக்கெல்லாம் நோய் தீர்ந்து ஸௌக்கியமடைந்த வணிகன் காசிக்கு வந்து சேர்ந்து வெகுசிரமப்பட்டு ஒட்டைக்காரனைக் கேடிக் கண்டு பிடித்து பட்டு வஸ்திரங்களெங்கே யென்றான். அவன்:

“முழுப்பூசனிக்காயையுஞ் சோற்றில் மறைக்கிறவ” னாதலின் ஒட்டையை யார் கண்டார்கள், நான் ஒட்டைக்காரனல்ல, ஒரு போதும் ஒட்டகத்தை நான் ஓட்டின தில்லையென்று சாதித்தான். பின் இருவர்களும் நியாயஸ்தலத்துக்குச் சென்று தங்கள் விவாதத்தைத் தெரிவித்துக் கொண்டனர். நியாயாதிபதி ஒட்டைக்காரனை நோக்கி நீ அந்த வியாபாரியின் பட்டு வஸ்திரங்களை உன் ஒட்டையின் மேலேற்றி இங்கு கொண்டுவந்தையா வென்றார். அவன் தன்னிடம் ஒட்டையேயிருந்ததில்லை நான் ஒட்டையோட்டுபவனுமல்லவென, நியாயாதிபதி சிரித்து இருவர்களையும் நோக்கி மூடர்களே ஸாக்ஷியில்லாமல் பிராதைமட்டுங் கொண்டுவந்து என்ன பிரயோஜனம். உங்கள் வியாஜ்யத்கைத் தள்ளிப்போட்டோம் என்றார். உடனே இருவர்களும் வெளியே போகையில் நியாயாதிபதி தானும் பின்னாற் சென்று 'ஓ, ஒட்டைக்காரரே' என்று கூவினார். உடனே பிரதி வாதியாயிருந்த மோசக்காரன் திரும்பிப் பார்த்தான். தஹணமே அவனைப் பிடித்து வரச் செய்து தக்க சிக்ஷை விதித்து அவனிடமிருந்த ரூபாயை வியாபாரிக்கு வாங்கிக் கொடுத்தார்.

“நட்புந் தயையும் பிறவிக்குணம்" என்று முன்னொருமுறை கூறியிருக்கிறோம். இதற்குத் திருஷ்டாந்தமாக ஓர் கதை சொல்லுகிறோம். இத்தலி நாட்டில் ரோமாபுரி யென்றொரு பெரிய பட்டண முண்டு அங்கே வயது முதிர்ந்த ஓர் கிறிஸ்துவன் நாலு பேர் கூடும் வழியில் தினந்தோறும் உட்கார்ந்து பிடில் வாசிப்பான். ஐந்தாறு அணா கிடைக்கும். இவ்வாறு ஜீவனஞ்கெய்து வருகையில் ஓர்நாள் இவனுடைய துரதிர்ஷ்டத்துக்கேற்ப ஒரு பைசாவும் கிடைக்கவில்லை. அந்திநேர மட்டும் பிடிலை வாசித்துக் கொண்டிருந்தான். ஒருவருக்குந் தயவு பிறக்கவில்லை. கடைசியாக வாசிப்பதை நிறுத்தி பிடிலைக் கையில் வைத்துக் கொண்டு கதறியழயவே அந்நகரத்தில் பிரஸித்தி யடைந்த ஓர் ஸங்கீத வித்வான் அவனிடமிருந்த பிடிலைத்தான் வாங்கி வாசிக்கத் தொடங்கினார் ஏழையின் கப்பறையில் காசுகளும் வெள்ளி நாணயங்களும் ஒருமணி நேரத்துக்குள் நிறைந்து விட்டன. பிறகு இந்தப்புதிய மனிதர் யாரென்று விசாரித்ததில் ஸங்கீதத்தில் மகா வித்வானாகிய பீட்ரோவென்று தெரிய வந்தது. இவருக்கு ஏழை பேரிலுண்டான தயைக்காக எல்லோரும் ஆச்சரியப்பட்டு இவரைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

ஓர் குள்ள நரி நாடகக் கொட்டகையில் நுழைந்து ஏதேனும் தின்பண்ட மிருக்கிறதோ வென்று தேடிற்று. ஒன்று மகப்படவில்லை கடைசியாக மனிதனுடைய தலையைப்போல் மரத்தினால் ஒரு பொய்த்தலை செய்து வைத்திருக்கக்கண்டு அடியில் வருமாறு சொல்லிற்று "ஆகா! என்ன அழகான தலையிது!! ஐயோ மூளையில்லையே. என்ன பிரயோஜனம்" என்றது. இதனால்

ஒருவன் அழகாயிருந்தும் அவனிடங் கல்வியில்லையேல் பிறர் அவனை மதிக்கமாட் டார்களென்றறிகிறோம்,

மனம் வேறுபுத்தி வேறென்பதை நமது நண்பர்கள், ஸ்ரீமான் விவேகாநந்த சுவாமிகளின் உபன்யாசங்களாகிய ஞானத்திரட்டின் முதற்பாகத்தில் படித்திருப்பார்களாயினும் அவ்விரண்டின் குணா குணங்களை ஒருவாறு விஸ்ரிக்கத் தொடங்குகிறோம். எப்போதுஞ் சலித்திக் கொண்டிருப்பதே மனதின் சுபாவம். சாமான்யர்களுக்கு ஓர் பொருளில் இன்பமுண்டென்று தோன்றினால் உடனே அவர்கள் எவ்விதத்திலேனும் அப்பொருளையடைய விரும்புகிறார்கள். அதாவது, அவர்களின் மனம் இன்பஞ்செறிந்த அப்பொருளைப்பற்றுகிறது. உதாரணமாக மதுவில் ஒருவித இன்பமிருக்கிற தென்றுண்ணி குடிகாரனது மனம் அதை நாடுகிறது. விலைமாதரிடம் இன்பமுளதென்றெண்ணி விட புருஷர்களின் மனம் அவரை நாடுகிறது. பணத்தில் இன்பமுண்டென்று நம்பி சகலவித உத்தியோகஸ்தர்களும் வியாபாரிகளும் அதைத் தேடுகின்றனர். நற்குணமுள்ள மாணாக்கன் சிறந்த நூல்களைக் கற்பது இன்பமென்று கருதுகிறான். மேற்கூறிய உதாரணங்களால் உண்மையாகவே ஓர் பொருளில் இன்பமிருக்கிறதென்று அறியுஞ் சக்தியை மனம் பெறாவிட்டாலுந் தற்காலத்தில் இருக்கும் போலி இன்பத்தை எதார்த்த இன்பமாக எண்ணப்படுகிறது. புத்தியின் காரியமோ அப்படியல்ல. மனம் நாடுகிறவற்றில் உண்மையான இன்பம் நிறைந்த பொருளையே புத்தி தேடுகிறது. புத்தியானது நன்மை தீமைகளை ஆய்ந்தறிந்து உபயோகமுள்ள ஒன்றை நிச்சயிக்குஞ் சக்தியைக் கொண்டிருக்கிறது. அதுபற்றியே உலகத்தில் ஒருவன் பிசகான காரியத்தைச் செய்தால் உனக்கு புத்தியில்லையா என்று பெரியோர் கண்டிக்கின்றனர். பிசகிப்போன விஷயத்தைப்பற்றி உனக்கு மனமில்லையாவென்று யாருஞ் சொல்லுகிறதில்லை. ஒன்றைக்கண்டு விரும்புவது மனதின் காரியமாயும், விரும்பியகாரியத்தால் நன்மையுண்டாகுமென்று அதைச் செய்ய நிச்சயிப்பது புத்தியின் காரியமாயுமிருக்கிறது.

ஒரு தனவான் வீட்டு மாப்பிள்ளையின் பற்கள் ஊத்தைபடிந்து கறுத்திருந்தன. அதனால் மாமியார் மாப்பிள்ளையிடம் அரையணா கொடுத்து கரும்பு வாங்கித்தின்னும்படி சொன்னாள், அவளுடைய எண்ணம் யாதெனில் கரும்பு தின்றால் ருசியாயிருப்பதுடன் பற்களின் ஊத்தை நீங்கி வெளுக்குமென்பதே, இதையறியாத மாப்பிள்ளை கடைத்தெருவுக்குச் சென்று அரையணாவுக்குக் கரும்பு வாங்கினால் கொஞ்சமா யிருக்குமென்று தேங்காய்ப் பிண்ணாக்கில் ஒருபடிவாங்கி மடியிற்கட்டிக்கொண்டு தின்றான். ஏற்கெனவே ஊத்தைபடிந்து கறுத்திருந்த பற்கள் இன்னும் அதிகமாய்க்கறுத்துப் பழுத்துப்போயின. இதனால் பொருள்களின் குணாகுணங்களை யறியாமல் அதிகங் கிடைக்கிறதென்ற ஆசையால் சொள்ளை சொத்தைகளைக் கொள்வது பயனைத்தராமல் கெடுகலை விளைவிக்கு மென்றறிகிறோம்.

"காலமோ கோடைகாலம்! வெயிலோ வெகு உக்கிரம்!! இக்காலத்தில் பகல்வேளையில் வழிநடப்பவர்களுக்கு தாகமுண்டாவது ஸகஜம்." என்றெண்ணி இரண்டு இடைச்சிகள் முறையே பாலையும் மோரையும் விற்பதாகச் சாலைவழியிற்

கொண்டு வந்தார்கள். முதலிடைச்சி வழிப்போக்க ரொருவரைக் கூவி 'ஐயா பாலி ருக்கிறது; படி ஒரு அணா. விலை கொடுத்து வாங்கி யுட்கொண்டு உங்கள் தாகத்தைத் தணித்துக் கொள்ளுங்சள்' என்றாள். மற்றொரு இடைச்சி அதே வழிப்போக்கரை விளித்து ஐயா, மோரிருக்கிறது. படி காலணாதான் விலை, ஒரு அணா கொடுத்தால் பாலைப் போல் நாலு பங்கு மோர் தருகிறேன், நன்றாகச் சாப்பிட்டு தாகத்தை தீர்த்துக் கொள்ளும்' என்றாள், வழிபோக்கன் யோசிக்கலானான். “பாலை வாங்கி யுட்கொண்டால் தாகந்தீரும், இரத்த புஷ்டி யாகும். சரீரத்திற்கு வலுவைக் கொடுத்து வழிநடக்க ஸௌகரிய மாயிருக்கும். பால் தாகத்தை தீர்ப்பதுடன் பசியையும் ஆற்றுகிறது, அதன் குணம் அனந்தம். பாலாலன்றோ குழந்தைகள் வளருகின்றன. பாலையன்றோ பகவானுக்கு அபிஷேகஞ் செய்கிறார்கள். மோரை யபிஷேகஞ் செய்கிற வழக்கமில்லை மோரைக்குடித்தால் தற்காலந் தாகசந்தியாகுமேயன்றி சிறிது தூரம் நடந்த பின் சிறுநீராய்க் கழிந்து மறுபடியுந் தாகமுண்டாகும்” என்று மோரை நிராகரித்து பாலை வாங்கி யுட்கொண்டான். இதைப்போல் விவேகிகள் பிறர் வார்த்தைபையும் வர்ணனை யையும் ஏற்றுக் கொள்ளாமல் தங்கள் புத்தியினால் ஊகித்து ஒவ்வொரு பொருளின் குணாகுணங்களையும் அறிந்து கொள்வர்.

அற்பஜெந்துக்களாகிய ஈயும், கொசுவும் நாம் வேண்டாமலே நம்மிடம் வந்து உடம்பில் மெய்க்கின்றன. அவைகளையுடனே ஒட்டிவிடுகிறோம் ஈயும், கொசுவுஞ் சரீரக்தை வருத்துகின்றன. மனதைக்கெடுக்குந் துஷ்டனோ வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தது போல் நாம் கூப்பிடாமலே நம்மிடம் வந்து வாயில் வந்தபடி உளறத் தொடங்குகிறான். இவனது உபதேசத்தை நாம் கேட்பதால் நமக்குக் கௌரவ ஹானியுண்டாகிறது. ஆதலின் ஈயையம், கொசுவையும் ஓட்டுவது போல் துஷ்டனையும் ஓட்டிவிடுவது நலம்.

"கண்ணனைப் போற்றிக் கருத்தை யாற்று" என்று பெரியோர் கூறியிருக்கின்றனர் பகவத்கீதையைத் தந்தருளிய பரம கருணா நிதியாகிய ஸ்ரீ கிர்ஷ்ண பகவான் தன்னைத் தியானிப்பவர்களின் காரியத்தை தானே செய்து முடிக்கிறார், முன்னொரு சமயம் விதுரர் என்னும் பக்தர் சுகமான வாசனை வீசும் வாழைப்பழங்களை பகவானுக்கு உரித்துக்கொடுக்கவெண்ணி அவசரத்தில் அன்பின் பெருக்கால் மெய்மறந்து பழத்தைக் கீழேயெரிந்து தோலைக் கொடுத்தார். அந்தத் தோல்களை விதுரரிடம் பேசிக் கொண்டே பகவான் ஆநந்தமாக உட்கொண்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் விதுரர் கீழே பார்த்துப் பழங்கள் கிடப்பதையும் பகவான் தோலைப் புசிப்பதையும் எண்ணி வருந்தினார் ஸ்ரீகிர்ஷ்ணமூர்த்தி "ஐயா, விதுரரே வாழைப்பழத்தின் ருசிபை நான் உட்கொண்டு விட்டேன். உம்முடைய மனோரதம் ஈடேறிப்போயிற்று. உமக்குச் சந்தேகமாயிருந்தால் கீழே விழுந்திருக்கும் பழத்தைத் தின்று பாரும்" என்றார். விதுரர் அவ்வாறே தின்றதில் அது ருசியற்றிருக்கக் கண்டு ஆச்சரியமடைந்தார்.

“ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியம்” என்று சிலர் கூறுவதுண்டு. இதை ஸ்ரீ கிருஷ்ணபகவானே ஒருதாரணத்தால் விளக்கிக் காட்டியிருக்கிறார். ஒரு சமயம் நாரதர் வீணையை மீட்டிக்கொண்டு கிர்ஷ்ண மூர்த்தியிடம் வந்தார். அப்போது

பகவான் ஏதோ சில விக்கிரகங்களை வைத்துப் பூஜை செய்து கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்து சுவாமி, 'சுவாமி, பரப்பிரம்ம ஸ்வரூபியாகிய தாங்கள் யாரைப் பூஜை செய்கிறீர்கள்?' என, பகவான் 'நாரதரே உரக்கப் பேசாதேயும். சுவாமிகளெல்வாம் விழித்துக் கொள்வார்கள். நித்திரை பங்கமுண்டாகும்' என்றார். நாரதருக்கு ஆச்சரியமுண்டாயிற்று. பகவான் பூஜை செய்வதென்றால் யாருக்குத் தான் ஆச்சரியமாயிராது நாரதர் மறுபடியுங் கண்ணனை நோக்கி "சுவாமி, அந்த விக்கிரங்களை நான் பார்க்கலாகாதா?" வென்றார். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி 'சிறிது நேரம் பொறுத்திரும். காண்பிக்கிறேன்' என்று மெள்ள திரையை ஓர் புறமாய் நீக்கவே உள்ளே லக்ஷஞ் சூரியனைப்போலபிரகாசிக்குந் தங்க விக்கிரகங்கள் சில விருந்தன. அவைகளெல்லாம் பகவத் பக்தர்களின் ரூபங்களாக விருப்பதைக்கண்டு நாரதர் அதிசயித்தார். கடைசியாகத் தம்முடைய விக்கிரகத்தையுங் கண்டு பரமாச்சரிய மடைந்தார். இதனால் பகவானுக்குப் பக்தர்களிடமுள்ள பிரீதி இன்னமாதிரி யென்று விளங்குகிறது. ஆதலின் தீனர்களாகிய நாம் ஸ்ரீ கிர்ஷ்ணமூர்த்தியின் பாதார விந்தங்களை ஸதா தியானித்து ஸர்வாபீஷ்டங்களையும் அடையக்கடவோம்,

"குயிலுங் காக்கையும்" எனறு பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். குயில் வெகு இனிமையாகக் கூவுகிறதே அதுவே போதும். நாமேன் கத்தவேண்டுமென்று காக்கை சும்மா விருக்கிறதில்லை. அது கதறிக்கதறி கல்லடிபடுகிறது. அதுபோல் பெரியோர்கள் நிறைந்த ஸபையில் புத்திசாலிகள் செய்யும் பிரசங்கமே போது மென்று சும்மாவிராமல் அரைப்படிப்பாளிகள் தாங்களும் எழுந்து ஏதேனும் புலம்பத் தொடங்கி அவமானமடைகின்றனர். இத்தகையோரை சபைக்குள் வரக்கூடாதென்று தடுப்பதும் நியாயமல்ல. ஸாதுக்கள் யாரையுந்தொந்திரவு செய்யும் வழக்கமில்லை யன்றோ.

"குணதோஷங்கள்" ஒவ்வொரு வஸ்துவிலுமுண்டு. பரமேசுவரன் குணமாகிய சந்திரனைத் தலையில் வைத்துக் கொண்டு தோஷமாகிய விஷத்தைக் கழுத்திலிருத்தினார். இதைப்போல் மனிதர்களாகிய நாம் குணவான்களுக்கு உயர்ந்த ஆஸனங்கொடுத்த துஷ்டர்களை கீழே உட்காரச் செய்யவேண்டும். இவ்வாறின்றி துஷ்டர்களுக்கு அத்திராஸனங் கொடுத்தால் பலவித துன்பங்களுண்டாகும். விவேகிகள் இத்வித்யாஸத்தை நன்றாக அறிந்திருக்கின்றனர்.

"சுத்தமுஞ் சுகமுமொன்று." எவன் சுத்தனோ அவன் சுகத்தையடைகிறான். தேகசுத்த மில்லாவிட்டால் தேகசுகம் உண்டாகாது. விடியற்காலையில் அதாவது சூரியோதயமாகுமுன்னே ஸ்நானஞ் செய்ய வேண்டுமென்ற விதி ஏற்பட்டிருக்கிறது இவ்விதி சுகத்தை யனுஸரித்ததென்பதை நிரூபிக்கிறோம். நாம் நித்திரை செய்யும் போது உஷ்ணம் அதிகமாகி சரீரத்திலுள்ள பலங்கள் மயிர்க்கால் வழியா யிறங்குகின்றன. இவைகள் சூரிய கிரணம் பட்டால் உறைந்துபோம். ஆதலால் இம்மலங்களைக் கழிக்கவேண்டி விடிய 5-நாழிகைக்கே ஸ்நானஞ் செய்ய வேண்டுமென்ற விதியேற்பட்டிருக்கிறது. இதுதான் பகலில் தூங்கக் கூடாதென்பதற்குத் தகுந்த காரணம். இவ்விதியை அனுஸரியாமல் அந்தோ அனேகர் அசுத்தர்களா யிருக்கின்றனர்.

"சுருதி யுக்தி அனுபோகம்" என்ற மூன்றனுள் யுக்தியே சிறந்தது. முற்காலத்தில் பாடலிபுரமென்னும் நகரில் பத்மபாதனென்றொரு அரசனிருந்தான். அவனிடம் ஹாஸ்யாநந்தன் என்ற ஓர் விகடகவியிருந்தான். இந்த ஹாஸ்யா நந்தனுக்கு குடும்பக் கடனதிகமாயிருந்ததால் மகாராஜா 500-மோகராக்கள் கடனாகக் கொடுத்து உதவி செய்த்ச்ச்ர். ஹாஸ்யாநந்தன் ஷை தொகையை மூன்று வருஷத்துக்குள் நூற்றுக்கு ஐந்து வீதம் வட்டி சேர்த்து அரசனிடஞ் செலுத்தி விடுவதா யொப்புக்கொண்டான்.

"பணம் என்றால் பிணமும் வரயைத் திறக்கும்" என்ற பழமொழியுண்டே. யாருக்குத் தான் பணத்தில் ஆசையில்லை? பத்மபாதனோ ஸதா பணப் பைத்தியம் பிடித்தவன். ஆத்ச்லின் மூன்று வருஷத்தவணை கழிந்தவுடன் விகடகவியைப் பணங்கேட்டான். அவனிடம் ஒரு பைசாகூடவில்லை. அரசன் கொடுத்த ஐந்நூறு மோகராக்களையுஞ் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிட்டதால் தன்னிடம் பணமில்லை யென்றுந் தனக்கு ஷை 500-மோகராவையும் இனாமாகக் கொடுத்ததாய் எண்ணிக் கொண்டு தன்னை மன்னிக்கவேண்டு மென்றும் பலமுறை கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். அரசன் அதற்கிணங்கவில்லை அடிக்கடி ஹாஸ்யா நந்தனைக் கடனுக்காக ஹிம்ஹித்து வந்தான். ஒருநாள்,

"யுக்தி மிஞ்சின சக்தியில்லை" யென்று ஹாஸ்யாநந்தன் ஏதேனும் யுக்தி செய்து அரசனை ஏமாற்றிவிட எண்ணினான். இரண்டு நாளைகெல்லாம் நெஞ்சடைத்துப் பிராணன் போய்விட்டது போல பசாங்கு செய்து பாடையில் வைத்துத் தன்னைத் தூக்கிப்போம்படி தன் சிநேகிதர்களை கேட்டுக் கொண்டான். அவர்கள் அவ்வாறே ஹாஸ்யாநந்தனைப் பாடையில் வைத்துத் தூக்கிப்போகையில் அரசன் எதிர்ப்பட்டு "அடடா, ஹாஸ்யாநந்தன் இறந்து போனான? ஐயோ பாவம் நல்ல மனுஷ்பன். எனக்கு 500-மோகராக்கள் அவன் கடன் கொடுக்க வேண்டும், பாதகமில்லை. அவன் கொடுக்க வேண்டியதில்லை. அவனை மன்னித்துப் போட்டேன்" என்றான். உடனே பாடையிலிருந்த ஹாஸ்யாநந்தன் திடீரென்றெழுந்து "மகா ராஜாவே! தாங்களே தயாளு. என் கடனை மன்னித்து விட்டீர்கள். அதனால் நான் பிழைத்துக்கொண்டேன். தங்களுடைய தயவால் போன உயிர் மறுபடியும் உடலில் வந்து புகுந்து கொண்டது" என்றான். அரசன் கொடுத்தவாக்கைத் தவறாதவனாதலின் ஹாஸ்யா நந்தனது கடனையும் மன்னித்து அவன் செய்த யுக்திக்காக அதிசயித்து இன்னும் இருநூறு மோகராக்கள் இனாமளித்தான்.

"உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்ற வாக்கியத்துக் கிணங்க அயோக்கியர்கள் நமக்கு மிகுந்த விசுவாஸம் போலிருந்து நாளடைவில் பொருளைத் திருடிக்கொண்டு போகின்றனர். இதற்கொரு கதையுண்டு. கலி நாலாயிரத்துத் தெள்ளாயிரத்து ஐந்தாம் வருஷத்தில் காசிப்பட்டணத்துக் கப்பால் கத்தர்புரி யென்ற ஓர் சிறு நகரில் கங்காதரன் என்னுந்தனவானாகிய இடையனிருந்தான். இவனிடம் ஆயிரக்கணக்கான ஆடுமாடுகளுண்டு. இவைகட்குக் காவலாகத் தான் குட்டிப் பருவமுதல் பாலூட்டி வளர்த்த ஓர் நாயை ஏற்படுத்தினான். இவ்வாறிருக்கையில் எவ்விதமாகவோ அடிக்கடி மந்தையில் ஆடுகள் களவு போயின. கங்காதரன் இந்தக் களவைக் கண்டு பிடிக்க வெண்ணி ஓர் நாளிரவு ஒளிந்துகொண்டிருக்கையில் ஷை

நாய் ஓர் ஆட்டைக்கொன்று தின்று ஆற்றிலிறங்கி மூஞ்சியிலுள்ள இரத்தத்தைக் கழுவிக்கொண்டு முன்னே இருந்த விடத்துக்கு வந்து விட்டது. எஜமான் அதன் செய்கையையறிந்து மறுநாளே அதையடித்து விரட்டி விட்டான்.

மீன்கள்.

முதல்மீன். - நண்பா, நீ என் என்னுடன் விளையாட வருகிறதில்லை. உன் தாயார் உன்னைப்போக வேண்டாமென்று சொல்லுகிறாளோ?

இரண்டாவதுமீன். - சினேகா! என் தாயார் பேரில் பழிபோடாதே. வெளியே வருவதாலுண்டாகும் விபத்துகளை நீ அறியயோ?

முதல் மீன்.- நான் அறியேன். நாம் யாருக்கும் தெரியாமல் தண்ணீர்க் குள்ளிருக்கிறோம். சண்டைபோடுஞ்சுபாவம் நமக்கில்லை. விபத்துகளெப்படி நேரிடும்?

இரண்டாவதுமீன்.- சத்துருக்களுண்டாவதற்கும் விபத்துகள் நேரிடுவதற்கும் நம்முடைய பிரயத்தினம் வேண்டுமென்பதில்லை.

முதல்மீன்.- நாம் கெடுதல் செய்யாதிருக்கப் பிறர் நமக்குக் கெடுதல் செய்ய இசைவாரா என்பது ஸந்தேகம், அப்படிப்பட்ட பரம துஷ்டர்களும் உலகிலுண்டா?

இரண்டாவதுமீன். -ஆம் இருக்கின்றனர். பூமியிலும், ஆகாசத்திலும் நமக்கு அனேக சத்துருக்களிருக்கின்றனர். அவர்கள் தங்கள் வயிற்றை நிரப்புவதற்காக நம்மைப் பிடித்துக் கொல்லுகின்றனர். மனிதர்களுடைய வயிறு தான் நமக்கு நன்காடு அவர்களது குக்ஷியில் நாம் பட்சணமாய்ப் போகின்றோம். பாபிகளாகிய அம்மனிதர்கள் நம்மைப்பிடிக்க பலதந்திரங்கள் செய்கின்றனர்.

முதல்மீன்.- நண்பா, அவர்கள் செய்யுந் தந்திரங்களென்ன? ஆகாசத்திலுள்ள சத்துருக்கள் யார்?

இரண்டாவது மீன்.-சினேகா? மனிதர்கள் ஓர் தூண்டிலில் உணவை வைத்து அதை ஜலத்திலெறிந்து கண்குத்திப் பாம்பு போல் நமக்காக காத்துக் கொண்டிருக்கின்றனர், நாம் அவ்வஞ்சனையை யறியாமல் அவ்வுணவைத் தின்ன வந்து அகப்பட்டுக்கொள்ளுகிறோம். தூண்டில் அசைகிறது. தக்ஷணமே அதைத் தூக்கி நம்மை யெடுத்துப்பறியில் போட்டுக் கொள்ளுகிறார்கள். இது ஒரு தந்திரம்.

ஜலத்திலிறங்கி வலையை வீசிப் பிடிக்கின்றனர். இது ஒரு தந்திரம். நம்மெல்லோரையும் ஒரே தடவையிற் பிடிக்கவெண்ணி தட்டி வலையை ஆற்றின் குறுக்கே வைத்து இரு பக்கத்தினின்று நெருக்கி வருகிறது. இது ஒருவித தந்திரம். இவ்வாறு அநேக தந்திரங்களிருக்கின்றன. ஆகாசத்தில் பறவைகள் நமக்கு சத்துருக்கள். மீன்குத்திப்பறவை ஜலத்துக்கு நேரே அந்தரத்தில் பறந்து நமது வருகையை எதிர்பார்த்துக்கொண்டேயிருந்து நாம் வந்தவுடன் சடாலென்று

கீழேயிறங்கி ஜலத்தில் மூழ்கித்தன் கூரிய மூக்கினாற் பிடித்துக் கொண்டு போகிறது. இந்தப் பறவையின் கண்ணுக்கு வெகு தூரத்திலிருக்கும் நம்மைப் பார்க்கும் படியான சக்தியைப் பகவான் கொடுத்திருக்கிறார். மேற்கூறிய துராத்மாக்கள் நிரபராதிகளாகிய நம்மை ஹிம்விக்கின்றனர்.

முதல்மீன்.- நல்லது! இப்போதறிந்தேன், நமது சத்தருக்களை. பறவையாவது பகுத்தறிவற்றது. பகுத்தறிவுற்ற மனுஷ்யன் நம்மை ஹிம்ஸிப்பது புத்தியீனமன்றா?

இரண்டாவது மீன்.- அந்த வெட்கக்கேட்டை நான் என்ன வென்று சொல்வேன். அம் மனிதன் தன்னை மகா விவேகியென்று சொல்லிக் கொள்ளுகிறான். அவனிடமுள்ள அயோக்யதைக்கு அளவில்லை. பூமியில் வாழும் ஆடுமாடுகள், உடும்பு, பன்றிகோழி, வாத்து, முயல் முதலிய மிருகங்களைப் பக்ஷித்து அவைகள் போதாமல் ஆகாசத்தில் பறக்கும் பக்ஷிகளைக் கவண் கல்லாலெறிந்து துப்பாக்கியாற் சுட்டுக் கொன்று தின்று அவைகளும் போதாமல் ஜலத்திலுள்ள மீன், ஆமை, நண்டு முதலியவற்றைக் கையாலும் வலை போட்டும் பிடித்து தின்று வயிற்றை நிரப்புகிறான். ஐயோ! மனிதன் என்னும் பரமதுஷ்டப் பிராணிக்குப் பயந்து நாம் எங்கே போனாலும் அவன் நம்மை விடுகிறதில்லை. நாட்டைவிட்டுக் காட்டிலோடினால் அங்கே கொம்பு தப்பட்டையுடன் வேட்டையாட வருகிறான். ஆதலின் அவர்கள் கண்ணிற்படும்படி வெளியே போகாதே யென்று என் தாய் எனக்கு உத்தரவு செய்திருக்கிறாள்.

முதல் மீன்: - அப்பப்பா! மனிதர்களின் நடத்தையை நீ சொல்லச் சொல்ல எனக்கு பயங்கரமாயிருக்கிறது. அத்தனை துஷ்டர்களா அவர்கள்.

இரண்டாவது மீன்: - அதிலும் ஸந்தேகமா? நமக்கு மட்டுமே மனுஷ்யர்கள் சத்துருக்களென்றெண்ணவேண்டாம். அவர்கள் ஒருவரை யொருவர் விரோதித்துச் செய்யும் மோசம் அநந்தம்.

முதல் மீன்: - நண்பா! மனிதர்கள் செய்யும் மோசத்திற் சிலவற்றைச் சொல்ல வேண்டும்.

இரண்டாவது மீன்: -- தாய் தந்தை குரு தெய்வம் ராஜன் ஆகிய ஐவரிடமும் வேண்டிய நன்மைகளைப் பெற்று பின் அவர்களுக்குத் துரோகிகளாகும் மனிதர்களைப் பற்றி நானென்னவென்று சொல்வேன். இந்தத் துரோகிகட்குக் கூறியிருக்கும் நரகமோ கொடியது. ஆயினும் மனிதர்கள் தற்காலவரும்படியை உத்தேசித்துத் தங்கள் எஜமானுக்கு துரோகஞ் செய்கின்றனர். எந்த வேளையில் எவன் மோசம் போவானென்று சமயம் பார்த்துக்கொண்டிருப்பவர் சிலர். கபந்தனைப்போல் இரண்டு கையாலும் ஊரிலுள்ள சகல வியாபாரங்களையுந் தாமே நடத்த வெண்ணி எல்லோருக்கும் தீங்கு விளைப்பவர் சிலர். காரியமாகும் வரை கழுதையின் காலைப்பிடியென்னும் பழமொழிப்படி தங்கள் கௌரவத்தை யிழந்து அற்பர்கள் வீட்டுக்குச் சென்று காரிய ஸாதகஞ் செய்வோர் சிலர். இவ்வாறாக துஷ்டர் நிறைந்திருப்பதாற்றான் பெரியோர் நகரங்களை விட்டு ஏகாந்தமான விடங்களுக்குச் செல்லுகின்றனர். துறவிகள் மடங்களில் வஸிக்கின்றனர். தேவர்கள்

இம்மனிதர்களுக்குப் பயந்து கண் மறைவாக தேவலோகத்தில் வஸிக்கின்றனர். ஸித்தர்கள் யாருக்கும் தெரியாமல் சூக்ஷ்மசரீரிகளாய் ஆகாயத்திற் சஞ்சரிக் கின்றனர். தெய்வங்களெல்லாங் கோயிலிலொளிந்து காலங்கள்ளுகின்றன. மகா விஷ்ணு தாம் சாம்பிடும் போது திரையைப் போட்டுக் கொள்ளுகிறார். ஏன் தெரியுமா? ஒரு வேளை மனிதன் தன் சாப்பாட்டைப் பிடுங்கி தன் வாயில் கொட்டிக் கொள்ளுவானோ வென்னும் ஸந்தேகந் திருமாலுக்குண்டு. பரமசிவன் தனக்கு நிவேதனஞ் செய்த ஆகாரத்தைப் பிறர் உட்கொள்ளக் கூடாதென்று பயமுறுத்தி யிருக்கிறார். இவ்வாறு துஷ்டர்களைக்கண்டு தேவர்களும் ஹரி ஹரர்களும் பயந்து தூர விலகுகிறார்களெனில் அற்ப ஜெந்துவாகிய நாம் விலகியிருப்பது அவசிய மல்லவா?

இதன் பின்னர் இரண் மீன்களுந் தங்களிருப்பிடஞ் சென்றன.

ஆச்சரியம்: - உலகத்தில் 2-ஆச்சரியங்களுண்டு. எல்லா ஜீவ ராசிகளும் இறப்பதைக் கண்டும் நாம் இறக்கப் போகிறதில்லை யென்று நினைத்து அனேக கோடி வருஷங்கள் ஜீவிக்கப் போகிறது போல் வியவகாரங்களைச் செய்தல் ஒன்று. உலகத்தில் "எனக்கு" இந்த சாஸ்திரந் தெரியும், அந்த சாஸ்திரம் வாய்ப்பாடம், அனேகமாய் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டேன் என்று சொல்பவர்களை "எல்லாமறிந்தீர்களே, உங்களை யறிந்தீர்களா நீங்கள் யார்?" என்று கேட்டால் பதில் ஒன்றுஞ் சொல்லாது மௌனம் சாதிப் பனி இரண்டாவது ஆச்சரியம்.

"ஸர்வம் பிரம்மமயம் ஜெகத்" என்றபடி ஞானிகளுக்கு ஜெகத்திலுள்ள சகலவஸ்துக்களும் பிரம்மமாகத் தோன்றுகின்றன. அஞ்ஞானிகளுக்கோ அப்படியல்ல, அவர்கள் பார்க்கும் பொருள்களெல்லாம் வெவ்வேறாகக் காணப்படுகின்றன. இதற்குக் காரணமென்ன? தத்துவ ஆராய்ச்சி செய்தோர் நாம ரூபங்களைக் கண்டு மயங்கார். அதில்லார்க்கு இரண்டென்னுக் தோற்றம் எப்போதும் உண்டாகிறது. உதாரணமாக, கடல் வேறு அலை வேறு என்று ஸாமான்யர்கள் நினைக்கின்றனர். நுண்ணறி வுடையோர் கடலும் அலையும் ஒன்று. காற்றின் காரியத்தால் அலையென்னுங் தோற்றமுண்டாகிறது, காற்றடங்கினால் அலையடங்குகிறது, ஆதலின் உண்மை யாகவே கடல் வேறு அலைவேறல்ல. இரண்டும் ஒன்றுதானெனத் தெளிகின்றனர். இவ்வித சிறந்த அறிவை நமக்கு ஈந்தருளுமாறு நாம் பகவானைப் பிரார்த்திக்கக் கடவோம்

"ஜெக முள்ளோர்க்கு நிஜமில்லை" உலகவின்பத்தை உண்மை யென்று நினைத்து அதில் அழுந்திக் கிடப்போர்க்கு நிஜப்பொருளாகிய பிரம்மம் தோன்றாது. உலக வாசைகளை விட்டொழித்தோரே அப்பொருளை யறிய வல்லவர். இதனால் ஒவ்வொருவரும் தத்தம் மனைவி மக்கள் முதலிய பந்துக்களையும் வீடு பண்டம் முதலிய வேண்டு மென்பது கருத்தன்று. ஸம்ஸாரியாயினும் எவனுடைய மனம் உலக வின்பத்தில் நாடவில்லையோ அவனே ஞானி. அவனே மோக்ஷமடைய யோக்யன், அப்படிப் பட்டவனைத் தான் மகான் என்கிறோம்.

ஜனக மகாராஜன் மிதிலாபுரியை யாண்டும், ஸகல சுகங்களாற் சூழப்பட்டும், பற்பல விஷயங்களை கவனிக்கிற மாய்த் தோன்றியுந் திவ்விய ஞானியாக விளங்கினார். இதற்குக்காரணம் யாது? அவர் அத்தனை சுகங்களையும் அற்பமென் றெண்ணி எப்போதுந்தம்முடைய மனதைப் பிரம்மத்தினிடம் நாட்டியதே. ஜனகனுக்கு எந்தப் பொருளும் பிரமமாகவே தோன்றியது. இவரைப் பற்றிய சில கதைகளை இங்கு சொல்லுகிறோம். ஓர் சமயம் பிரம்ம ஞானியாகிய சுகருக்குச் சில ஸந்தேகங்கள் உண்டாகி அவைகட்கு ஸமாதான சொல்லும்படி தம் தந்தையைக் கேட்டார். அவர் சுகரை ஜனகனிடம் அனுப்பினார். சுகர் மிதிலைக்குச் சென்று கோட்டை வாசலில் நின்று தாம் வந்திருக்கும் ஸங்கதியை அரசனுக்கு அறிவிக்கும் படி சொன்னார். வாசற் காப்போன் அவ்வாறே சென்று தெரிவிக்க ஜனகமகாராஜன் தாம் வருவதாயும் அது வரை கோட்டை வாசலிலேயே சுகரைக் காத்திருக்கும் படியுஞ் சொல்லியனுப்பினார். அவ்வாறே சுகர் 7 நாள் காத்திருந்தும் ஜனகன் வரவில்லை, சுகரும் நின்ற நிலையைவிட் டசையவில்லை. எட்டாவது நாள் ஜனகன் திவ்யமான ஓர் பல்லக்கை யலங்கரித்து சகல மேள வாத்தியங்களுடன் வெகுமரியாதையாய்ச் சுகரை அழைத்து வரச்செய்து அவர் வந்தவுடன் நீர் பிரம்மஞானி உமது ஸக்தேகங்களை ஒரு நொடியிற் போக்குகிறே னென்று தத்வோபதேசஞ் செய்தார். ஜனகன் இவ்வாறு 7 - நாள் தாமதித்ததற்கும், 8-ம் நாள் மரியாதை செய்து அழைத்து வந்து ஸந்தேக நிவர்த்தி செய்ததற்குக் காரணமென்ன?

“**காரணமில்லாமற் காரியமுண்டாமோ**” ஜனகன் சுகருடைய மனோ நிலையை யறிய வேண்டி மேற் கூறிய பரீக்ஷையைச் செய்தான். 7-நாள் காத்திருக்கச் சொன்ன போது சுகர் என்ன சொன்னாரென்றும் பிரதி நிமிஷமும் அவருடைய முகம் எப்படி யிருந்த தென்றும் சேவகர்கள் மூலமாய்த் தெரிந்து கொண்டான். பிறகு பல்லக்கில் சுகரை யேற்றி மேள தாளங்களுடன் அழைத்து வந்த போதும் அவருடைய முகக்குறியையுணர்ந்தான், சுகருடைய முகம் மாறாமல் ஒரே தன்மையாயிருந்தது. காத்திருந்த போதும் பல்லக்கில் வந்த போதும், மரியாதை செய்யாத போதும் மரியாதை செய்த போதும் அவருடைய மனம் சற்றேனுஞ் சலிக்கவில்லை. உலகப் பொருள்களில் சுகருக்குக் கிஞ்சித்தேனும் விருப்பு வெறுப்பில்லை. ஆதலின் அவர் தத்வத்சையறிய யோக்கியரென்றுஞ் சிறந்த ஞானியென்றும் ஜனகன் தெரிந்து கொண்டான். இதனால் வேதாந்தி யானவன் இலாபங்கிடைத்த போது ஸந்தோஷப் படுவதையும் நஷ்டம் உண்டானபோது துக்கப்படுவதையும் தவிர்த்து சகல பொருள்களிடத்தும் வெறுப்பு விருப்பு ஆகிய இரண்டுங் கொள்ளாமல் பொறுமையென்னுஞ் சிறந்த பூஷணத்தைப் பூண்டு மனதை உண்மைப் பொருளிலேயே நாட்டவேண்டுமென்றறிகிறோம்.

“**ஆச்சரிய முண்டானால் அறிவுண்டாகும்**” எவன் ஓர் பொருளைக் கண்டவுடன் ஆச்சரியப் படுகிறானோ அவன் அப்பொருளின் காரணத்தை யறிய விரும்புகிறான். விருப்ப முண்டானவுடன் முயற்சியு முண்டாகிறது. ஜனகனைப் பிரம்ம ஞானியென்று எல்லோருஞ் சொல்லுகிறார்களே, அதற்கென்ன காரணம்? ஜனகன் அரசனாயிருந்தும் அவன் ஞானி யென்னும் பெயரை எப்படி அடைந்தான்? அதையறியவேணுமென்று ஓர் அந்தணன் ஆவல்கொண்டு மிதிலா நகரத்துக்குப்

போய் ஜனகராஜனை நோக்கி, “ராஜாவே, தாங்கள் ஓர் பெரிய ராஜ்யத்தை யாளுகிறீர்கள். தங்களுக்குள்ள கவலை யாருக்குமில்லை அஷ்டபோகங்களும் ஸகல சுகங்களுந் தங்களை சூழ்ந்திருக்கின்றன. இப்படியெல்லா மிருந்துந் தங்களை ஞானியென்று உலகத்தார் கூறுகின்றனர். தாங்கள் எப்படி ஞானியாயிருக்கக்கூடும்? அதைத் தெரிவிக்க வேணும்" என்றான். ஜனகன் அவ்வந்தணனை நோக்கி 'நல்லது! உமது ஸந்தேகத்தை இன்று சாயந்திரத்துக்குள் நிவர்த்தி செய்கிறேன். நான் சொல்லுகிறபடி நீர் செய்ய வேண்டும்” என்று சேவகர்களையழைத்து, “நீங்கள் இந்தப் பிராமணன் தலையை மொட்டையாக்கி ஓர் குடந்தில் ஜவத்தை நிரப்பி அவன் தலையில் எடுப்பித்து இந்நகரத்திலுள்ள தெருக்களை யெல்லாஞ் சுற்றிவர வேண்டும். ஒவ்வொரு வீதியிலும் அணியணியாக அழகிய மாதர்களை நிறுத்தி ஆடிப்பாடி பிராமணனை மயக்கும்படி செய்யுங்கள் இதன்றி பற்பல வேடிக்கைகளும் வினோதங்களும் இந்நகரில் இன்றைய தினம் நடக்கட்டும். பிராமணனது பஞ்சேந்திரியங்களையும் மனதையுங் கவரத்தக்க அற்புதமான காரியங்களைச் செய்யுங்கள் என்று கட்டளையிட்டுப் பிராமணனை அழைத்து "ஐயா, உம்முடைய தலையில் சேவகர்கள் இந்தக் குடத்தை வைப்பார்கள். நீர் அதைத் தலையில் வைத்துக் கொண்டு ஒரு துளிகூட நிலத்தில் விழாமல் இந்நகரிலுள்ள தெருக்களை யெல்லாம் கற்றி வரவேண்டும். அவ்வாறு வருவதில் ஒரு துளி நிலத்தில் விழுந்தால் அந்தக்ஷணமே உமது தலையறுபட்டுப்போம்" என்றார். பிராமணன் அதற்கிசைந்து குடத்தை யெடுத்துத் தலையில் வைத்துக்கொண்டான். அவனைச் சுற்றி நான்கு போர் வீரர்கள் உருவினகத்தியுடன் நின்று "ஐயா, பிராமணரே, மகாராஜாவின் ஆக்ஞையை உம்மிடந் தெரிவிக்கிறோம். நீர் இந்த குடத்தின் ஜலத்தில் ஓர் துளி சிந்தினால் உடனே உமது தலையை இக்கத்திகளால் வெட்டித்தள்ளுவோம்" என்றார்கள். பிராமணன் பயந்து அவ்வாறே ஓர் துளிகூட கீழே விழாமல் பட்டணமெல்லாஞ் சுற்றி அந்தி வேளையில் அரண்மனைக்கு வந்தான். உடனே ஜனகராஜன் அவரை யுபசரித் 'சுவாமீ, பட்டணத்தில் என்ன விசேஷம் பார்த்தீர்கள்?' என்றான். பிராமணன் 'நான் ஒன்றையும் பார்க்கவில்லை' யென, அரசன் "என்ன ஐயா, அப்படி சொல்லுகிறீர்கள். எத்தனையோ பாடகர்கள் பாட்டுகள் பாடவில்லையா? அழகிய மாதர் அணியணிபாக நின்று ஆடவில்லையா? வேடிக்கை வினோதங்கள் நடக்க வில்லையா?” வென்றான். விப்பிரன் 'ஹே ராஜனே! நான் அவைகளைப் பார்க்கவில்லை. என் தலையிலுள்ள குடத்திலேயே என் மனதை வைத்தேன். வேறொன்றிலும் என் மனம் நாடவில்லை யென்றான். ஜனகர் அவரை நோக்கி “சுவாமீ, இப்போது அறிந்து கொண்டீர்களா காரணத்தை? தங்களுடைய மனங் குடத்தில் மட்டும் எப்படி நிலைத்திருந்ததோ அப்படியே என் மனம் பிரம்மத்திலேயே நிலைத்திருக்கிறது. பெரிதாகிய இந்நகரின் தெருக்க ளெல்லாவற்றிலும் நடந்த கூத்துகளும் வேடிக்கைகளும், கண்ணைக் கவரத்தக்க பொருள்களும் உம்முடைய மனதை யெப்படி யிழுக்கவில்லையோ, அப்படியே இராஜாங்க விஷயமான கவலைகளுஞ் சிற்றின்பங்களும் என் மனதை யிழுக்க வில்லை. இதுதான் நான் அரசனாயிருந்தும் ஞானியென்றழைக்கப் படுவதற்குக் காரணம்" என்றார். ஆதலின் ஒவ்வொருவரும் தத்தம் மனதைச் சிற்றின்பத்தில் விடாது பகவானிடஞ் செலுத்திப் பிரார்த்தித்தால் ஞானத்தை யடையத் தடை

யில்லை. நாட்டிதாலுங் காட்டிலிருந்தாலும் மனதை தன்வசப் படுத்தினாலன்றி ஞானமுண்டாக தென்றறிகிறோம்.

"பொறுத்தவர் நாடாள்வார் பொங்கினவர் காடாள்வார்" என்பது பெரியோர் வாக்கியம். இதற்குத் திருஷ்டாந்தமாக பாரதக் கதைகளைச் சொல்லுவர். அவைகளெல்லாம் மிக்க நீளமாயிருப்பதால் சிறிதாகிய ஓர் கதை சொல்லுகிறோம். இரண்டு சேவல்கள் ஓர் நிலத்தைச் சொந்தம் பாராட்டி ஒன்றொடொன்று சண்டைப் போட்டன. (குடியானவன் தன்னுடைய நிலமென்று சொல்லிக் கொள்ளுகிற சங்கதி ஒருபக்கமிருக்கட்டும்.) கடைசியாக ஒருசேவல் மற்றொன்றை யடித்து விரட்டியது. தோற்றுப் போன சேவல் ஓர் சுவரின் பொந்தி லொளிந்து கொண்டு பொறுமையுடனிருந்தது. சண்டைபோட்டு ஜெயித்த சேவல் உயர்ந்த சுவரின் மேல் பறந்துட்கார்ந்து தனது இறக்கைகளைப் படபடவென்றடித்தது. அத்துடனிராமல் தான் ஜெயித்த விஷயத்தைப் பற்றி அடங்காச் சந்தோஷங் கொண்டு கொக்கரகோவென்று அடிக்கடி கூவியது. அந்த சமயம் ஆகாசத்தில் பறந்து கொண்டிருந்த கழுகு தடாலென்று கோழியின் மேற் பாய்ந்து அதை யடித்துக்கொண்டு போயிற்று. தோல்வியடைந்து பொந்தி லெளிந்து கொண்டிருந்த சேவல் நிர்ப்பயமாய் வெளியே வந்து நிலத்தை யனுபவித்தது. இந்தக் கதையால் எளியாரை வலியார் அடித்தால் வலியாரை தெய்வமடிக்குமென்றும் பொறுத்தவர் பூமியாள்வாரென்றும் அறிகிறோம். இத்துடன் கர்வப்படுகிறவர்கள் கட்டாயமாய் அழிந்து போவரென்பதும் பெறப்பட்டது.

"சிவகைங்கரியமே சிறந்த கைங்கரியம்" சிவாலயங் கட்டி, குளங்கள் வெட்டி சிவலிங்க ஸ்தாபனம் செய்து சிவபக்தியைச் செய்வோர் இகலோகத்தில் நல்ல ஸம்பத்தும் லக்ஷணமான பத்தினியும் ஸுபுத்திரர்களையும் அடைந்து ஞானசிகா மணிகளாய் முடிவில் முக்தியை எய்துவர். சிவத்தியானத்தையே செய்து கொண்டிருக்கும் உத்தமர்களுக்கு சர்வபீஷ்டங்களும் நிறைவேறும். ஆதலின் நாம் எப்போதும் சிவ, சிவ என்று தியானஞ் செய்து சிவநேசச் செல்வர்களுடன் சேர்ந்து ஹிருதய சுத்தர்களாய் ஞானஸம்பத்தை யடையக்கடவோம்

"அபிமானமே பிரதானம்." இவ்வுலகத்தில் பிரதிதினமும் நாம் அனுபவிக்கும் சுகதுக்கங்களுக்கு அபிமானமே காரணமாகிறது. அபிமானத்தை யொழித்தால் ஸர்வ துக்கங்களும் நாசமாகும். அவ்வாறு ஒழிப்பது ஸாத்தியமோ வெனில், ஸாத்தியமென்றே சொல்லலாம்.

பக்கம் 77

இராஜ யோகம்.

இராஜயோகமானது எட்டுப்படிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

(1) **<u>இயமம்;</u>** அதாவது கொல்லாமை, பொய்யாமை, திருடாமை, தானம்வாங்காமை, முதலியன

(2) **நியமயம்;** அதாவது சுத்தம், திருப்தி, பொறுமை, ஈசுவராற்பணஞ்செய்தல், படிப்பு முதலியன

(3) **ஆஸனம்;** உட்காரும் தன்மை,

(4) **பிராணாயாமம்;** பிராணனை வசப்படுத்தல்,

(5) **பிரத்தியாஹாரம்;** மனதை உள்ளிந்திரியங்களிற் பிரவேசிப்பித்தல்,

(6) **தாரணம்;** மனதை ஒரேவிடத்தில் நிறுத்தல்,

(7) **தியானம்;** மனம் நின்ற ஒரேவிடத்தை நினைத்துக்கொண்டிருப்பது,

(8) **ஸமாதி;** அறிவுக்கெட்டாத நிலைமையிலிருத்தல். இயமும் நியமும் நன்னடக்கையைப் பற்றியனவாதலின் அவ்விரண்டுமில்லாதவனுக்கு எவ்விதமான யோகஸித்தியுமுண்டாகாது. யோகியானவன் பிறரை ஹிம்ஸிக்கவெண்ணலாகாது. எந்தப் பிராணியிடமும் இரக்கம் பாராட்டவேண்டும்.

இதற்கடுத்தபடி ஆஸனம். அதாவது உட்காருந்தன்மை. பிரதிதினமுஞ் சரீரத்துக்கும் மனதுக்கும் பலவித பயிற்சிகளிருக்க வேண்டும். ஒருவிதமான உயர்ந்த நிலைமையை யடையும்வரை மேற்கூறிய பயிற்சிகளைச் செய்வது அவசியம். ஆதலின் அவ்வித பயிற்சிகளைச் செய்வதற்கு அனுகூலமான நிலைமையை நாம் கண்டுபிடிப்பது முக்கியம். எவனுக்கு எந்த ஆஸனம் இலகுவாயிருக்கிறதோ அந்த ஆஸனமே உபயோகிக்கத்தக்கது ஒருவனுடைய நிலை மற்றொருவனுக்கு சரிப்படாது, உதாரணமாக சிலர் நின்றுகொண்டே பாடம் படிக்கின்றனர். சிலர் நடந்து கொண்டே படிக்கின்றனர். சிலர் உட்கார்ந்து கொண்டே படிக்கின்றனர் பற்பல ஆஸனங்களால் பற்பல நரம்புக்கருவிகளுக்கு வலிவுண்டாகும். நரம்பின் ஓட்டத்தை வேறுபடுத்துவதற்காக வித்தியாசமான ஆசனங்களேற்பட்டிருக்கின்றன. புதிய அசைவுகளுண்டாகி தேகத்தின் தன்மை மாறிவிடும், யோகத்தில் செய்யவேண்டிய முக்கிய காரியங்களுக்கெல்லாம் முதுகெலும்பு சாதகமாயிருப்பதால் அதைத் தாராளமாயிருக்கும்படி நிமிர்ந்து உட்காருவது நன்மை. நமது மார்பு, கழுத்து, தலை முதலிய மூன்றும் ஓர் நேர் கோட்டிலிருப்பது போல் தோன்ற வேண்டும். சரீரத்தின் முழுப்பளுவையும் விலாவெலும்புகள் தாங்கட்டும். அப்போது தான் சுகமான ஆசனமேற்படும். முதுகெலும்பு நாடிகள் தாராளமாக வேலை செய்யும். மார்பைப் பின்னால் தள்ளிக்கொண்டு உட்காருகிறவன் ஓர் பெரிய காரியத்தைப் பற்றி யோசிக்க முடியாது. ஆசனமானது முச்கியமாய் ஹடயோகிகட்கு உரித்தானது மிகுந்த கஷ்டப்பட்டு இதைசாதகஞ் செய்ய வேண்டும். இதனால் சரீரம் நல்ல வலுவையடைகிறது. சரீரத்திலுள்ள எந்த பாகத்தை எப்படி வளைக்க வேண்டுமானாலும் ஹடயோ கிகளாற் கூடும். சரீரம் அத்தனை சுவாதீனப்படுகிறது. இது மோக்ஷார்த்தமன்று. ஆதலின் ராஜயோகிகட்கு ஆசனமானது அத்தனை அவசியமில்லை. யோகியானவன் தன் ஹிருதயத்தை அடிக்க வொட்டாமல் நிறுத்தலாம். இந்த மாதிரி சக்தியால் வெகுநாள் உயிரோடிருக்கலாம்.

ஹடயோகிகள் யோகிகள் கருத்து தேகசௌக்கியமே ஹடயோகிக்கு நோயுண்டாகாது. 150-வயதானாலும் நரை திரை மூப்பு முதலியன உண்டாகா. இவ்வளவு தான் ஹடயோகத்தாலுண்டாகும் பிரயோஜனம். ஓர் ஆலமரம் 5000-வருஷமிருக்கிறது. ஆகிலும் என்ன? அது ஆலமரந்தானே. அதுபோல் மனிதன் வெகு காலம் உயிருடனிருந்தாலும் அவன் மனிதனே. அதனால் மோக்ஷமுண்டாய்விடாது.

மேற்கூறிய விதமான ஆசனக்கிரமங்களை யறிந்துகொண்டு யோகியானவன் நாடிகளைச் சுத்தஞ் செய்ய வேண்டும். இந்த பாகத்தை சிலர் அநாவசியமென்று தள்ளிவிட்டார்கள். ஆகிலும் மகான் சங்கராசாரிய சுவாமிகளே இது அவசியமென்று சொல்லியிருப்பதால் இதை அனுசரிப்பது நன்று. வலது மூக்கு துவாரத்தைப் பெருவிரலால் அழுத்திக்கொண்டு இடது மூக்கு துவாரத்தின் மூலமாய் காற்றை யிழுக்கவேண்டும் பிறகு தக்ஷணமே இடது மூக்கு துவாரத்தை யழுத்தி வலது மூக்கு துவாரத்தின் வழியாய் அக்காற்றை வெளியே தள்ள வேண்டும். மறுபடியும் வலது துவாரத்தின் வழியாய் மூச்சையிழுக்து இடது துவாரத்தின் வழியாய் வெளியே விடவேண்டும். இம்மாதிரி அவரவர் சக்திக்குத் தக்கபடி ஒவ்வொரு நாளும் காலை, பகல், அந்தி, அர்த்தராத்திரி முதலிய காலங்களில் மூன்று நான்கு அல்லது ஐந்து சந்தர்ப்பங்களில் அப்பியாசம் செய்தால் ஒருபக்ஷம் அல்லது ஒரு மாதத்தில் நாடி நரம்புகள் சுத்தப்படும். அதன் பிறகு பிராணாயாமம் ஆரம்பமாகிறது.

அப்பியாசம் அதி அவசியம். ஒவ்வொரு நாளும் நான் சொல்வதை நீ கேட்டுக்கொண்டிருக்கலாம். அப்பியாஸம் செய்யாவிட்டால் சிறிதேனும் பிரயோஜன முண்டா காது. எல்லாம் அப்பியாஸிப்பதிலிருக்கிறது. யோக விஷயங்கள் அனுபோகமில்லா தவர்களுக்குப் புலப்படா. ஒவ்வொன்றையும் நாம் அனுபவித்து அதன் உண்மையை அறியவேண்டும். சர்க்கரையை சாப்பிட்டவனே அதன் ருசியை உணரக்கூடும். யோகம் செய்வதற்குப் பலவித தடைகளுண்டு.

(1) சரீர அஸௌக்கியம். சரீர நோயுற்றால் யோகம் செய்யமுடியாது. ஆதலின் நாம் சரீரத்தை ஸௌக்கியமான நிலைமையில் வைத்துக் கொள்ள வேண்டும். தினந்தோறும் உண்ணுகிற ஆகாரத்திலும் உட்கொள்ளுகிற தண்ணீரிலும் கவனம் வைக்க வேண்டும். அஜீர்ணத்தையும் மயக்கத்தையும் தரக்கூடிய ஆகாரங்களை யுட்கொள்ளலாகாது. தேக ஆரோக்கியமானது யோகத்துக்கு ஆதாரமே யன்றி அதுவே யோகத்தின் கருத்தென்றெண்ணலாகாது. அப்படியானால் மிருகங்கள் நம்மைவிட சிறந்தவைகளாகுமே. மிருகங்களுக்கு மனிதர்களை விட அதிகமான சரீர ராரோக்கியமுண்டு. யோகத்துக்கு

(2) -வது தடை ஸந்தேகம். நாம் பார்க்காத வஸ்துவைப்பற்றி நாம் ஸந்தேகிப்பதுண்டு. மனுஷ்யன் வார்த்தையை மட்டும் நம்பியிருக்க முடியாது. பரிசீலனை செய்து அனுபவிக்க வேண்டும். ஆதலின் யோகசாஸ்திரங்களிற் சொல்லியிருப்பவை உண்மை யாவென்னும் ஸந்தேகம் நமக்கு உண்டாகிறது. மகாபுக்திசாலிகள் கூட இந்த ஸந்தேகத்தைக் கொள்வது ஸகஜமே. ஆதலின் சிலநாள் யோகாப்பியாஸம் செய்தால் சிற்சில உண்மைகளை யறிந்துகொள்ளலாம். அவற்றால் ஸந்தேகம் ஒழிந்துபோம். ஒரு விஷயத்தை யனுபவித்து உண்மையை

யறிந்தால் மற்ற விஷயங்களிலுண்டான ஸந்தேகம் நீங்கிவிடுமென்று ஓர் யோகி கூறுகிறார். யோகாப்பியாஸம் செய்யத் கொடங்கிய சில மாசங்களுக்குள் பிறர் கருத்தை நாம் அறியக்கூடும். எதிரேயிருப்பவர்களின் எண்ணம் நமக்குத் தெளிவாய்த் தெரியும். வெகு தூரத்தில் நடக்கும் ஓர் ஸமாசாரம் உனக்குத் தெரியும், உன்னுடைய மனதை அதில் நிறுத்தினால் அந்த சமாசாரத்தைப் பற்றி பிறக்கும் தொனிகளெல்லாம் உன் செவியிற் படும். ஆரம்பத்தில் கொஞ்சம் தெரியும். உதாரணமாக உன்னுடைய நாஸிகையின் நுனியிலேயே உன் எண்ணங்களை யெல்லாம் பொருத்தினால் சில நாளைக்குள் திவ்யமான வாசனையுண்டாகும். இதனால் ஸ்தூலப் பொருள்களையின்றி சூக்ஷ்மமாகிய மனோ உணர்ச்சிகள் சிலவிருக்கின்றனவென்று நீ நன்றாக அறியலாம். இம்மாதிரியான அப்பியாஸங்களின் முக்கிய தாத்பரியம் முக்தியேயன்றி வேறல்ல. நாம் எல்லாவற்றையும் அடக்கியாளுஞ் சக்தியை யடையவேண்டியதிலேயே கருத்தை வைக்கவேண்டும், சரீரமாவது மனமாவது நமக்கு எஜமானர்களாயிருக்கக்கூடாது. நாம் அவைகட்கு எஜமானர்களாயிருக்க வேண்டும். நம்முடைய சொற்படி அவைகள் கேட்கவேண்டும்.

மனிதனே சகல பிராணிகளுக்கும் மேலானவன். மனுஷ்ய சரீரமே எல்லா சரீரங்களுக்கும் மேலானது. தேவதைகள் மோக்ஷமடைய வேண்டுமானாலும் மனிதர்களாய்ப் பிறந்தே தீரவேண்டும் தமோ குணத்திலிருந்து சகல மிருகங்களும் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால் அவைகள் கீழ்த்தரமானவை. மிருகங்களுக்கு தியான சக்தி கிடையாது. தேவர்கள் ஞான மடையவேண்டுமானால் பூலோகத்திற் பிறக்க வேண்டும். மனுஷ்ய ஜன்மொன்றினாற்றான் முக்தியடையக் கூடும். பிராணாயாமமாவது பிராணனை யடக்கியாளுவது. மூச்சை நம்மிஷ்டம்போல் இழுத்து வெளியே விடுவதற்கும் ஏகாக்கிர சித்தத்துக்கும் என்ன சம்பந்தம்? ஓர் இயந்திரத்துக்கு சக்கரம் ஆகாரமாயிருப்பது போல் அதாவது சக்காரத்தால் இயந்திரம் ஓடுவது போல் ஸ்வாஸத்தால் தேகத்தின் சக்திகள் உண்டாகின்றன. முற்காலத்தில் ஓரரசனிடம் ஒரு மந்திரியிருந்தான். அவன் வெகு சமர்த்தன். ஏதோ பொல்லாத காலம் வந்து அரசனுடைய வெறுப்புக்கு அருகனானான். அரசன் தன் அமைச்சனை ஓர் கோபுரத்தின் மேலறையில் போக்கி கதவைப் பூட்டிக் கொண்டு வரும்படி தன் சேவகர்களுக்கு உத்தரவு செய்தான். அவ்வாறே மந்திரி சிறையிலிருப்பதை அவன் மனைவியறிந்து அழுது புலம்பி கோபரக்தின் கீழ் வந்து மேலேயிருக்கும் தன் புருஷனைப் பார்த்தாள். அவன் அவளை நோக்கி, "அடி அழாதே, ஓர் யுத்தி செய்கிறேன். நான் சொல்லுகிறபடி செய். இன்றிரவு ஓர் பெரிய கயிறு, சிறிய பின்னல் கயிறு, நூற்கண்டு, பட்டு நூல், ஓர் வண்டு, கொஞ்சம் தேன் ஆகிய இந்த சாமான்களைக் கொண்டுவா" வென்றான் அவள் அவ்வாறே செய்தாள். மந்திரி அவளை நோக்கி, "அடி பட்டு நூலால் வண்டை நன்றாய்க்கட்டி அதன் தலையில் தேனைத் தடவி சுவரின் மேல்விடு" என்றார். அவள் அவ்வாறே செய்தாள் அந்தவண்டு தேன் வாசனையால் அது மேலேயிரு க்கிறதென்றெண்ணி சுவரின் மேலேறி ஜன்னலுக்குள் போயிற்று. உடனே மந்திரி அந்த வண்டைப்பிடித்து அதிற் கட்டியிருக்கும் பட்டு நூலைக் கிரகித்தான் உடனே பெண் சாதியைக் கூப்பிட்டு, அடி இந்தப் பட்டு நூலுடன் நூற்கண்டு நூலைக் கட்டிவிடு" என அவள் அவ்வாறே செய்ய; மெள்ள அதை மேலேயிழுத்து அந்நூலைப் பற்றினான். இதன் பிறகு மறுபடி தன்

காதலியை விளித்து “அடி, இந்த நூலுடன் பின்னல் கயிற்றைப் பிணைத்தக்கட்டு" என்று அதையும் கவர்ந்தான். அதன் பிறகு அப்பின்னல் கயிற்றில் பெரிய கயிற்றைக் கட்டி விடும்படி சொல்லி மேலே வந்தவுடன் அதைச்சன்னல் கம்பியிலிருக்கிக்கட்டி அகன் வழியே மளவென்று கீழேயிறங்கி மனைவியுடன் வேறோரூருக்குப் போய்விட்டான், இக்கதையிலுள்ள பட்டு நூல்போல் நமது ஸ்வாஸமிருக்கிறது. அதைக் கொண்டு தான் நூற்கண்டாகிய நாடியோட்டங்களை வசப்படுத்தவேண்டும். அவற்றினால் எண்ணங்களாகிற பின்னல் கயிறுகளைப் பிடித்துக்கொள்ள வேண்டும். கடைசியாக பெருங்கயிறாகிய பிராணனை வசப்படுத்தினால் முக்தியை யடையலாம்.

நமது சரீரத்தைப்பற்றி நமக்குத்தெரியாது. இறந்துபோன சவத்தைச் சேதிக்கலாம். சிலர் சரீரத்துக்குள் என்ன நடக்கிறதே ன்பதை யறியு மாறு உயிரோடிருக்கும் மிருகங்களை யறுக்கிறார்கள். ஆகிலும் மிருகசரீரம் மனுஷ்ய சரீரமாகாது. ஆதலின் நம்முடைய தேகத்தைப்பற்றி நமக்கு நன்றாய்த் தெரியாது. இதற்கென்ன காரணம்? உள்ளே நடக்கும் நுட்பமான காரியங்களை யறியும் சக்தி நமக்கில்லை. என்ன சமாசாரமென்று யாரேனும் கேட்டால் எல்லாம் மனதின் காரியமென்று சொல்லிவிடுகிறோம் அந்த அதிசூக்ஷமமான சக்தியை அறிவதற்கு முதலில் தெரியக்கூடிய சக்தியைப்பிடிக்கவேண்டும். பிராணனிருப்பதற் கடையாளம் சுவாசம் விடுதல். ஆதலின் விசுவாசத்தைக்கொண்டு வேலை செய்தால் அதாவது அதை நம் வசப்படுத்தி அடக்கியாண்டால் பிறகு பிராணனை அடக்கியாளக்கூடும். முதலில் சுவாசத்தைப் பிடித்துக்கொண்டு சரீரத்தில் நுழைந்தால் பின்னர் அதிக சூக்ஷமமான சக்திகளையுண்டகலாம். நாடியசைவுகள் எப்படியுண்டாகின்றன. தேகமுற்றிலும் நாடிகள் எப்படிப் போகின்றன வென்பது தெரியும். இவ்விதமாகப் பரிசீலனையும் அப்பியாசமும் செய்கால் தேகம், மனம் ஆகிய இரண்டையும் நமக்கு வேலைக்காரர்களாகச் செய்து கொள்ளலாம்.. அறிவே சக்தியாகும். இந்த சக்தியை அடைவதற்காக நாம் பிராணாயாமம் செய்ய வேண்டும். அதாவது பிராணனை யடக்கியாள வேண்டும்.

பிராணாயாமமென்பது இலகுவன்று. யோகாப்பியாசங்கள் ஒவ்வொன்றும் ஏன் செய்யவேண்டுமென்பதற்குக் காரணமுண்டு. ஒவ்வொரு சக்தி வேலை செய்யத் தொடங்கும். ஆனால் அசாத்தியமான சாதகம் செய்யவேண்டும். அப்பியாசம் அதிகமாக யோகத்தின் உண்மை புலப்படும். நாடியின் அசைவுகள் உன் தேகத்துக்குள் உண்டானவுடனே சகல சந்தேகங்களும் நீங்கிப்போம். ஆனால் ஒவ்வொருநாளும் கஷ்டமான அப்பியாசம் செய்ய வேண்டும்.விடியற்காலம், சாயந்திரம் ஆகிய இரண்டு வேளைகளும் யோகாப்பியாசத்துக்கு சிலாக்கிய மானவை. இரவு மாறி பகலுண்டாகும் போதும் பகல் மாறி இரவு உண்டாகும் போதும் அமைதிகாலங்கள். ஆதலின் அப்போது உன் சரீரமும் அமைதியான நிலைமையிவிருக்கும். பிரதிதினமும் யோகாப்பியாசம் செய்த பிறகே உண்பதென்ற வைராக்கியத்தைக் கொள்வது நன்று.

உங்களில் யாருக்குக்கூடுமோ அவர்கள் யோகாப்பியாசம் செய்வதற்கென்று ஓர் பிரத்யேகமான வீடு அல்லது அறைவைத்துக் கொள்ளலாம். அதில் நித்திரை

செய்யலாகாது. அந்த அறை எப்போதும் பரிசுத்தமா யிருக்கவேண்டும். ஸ்நாநம் செய்யாமல் அந்த அறைக்குள் நுழையாதே. தேகம், மனம் ஆகிய இரண்டும் சுத்தமாயிருக்கும் போது அதற்குள் போ. அடிக்கடி அவ்வறைக்குள் வாசனை வீசும் புஷ்பங்கனை வைத்துக்கொள். புஷ்பங்கள் யோகிகட்கு உபயோகமானவை. சாம்பிராணிவத்திகளை வைத்து எப்போதும் நல்ல வாசனையை யூட்டவேண்டும். சண்டை போடுவது, கோபிப்பது, அசுத்தமான எண்ணம் இவை அவ்வறையில் நிகழக்

கூடாது. இவ்விதமாகச் செய்து வந்தால் நாளடைவில் அவ்வறையில் ஓர்வித சுத்தமுண்டாகும். எப்போதாவது துக்கம், சந்தேகம் முதலிய மனோவிகாரங்க ளுண்டானால் அவ்வறைக்குள் சென்று அவைகளை நீக்கிக்கொள்ளலாம். இந்தக் கருத்தைக் கொண்டு தான் கோயில்கள் கட்டப்படுகின்றன.

அபிமானத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் விட்டு விடவேண்டும். அதற்காகத்தான் உலக சுகத்தை வெறுக்க வேண்டுமென்று பெரியோர் கூறுகின்றனர் எந்த வஸ்துவில் ஓர் சுகமுண்டென்று விசுவாஸம் கொள்ளுகிறோமோ அந்த வஸ்துவாலேயே துக்கமும் உண்டாகிறது. உதாரணமாக குழந்தையினிடம் அபிமானம் வைக்கிறோம். அது விளையாடும் போதும் மழலைச் சொற்களைச் சொல்லும் போதும் நடக்கும்போதும் சந்தோஷமுண்டாகிறது. அதே குழந்தைக்கு ஒரு நாள் ஜுரமடித்தால் அப்போது நமக்குண்டாகும் வியஸனத்துக்கு அளவில்லை. இதற்காகப் பெரியோர்கள் அபிமானத்தை விட்டுவிடும்படி சொல்லுகிறார்கள். இதனால் பிறந்த குழந்தையை ஆதரிக்காமல் விட்டுவிட வேண்டுமென்பது தாத்பரியமல்ல. அதை வெறுக்க வேண்டிய தென்பதும் பெரியோர்களின் கருத்தல்ல வெறுக்க வேண்டியது எதையென்றால், குழநகையின் விளையாட்டுகளால் நாம் அடையும் சுகத்தை. இதற்காகத்தான்,

"வெறுப்பு விருப்பம்" இரண்டும் கூடாதென்கிறார்கள். உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் பகவத் சங்கற்பத்தால் உண்டாகி சில காலமிருந்து அழிந்துபோகின்றன வாதலின், நாமேன் அந்தப் பொருள்களிடம் பிரீதியையாவது கொள்ள வேண்டுமென்று நம்மை நாமே ஒரு கேள்வி கேட்க வேண்டும். அதனால் விருப்பம் வெறுப்பு ஆகிய இரண்டையும் நாம் கொள்வது அனாவசியமென்று தோன்றும். நுனால் இதிலிருந்து இன்னொரு கேள்வி யுண்டாகலாம். ஒரு பொருளினிடத்து பிரீதியாவது அப்பிரீதியாவது கொள்ளாமற் போனால் அந்தப் பொருளைப்பற்றி நாம் கவலை கொள்ளாமலிருந்து விடுகிறோம். உதாரணமாக: குழந்தையிடம் பிரீதியையாவது அப்பிரீதியையாவது கொள்ளாமற்போனால் அக்குழந்தையைவளர்ப்பதில் நமக்குக் கவலையில்லாமற் போகுமன்றோ வெனின், இது உண்மைதான். நாம் எந்தட் பொருளைப்பற்றியும் கவலைப்படக் கூடாதென்பதே பெரியோர்களின் கருத்து. ஆனால் நம்முடைய கடமையை நாம் செய்யவேண்டிய தவசியம். அது கர்மயோகத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாமல் தவிர்க்கிறதும், செய்யத்தகாத காரியங்களைச் செய்கிறதும் தோஷமாகும். பெண்சாதி, பிள்ளை முதலிய ஸமீப பந்துக்களை இரக்ஷிக்க வேண்டியது கர்மயோகியின் கடமை. அவன் தன் கடமையைச் செய்ய வேண்டும். ஆனால் அபிமானத்தை மெள்ள மெள்ளத் தவிர்க்கவேண்டும். அவ்வாறு

செய்வதால் சுக துக்கங்களால் பீடையுறாமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளலாம். ஆத்மவிசாரணை செய்யக்கூடும் என்ற கருத்துடன் பெரியோர்கள் இவ்வாறு விதித்திருக்கிறார்கள். ஆதலின் அபிமானத்தையொழிப்பது அவசியமாயினும் அது நாளடைவில் ஸாதிக்கவேண்டிய விஷயமென்பதையும், வெறுப்பும் விருப்பமும் கொள்ளாமற் போனாலும் தான் செய்யவேண்டிய கடமையைக் குறைவறச் செய்யவேண்டு மென்பதையும் புத்திமான்கள் ஊகிக்கடவர்.

"ஆகாரமில்லா விட்டால் வியவகாரமில்லை" யென்று ஓர் பழமொழி யுண்டன்றோ. அந்த ஆகாரத்தை சாப்பிடுகிறவன் யார் என்று என்னை நீ கேட்டால் நான் என்ன சொல்வேன். நான் சாப்பிடுகிறேன் என்பேன். நீ மற்றொரு கேள்வி கேட்கிறாய். அதாவது ஆகாரத்தை நீ சாப்பிடுகிறாயென்று ஒப்புக் கொள்ளுகிறேன். உன் வயிற்றுக்குள் போன ஆகாரத்தை ஜீரணமாக்குகிறவன் யார்" என்கிறாய். இந்தக் கேள்வியில் தான் எனக்கு ஸந்தேகமுண்டாகிறது. ஆகாரத்கை நான் சாப்பிடுகிறேன் என்பது எனக்கே தெரிகிறது. என்னுடைய கண்களால் இலையிற் போட்டிருக்கும் சோற்றைப் பார்ச்கிறேன். கைகளால் அதையெடுக்கிறேன். வாயில் போட்டுக் கொள்ளுகிறேன். உள்ளே போம்படி விழுங்குகிறேன். இந்த மட்டில் என் காரியம் முடிந்த போகிறது அதற்கு மேல் அது ஜீரணமாகிறதே, அதை நானா ஜீரணிக்கச் செய்கிறேன்? நான் ஜீரணிக்கச் செய்கிறேனென்றால் உள்ளே சென்ற ஆகாரத்தை ஜீரணிக்காமல் ஒரு நாளாவது இரு பார்ப்போமென்று நீ கேட்டால் நான் பசபச வென்றல்லோ விழிக்கவேண்டும். இதென்ன கஷ்டம்? நான் செய்யாத காரியத்தை நான் செய்கிறேனென்று பொய் சொல்வது மானக்கேடன்றோ? அப்படி பொய் சொன்னால் யாரும் என்னை அரை காசுக்கும் நம்பமாட்டார்கள். ஆதலின் என் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் பொய் சொல்லக்கூடாது. ஒருவேளை தந்திரமாக உள்ளே யிருந்து ஒருவன் ஜீரணிக்கச் செய்கிறானென்று சொன்னால் அது நகைப்புக்கிடம். என் தேகத்துக்குள் இன்னொருவன் புகுந்த கொண்டிருக்கிறா னென்றால் அதைவிட வெட்கக்கேடான காரியம் வேறொன்றில்லை என் வீட்டில் ஒரு பயல் வந்தால் அவனை விரட்டுகிறேன். நான் வஸிக்குமிடத்தில் இன்னொருவன் வந்தால் என் மனம் பொறுக்குமா? இந்த ஸமாதானமும் பிரயோஜனமில்லை. என் சரீரத்துக்குள் வேறொருவனிருக்கிறானென்றால் அவன் சரீரத்துக்குள் இன்னொருவனிருக்கிறான் என்று இப்படியே சொல்லிச் சொல்லி என்னையோர் பெரும்பூதமாகவன்றோ நான் நினைக்கும்படி யேற்படுகிறது ஆதலின் அது பிசகாகும். ஒருவேளை பகவான் ஜீரணம் செய்கிறாரென்றால் நீ என்னைப் பார்த்து என்னைப் பார்தது ஓர் கேள்வி கேட்பாய் அதாவது, "அடே, சில யோகிகள் புசித்த அன்னத்தை ஜீரணிக்காமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சிலர் கல்லைத் தின்று ஜீரணித்துக் கொள்ளுகிறார்களே. இவர்களெல்லாம் பகவானோ ஒரு வேளை எல்லாம் பகவானுடைய செயல் என்றால், சோற்றை யுண்பது உன் செயலென்று சொல்லிக்கொண்டாயே' என்பாய் ஆதலின் அப்படியும் சமாதானம் சொல்லக்கூட வில்லை. பிறகு என்ன தான் சொல்லுகிறது. எதுதான் உண்மையென்று ஆலோசிக்கிறேன். சற்று நேரம் உன்னைப் பொறுத்திருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

சில குழந்தைகள் இரவு 7 மணிக்கெல்லாம் தூங்கிப் போகின்றன. இரவு 10 மணிக்கு ஏதேனும் பக்ஷணம் கொடுக்க வேண்டுமென்று பெற்றோர்கள் ஆசைப்படுகின்றனர். அவர்கள் திவ்வியமான லட்டு ஒன்றைக் கொண்டு வந்து தூங்குங் குழந்கைபை எழுப்பி அதைத் தின்னும்படி சொல்லுகிறார்கள். அது தூங்கி வழிந்து கொண்டே கண்ணை மூடிக்கொண்டு லட்டு முழுவதையும் தின்று படுக்கையில் சாய்ந்து விடுகிறது. மறுநாள் எழுந்து, அம்மா ஏன் எனக்கு லட்டு கொடுக்கவில்லையென்று சண்டை போடுகிறது. தயார் அடே நீ நேற்றிரவு லட்டு தின்றாயே, நான் கொடுத்தேனே என்றால் நான் தின்னவில்லை, யார் தின்றார்களோ வென்று சண்டை போடுகிறது. இப்படி தான் செய்த காரியம் தனக்கு தெரியாமற் போனதற்கென்ன காரணம். நித்திரையன்றே? உண்மையாக குழந்தை தான் லட்டு தின்றிருக்கிறது. அது தான் தின்ன வில்லையென்று சாதிப்பதைப் பிறர் நம்புவார்களா? ஆனால் அந்தக் குழந்தை பொய் சொல்லுகிறதென்று அதைக் கோபித்துக் கொள்ளலாமா? கூடாது. அக்குழந்தை லட்டு தின்னும்போது நித்திரையால் பீடிக்கப்பட்டு தின்னுகிறோமென்ற ஞானமின்றி இருந்தது. அதுபோல் ஏதோ ஓர் காரணத்தால் ஜீரணிக்கச் செய்வதும் நான் தான் என்பதையறிய முடியாத அஞ்ஞானம் எனக்குண்டாயிருக்கலாம். சில யோகிகள் மூச்சையடக்கி வெகுநாள் வரையும் செத்தபிணம் போலிருக்கின்றனர். இவ்வாறாக நம்மால் செய்தற்கரிய காரியங்களை அவர்கள் செய்வதால் எல்லாக் காரியங்களையும் நாமே செய்கிறோ மென்பதை நன்றாயுணரலாம். ஆனால் அப்படி செய்யும் போதெல்லாம் நாம் செய்கிறோமென்ற ஞானம் நமக்கு இல்லை. இந்த ஞானத்தை யடைவதற்காகத்தான் யோக மார்க்கத்தைப் பெரியோர்கள் அனுசரிக்கின்றனர்.

கருமங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். மனதுக்கு இரண்டு தட்டுகளிருப்பதாய் வைத்துக்கொள்வோம். மேல் தட்டில் அதனால் செய்யப்படுங் காரியங்களெல்லாம் நான் நான் என் றவியவகாரத்தைச் சேர்ந்திருக்கின்றன. இதற்கு உதாரணம்: 'நான் ஆகாரம் சாப்பிடுகிறேன். நான் வஸ்திரம் கட்டிக்கொள்ளுகிறேன், நான் புஸ்தகம் படிக்கிறேன். என்று தன்னை கர்த்தாவாகச் சுட்டிக் கொள்ளக்கூடிய காரியங்கள். இந்த கருமங்களெல்லாம் மேல் தட்டிலிருக்கின்றன. கீழ்த்தட்டைப் பார்ப்போம். இதிலிருக்கும் கருமங்கள் நான் என்ற வியவகாரத்துடன் சேருகிறதில்லை. உதாரணம்: ஆகாரம் ஜீரணமாகிறது, ஹிருதயம் படபடவென்று சதா அடித்துக் கொண்டிருக்கிறது என்று தன்னைச்சுட்டாது வேறு கர்த்தா விருப்பதாய் எண்ணக்கூடிய காரியங்கள். மிருகங்கள் இந்த கீழ்த்தட்டு கருமங்களைத் தான் செய்கின்றன. இத்துடன் நாம் எல்லா சங்கதிகளையும் அறிந்து விட்டதாய் நினைக்கக்கூடாது. மனதுக்கு இரண்டு தட்டுகளென்றும் அவை மேல்தட்டு கீழ்த்தட்டு என்றும் சொல்லியிருக்கிறோமன்றோ. அந்த மேல் தட்டுக்கும் மேல் இன்னொரு தட்டு இருக்கிறது. அங்கே செய்யப்படுங்காரியங்களெல்லாம் நான் என்ற வியவகாரத்துடன் சம்பந்தப்படவில்லை. 'நான்' என்னும் சப்தமே அந்தத் தட்டிலில்லை. ஆதலின் நன்றாக யோசிக்குமிடத்து மனதுக்கு மூன்று தட்டுகளுண்டென்றும் அவற்றில் நடுத்தட்டில் மட்டும் நான் என்ற வியவகாரமும், மற்றத்தட்டுகளில் அது இல்லையென்றும் அறிந்து கொள்ளுகிறோம். இந்த முதல் தட்டின் மகிமை என்ன தெரியுமா? அந்தத் தட்டு தான் சமாதியிலுள்ள

பெரியோர்களின மனம் வசிக்கும் சிறந்த ஸ்தலம், ஸமாதியில் நானென்னும் வியவகாரமில்லை.

“ஆதியைத்தொழு” என்று ஔவை கூறியிருக்கிறாள். அதாவது ஸகலத்துக்குங் காரணமான பிரம்மத்தை வணங்கு என்றர்த்தம். இவ்வுலகிலுள்ள பொருள்களெல்லாங் காரண காரியங்களாக விருக்கின்றன மண் காரணம். குடம் காரியம். குடமானது மண்ணாற் செய்யப்படுகிறது. நோய்காரணம் மரணம் காரியம். நோய்க்கு அஜீர்ணம் காரணம். அஜீர்ணத்துக்குக் காரணம் உளுந்து. உளுந்து குக்காரணம் ஒன்று. அதற்குக்காரணம் மற்றொன்று. இப்படியாக விசாரித்துக் கொண்டே போனால் காரணங்க ளிருந்து கொண்டடேயிருக்கும் ஆதிலும் ஆதிகாரணம் ஒன்று இருக்க வேண்டுமென்பதை நம்முடைய புத்தியால் ஊகிக்கிறோம். இந்க ஆதிகாரணந்தான் பகவான். இது தான் ஆத்மா. இதுதான் பிரம்மம். ஆதலின் ஔவை கூறியபடி ஆதிமூலமாகிய பகவானைப் பிரார்த்திக்கக் கடவோம்.

"கடவுளை யார் சிருஷ்டித்தார்" என்று சிலர் கேட்பதுண்டு. இந்தக் கேள்வியானது கடவுளுக்கென்ன காரணம் என்பது போலிருக்கிறது. கடவுளை ஆதிகாரணமென்று சொன்ன பிறகு கடவுளுக்கு காரணம் யார் என்று கேட்பது அறியாமையாம். கடவுளுக்கு ஓர காரணமுளதாயின் கடவுள் காரியமாகவன்றோ ஆய்விடுவர். ஆதலின் கடவுளை யார் சிருஷ்டித்தார் என்று அஸந்தர்ப்பமாம்.

"தன்னிழல் தன்னோடு" என்ற ஓர் பழமொழியுண்டு. நாம் எங்கே போனாலும் நம்முடைய நிழல் கூடே வருகிறது. சிலசிறு பிள்ளைகள் தங்களுடைய நிழல் தங்களோடு வராமலிருக்கட்டுமென்று ஓடுவதுண்டு, அப்போதும் அந்த துன்மார்க்க நிழல்பின்னோடு வருகிறதேயென்று வியஸனங் கொள்ளுவார்கள். அதுபோல் நாம் செய்யும் கருமம் நம்முடன் கூடவே வரும், காசிக்குப்போனாலும் கர்மம் தொலையாது. கர்ம பலனையனுபவித்தே தீரவேண்டும், ஆதலால் கர்மத்தை பகவத் பிரீதியாகச் செய்து பலனை அபேக்ஷியாமலிருந்தால் பாதிக்கப்படவேண்டும், இவ்வித உத்திருஷ்டமானசிந்தை ஸத்ஸங்கத்தாலும் பகவத் பக்தியாலும் உண்டாக வேண்டும்.

“பிரம்மம் எது” என்று முற்காலத்தில் ஓர் மகரிஷயை நோக்கி சிஷ்யன் கேட்டான். அதற்கு அவர் எதனால் நீ ஜீவிக்கிறையோ அது பிரம்மமென்றார். உடனே அவன் அன்னத்தால் நான் ஜீவித்திருக்கிறேன், அதுதானே பிரம்மம் என்றான். குரு ஆமென்றவுடன் சிஷ்யன் அவ்வுபதேசத்தை பெற்றுக்கொண்டு அன்னம் பிரம்மம் என்று சொல்லிக்கொண்டு மரத்தடியில உட்கார்ந்தான். சில நேரத்துக்கெல்லாம்,

"கோவிந்தா, கோவிந்தாவென்று ஓர் பிணத்தைப் பாடையில் வைத்துக் தூக்கிக்கொண்டு போனார்கள்” உடனே சிஷ்யன் ஆலோசித்தான். அன்னம் இருந்தென்ன பிரயோஜனம், பிராணன் போய்விடுகிறதே. பிராணனிருந்தாலன்றோ அன்னம் புசிக்கலாம் அன்னத்தைவிட பிராணனே பெரிது. பிராணன் தான் ஸகல வஸ்துக்களுக்கும் ஆகாரமாயுள்ளது என்று குருவினிடம் ஓடி 'ஸ்வாமி' எனக்கு

நீங்கள் மோசமான உபதேசம் பண்ணினீர்களே, எது புசிக்கப்படக்கூடியதோ அது பிரம்மம் என்றீர்களே. அதாவது அன்னம் பிரம்மமென்றீர்களே. பிராணன்றோ பிரம்மம் என்றான் குரு ஸந்தோஷமடைந்து "ஆமப்பா நீதான் புத்திசாலி. பிராணன் தான் பிரமாம்" என்றார். சிஷ்யன் அது முதல்,

"பிராணனே பிரம்மம்" என்று ஜெபித்துக் கொண்டிருந்தான் இரவில் நித்திரைசெய்து காலையில் விழித்துக்கொண்டு "அடா பிராணன் இருந்து பயனென்ன? மனம் இல்லாவிட்டால் பிராணன் பயன்படாது. மனம் பிராணனை விட பெரிது'. என்று ஆசாரியனி டம் ஓடினான். சுவாமி என் பிராணனிருந்தும் இரவில் எனக்கு ஸ்மரணை தெரியவில்லை ஆதலின் மனம் பிரம்மமென்று தோன்றுகிறது என்றான். குரு ஸந்தோஷமடைந்து அப்பா, நீதான் நல்ல சிஷ்யன். மனம் தான் பிரம்மம் என்றார். உடனே சிஷ்யன் ஓடிவந்து முன்போல் மரத்தடியிலுட்கார்ந்து,

"மனம் பிரம்மம்" என்று சொன்னான். மனம் ஒரு க்ஷணநேரங்கூட ஓரிடத்தில் நில்லாமல் ஓடியது. இதைக்கட்டி ஓரிடத்தில் நிறுத்துவதற்கு புத்திதான் அவசியமென்றுணர்ந்து "குரோ, விஞ்ஞானந்தான் பிரம்ம" மென்றான், மகரிஷி வெகு குதூகலமடைந்து "சிஷ்யா, உனக்குத்தான் சிஷ்யன் என்ற பெயர் தகும். விஞ்ஞானம் (புக்தி) பிரம்மம்" என்றார். உடனே சிஷ்யன் ஓடிவந்து,

"விஞ்ஞானம் பிரம்மம்" என்று சொல்லிக்கொண்டிருக்கும் போது அவனுடைய குழந்தை பிறந்தது. வியஸன முண்டாயிற்று. உடனே புத்தி பிரம்மமன்று. சுகந்தான் பிரம்மம், என்றறிந்த ஓடிவந்து குருவையடைந்து, சுவாமீ ஆநந்தம்தான் பிரம்மன்றறிந்தேன்" என்றான, குரு வெகு ஸந்தோஷமடைந்தார். மேற்கூறிய கதையால் நமது முன்னோர்கள் சிஷ்யர்கள் தாங்களே ஆலோசித்தறி யட்டுமென்ற நன்னோக்கத்கால் பிரம்மத்தை பலவிதமாய்ச்சொல்லியிருக்கிறார்க ளென்றறியத்தக்கது.

"மனமடங்கினால் மாண்புண்டாம்" என்றபடி ஆத்மாவை தரிசிக்க விரும்புவோர் மனதையடக்கி யாள வேண்டும். மனமானது ஒரு நிமிஷநேரமும் நிலையாயிராது. பலவிடங்களிலும் அலைந்துகொண்டிருக்கும் அதை ஒரே நிலையில் நிறுத்தவேண்டி விவேகிகள் யோகாப்பியாஸஞ் செய்கின்றனர். ஏகாக்கிர சித்தமாயிருந்தாலன்றி ஆநந்தமுண்டாகாது. அப்படியானால் மனதை அடக்கும் உபாயமென்ன?

"சித்தத்தை சிக்ஷித்துக்கொண்டிருப்பது" 'நன்று. ஒருசமயம் ஞானியாகிய தாயுமான ஸ்வாமிகளுக்கு வடைதின்ன வேண்டுமென்று ஆசையுண்டாயிற்று. உடனே வயிற்கிடந்த கோமயத்தைக் கையாலெடுத்து "அடே மனமே, உனக்குவடைவேணுமா சாப்பிடு இதை. இது தான் வடை" யென்று வாயிற் போட்டுக் கொண்டார். இவ்வளவு வைராக்கியத்துடன் மனதை இழுத்திப்பிடித்தாலன்றி அது அடங்கமாட்டாது. மனதை சுவாதீனப் படுத்துவதற்கு வைராக்கியம் அவசியம். கையோடு கை சேர்த்து முறுக்கி பற்களைப் பொருத்தி நெறித்து சண்டை போடுவது போலும் சரீரத்தோடு சரீரம் பொருந்தி மல்லுக்கட்டி விழுவதுபோலும் மனதை

வைராக்கியத்தால் ஒரே கட்டாகக்கட்டும் மகா புத்திமான்களே பிரம்மத்தைக் காணக்கூடும். மனோ விருத்தியின்றி ஏகாக்கிர சித்தமாயிருப்பதற்கு யோகம் அவசியமாதலின் உண்மையான பேரின்பத்தையடைய விரும்புவோர் யோக சாஸ்திரங்களைப் படிப்பது நன்று.

பிராணாயாமம் என்பது மூச்சைப் பற்றியல்ல. மூச்சைமூக்கின் ஓர் துவாரத்தாலிழுத்து மற்றொரு துவாரத்தால் விடும் அப்பியாசமானது பிராணாயாமத்துக்கு ஓர் வழியேயாம் பிராணாயாமமென்பது பிராணனை யடக்கியாளல் என்று பொருள்படும். இந்திய தத்துவசாஸ்திரிகளின் அபிப்பிராயப்படி பிரபஞ்சமானது இரண்டு பொருள்களாக்கப் பட்டிருக்கிறது. அவ்விரண்டில் ஆகசமொன்று. அது எங்கும் நிறைந்திருக்கிறது. எவ்விடத்திலும் ஆகாசமுண்டு. ரூபமுள்ள வஸ்து ஒவ்வொன்றும் ஆகாசசதா லாக்கப்பட்டிருக்கிறதென்பது உண்மை. ஆகாசந்தான் காற்று ரூபமாயும் ஜல ரூபமாயும் பிருதிவீரூபமாயும் சூரிய சந்திர நக்ஷத்திராதிகளாகவும் மனுஷ்ய சரீரம், புற்பூண்டு முதலிய சகல வஸ்துக்களுமாக மாறுகிறது. அதைத் தனியே பார்க்கமுடியாது. அது அத்தனை சூக்ஷ்மமானது. அது ஸ்தூல ரூபத்தை யடைந்தால் நம்முடைய கண்ணுக்குத் தென்படும். உலக சிருஷ்டியின் ஆரம்பத்தில் ஆகாசமொன்றிருந்தது உலக முடிவிலும் ஜலப்பொருள் கட்டிப்பொருள், காற்றுப்பொருள் மூதலியனவெல்லாம் ஆகாசமாக ஆய்விடுகிறது.

இந்த ஆகாசமானது எந்த சக்தியாலுண்டாகிறதோ அந்த சக்திக்குத்தான் பிராணன் என்று சொல்லுகிறோம். ஆகாசயானது எவ்வாறு எல்லாப் பொருள்களிலு மிருக்கிறதோ அவ்வாறே பிராணனானது எல்லா சக்திகளிலுமிருக்கிறது: பிராணனே அசைவு, ஆக்கிராணம் முதலிய சகல சக்திகளுக்குக் காரணம். தேகத்தின் அவயங்கள் பிராணனாலேயே அசைகின்றன. கையை யாட்டுகிறோம். இது பிராணனுடைய சக்தி. மனதில் ஒன்றைப்பற்றி நினைக்கிறோம். இதுவும் பிராணனுடைய சக்தியே. இவ்விரண்டில் மனதால் நினைக்கும் சக்தி உயர்ந்ததாகவும் கையை யாட்டும் காரியம் தாழ்ந்ததா கவுமிருக்கின்றது. கையை யாட்டில் பிராணனிருக்கிறதென்று நன்றாயறிந்த கொள்ளலாம். மனதால் ஒன்றை நினைத்துக் கொண்டால் பிராணனிருப்பதாக அருகே யிருப்பவர்களுக்கு அத்தனை நன்றாகத்தெரியாது. உலகத்தில் தேகத்தாலும் மனதாலும் செய்யப்படும் சகல காரியங்களும் பிராணனுடைய காரியமேயன்றி வேறில்லை. இந்தப் பிராணன் எங்கும் நிறைந்து எப்போதுமிருந்து கொண்டிருக்கிறது. ஆனால் உலகமுடிவில் இது அசைவற் றிருக்கும். இது அசையக்தொடங்கி ஆகாசத்துடன் சேர்ந்த பிரபஞ்சத்திலுள்ள பொருள்களெல்லாந் தோன்றுகின்றன. இவ்வித பிராணனை யடக்கியாளும் திறமையே பிராணாயாம மெனப்படுகிறது.

இந்தப் பிராணாயாமத்தால் நமக்கு ஸர்வசக்திகளுமிருக்கும் அறையின் கதவு திறக்கப்படுகிறது. ஒருவன் பிராணனை யடக்கி யாளுந் திறமையைக் கொண்டால் அவனுக்கு உலகத்திலுள்ள சக்திகளெல்லாம் ஸர்வசுவாதீனமாக ஆய்விடும். அவன் சூரிய சந்திர நக்ஷத்திராதிகளை யெல்லாம் ஸ்தான பிரஷ்டமாக்கலாம். யோகியானவன் பிராணாயாமம் செய்து தேர்ந்தால் அவனுக்கு சகலமும்

சுவாதீனப்படும். அப்படிபட்ட யோகி 'தேவதைகளை வா' வென்று கூப்பிட்டால் அவர்கள் உடனே வருவார்கள். இறந்து போனவர்களை வாவென்றால் வருவார்கள். ஜெகத்திலுள்ள சச்திகளெல்லாம் அடிமைகள் போல் அவனுக்கு நடக்கும். யோகியின் செயல்களைக் காணும் மூடர்கள் அவை இந்திரஜாலமென்பர். இந்தியதத்துவ சாஸ்திரிகளின் இலக்ஷியம் யாதெனில் எதையறிந்தால் எல்லாவற்றையும் அறிய முடியுமோ அதைக் கண்டு பிடிக்கவேண்டு மென்பது. ஒவ்வொன்றாய் ஆராய்ந்து பார்த்து உலகின் தன்மையைத் தெரிந்துகொள்வதனால் யாரால் முடியும். எந்தக்காலத்தில் அது சாத்தியமாகும். ஆதலின் யோகிகள் எல்லாவற்றிற்குங் காரணமாயிருக்கும் பொருளையே கண்டுபிடிப்பதில் நோக்கங் கொள்ளுகின்றனர். காரணத்தைக் கண்டுபிடித்தால் அதனாலுண்டாகும் சசல காரியங்களும் தெரிந்துவிடும். எவன் பிராணனை யடக்கியாளுகிறானோ அவனுக்கு மனம் சுவாதீனப்படும். எல்லோருடைய மனமும் சரீரமும் அவனிஷ்டப்படி செய்யும்.

பிராணனை யெப்படி யாளுகிறதென்பது ஓர்கேள்வி. ஒவ்வொரு மனிதலுந் தானிருக்கு மிடத்தினின்றே காரியத்தை தொடங்க வேண்டும். உலகத்திலுள்ள பொருள்களெல்லாவற்றிலும் நமது சரீரமும் மனதும் அதிஸமீபமாயுள்ளவை இந்த சரீரத்தையும் மனதையும் நடத்தும் நமது பிராணன் அதிஸமீபமாயிருப்பதால் முதலில் அதை யடக்கியாள வேண்டும். பிராணன் என்ற மகாஸமுத்திரத்தில் நமது பிராணனானது அருகேயுள்ள அருகேயுள்ள அலை யாதலின் அதை யாளக் கற்றுக்கொண்டால் எல்லா பிராணன்களும் ஸ்வாதீனமாய்விடும். பிராணனுடைய மகா நுட்பமான சிறந்த சக்தி எண்ணங்களில் தெரிகிறது. அதாவது நினைக்கும் தொழிலே பிராணனுடைய சிறத்த தொழிலாம். மனதின் மூன்று தட்டுகளைப்பற்றி இன்னோரிடத்திற் கூறியிருக்கிறோம். சாஸ்திரபரிசீலனை செய்தோர் இதோ விருக்கும் மேஜைக்கும் உனக்கும் வித்தியா ஸமில்லையென்பார்கள். பொருள்களுக் கெல்லாம் ரூபபேதமே யன்றி விஷய பேதமில்லை. நீரில் அநேக குமிழிகள் தோன்றி வெவ்வேறாகக் காணப்படுவது போல் உலகமும் பற்பல பொருள்களாய்க் காணப்படுகின்றது, ஒரு சரீரமாவது நித்யமல்ல. வியவகாரத்தில் உன் சரீரம் என் சரீரமென்ற வித்யாஸமிருக்கிறதே யன்றி உண்மையில் யாதொரு வித்யாஸமு மில்லை. சிலயோகிகள் அநேக மாஸங்கள் பூமிக்குள்ளேயே யிருப்பார்கள். இது பிராணயாமத்தாலுண்டாகுஞ் சக்தி. தேகத்கிலுள்ள ஸ்வாஸப் பையிலிருந்து காற்றை வெளியே தள்ளுகிறோம். மூக்கின் வழியாய் இழுக்கும் காற்று ஸ்வாஸப் பைகளுக்குள் போகிறது. பிராணனைப்பற்றி வெளிப்படையாய்த் தெரிவது மேற்கூறிய ஸ்வாஸப் பைகளின் அசைவுகளே. ஆதலின் அந்த ஸ்வாஸப்பைகளை நம்மிஷ்டப்படி அசையும்படியும் அசையாம்லிருக்கும் படியும் ஸ்வாதீனப்படுத்திக் கொள்வது பிராணாயாமத்தின் காரியமாகும் பிராணன் ஸ்வாஸப்பைகளை அசைக்கிறது. ஸ்வாஸப்பைகள் மூச்சுக் காற்றை வெளியே தள்ளுகிறது. ஆதலின் பிராணாயாமமென்பது மூச்சுவிடுவதல்ல. மூச்சு விடுவதற் காதாரமான ஸ்வாஸப்பைகளை யசையச்செய்யும் சக்தியை யாளுவதாகும். நாடிகளின் வழியாய் எந்த சக்தியானது சுவாசப்பைளுக்குச் சென்று காற்றை வெளியே தள்ளுகிறதோ அந்த சக்தியே பிராணன். இந்த சக்தியை நாம் நம்முடைய இஷ்டப்படி செலுத்த முயன்றால் தேகத்திலுள்ள மற்ற சக்திகளெல்லாம் நம்முடைய சுவாதீனத்தில் வந்துவிடும். சில மனிதர்கள் காதையாட்டக்கூடும். சிலர்

சாதகத்தால் மார்பின் தசையைக் குலுக்கக்கூடும். சில நாடிகளை சுவாதீனப்படுக்கக் கூடுமானால் எல்லா நாடிகளையும் ஏன் சுவாதீனப்படுத்தமுடியாது? அப்பியாசத்கால் சகல நாடிகளையும் சுவாதீனம் செய்து கொள்ளலாம். அந்த சக்தி நமக்கு இப்போதில்லாததற்குக் காரணம் அதை நாம் வெகுநாளாய் பிரயோகப்படுத்தாததே. அப்பியாசஞ்செய்யாத தோஷத்தால் பல நாடிகள் நம்மிஷ்டப்படி நடக்காம லிருக்கின்றன.

"நாராயணன் கதையைப் பாராயணஞ்செய்" என்று ஒரு பெரியவர் அடிக்கடி கூறுவதுண்டு. நாராயணஸ்மரணை செய்கிறவர்கள் ஸமஸ்த துக்கங்களினின்றும் விடுபடுகிறார்கள். எல்லா துக்கங்களிலும் பெரிது ஸம்ஸாரமாகிய மகாதுக்கம். இந்த துக்கம் நீங்கினவர்கள் முத்தர்களெனப்படுவர். ஆதலின் முக்தியைத்கருவதற்கு அனுகூலமாயுள்ள நாராயண ஸ்மரணையை ஸன்யாஸிகள் எப்போதுஞ் செய்து கொண்டிருக்கிறார்கள். பெரியோர்கள் அனுஸரிக்கும் வழியை நாமும் அனுஸரிக்க வேண்டியதாதலின் ஸதா நாராயண வென்று ஸ்மரித்திக்கொண்டிருப்போம்.

"தேகம் பெரிது ஜீவன் சிறிது" ஜீவன் அணுவிலு அணு. அது பிரிந்து போனால் தேகம் கட்டைபோலாகிறது, அதுபோல் பெரிய சரீரமும், பரந்த கண்களும், நிறைந்த செல்வமும், மிகுந்த பலமும் உள்ளவனாயினுஞ் சிறந்த ஞானமென்பது சிறிதேனுமில்லையானால் அவன் ஜென்மம் வியர்த்தமாகிறது. எல்லா ஆபரணளிருந்தும், தாலி யில்லா விட்டால் எப்படி அமங்கலியாகி யாதொரு சுகத்தையும் அடைய முடியாமல் எடுத்த ஜென்மம் வியர்த்தமாகிறதோ அப்படியே சகல சம்பத்துகளிருந்தும் ஞானசம்பத்தொன்றில்லையானால் மோக்ஷம் கிடைக்காது. பிறவிப்பிணி நீங்காது. எப்போதும் கஷ்டம் இருந்து கொண்டேயிருக்கும். ஆதலின் எல்லோரும் ஞான நூல்களைக் கற்பது அவசியமாகிறது.

"சித்தசுத்தி முக்கியம்" ஓர் மலையின் மேலேறவேண்டுமானால் படிகளிருக்க வேண்டும். குளத்திலிறங்கவேண்டுமானால் படிகளிருக்க வேண்டும். மேல் மாடிக்குச் செல்ல படிகள் வைத்திருக்கிறார்கள். ஓரிடத்திலிருந்து மற்றொருவிடத்துக்குப் போக வண்டிகளிருக்கின்றன. அது போல் ஞானத்கையடைய கர்மம், பக்தி, யோகம் முதலிய சிறந்த படிகளிருக்கின்றன. வேதத்திற்கூறிய கர்மங்களைச் செய்து பகவானை உபாஸித்து சித்தசுத்தி யடைந்தவர்களே மோக்ஷமடைய யோக்கியர்கள். அநந்தமான நூல்களைப் படித்தாலும் வர்ணாசிரம தர்மங்களை வரவுசெலவில் வைக்காமல் கர்மப் பிரஷ்டனாயிருப்பவன் கடைத்கேறமாட்டான். மனதைக் கண்ட படி அலையவிட்டு சிவா, ராமா, கிருஷ்ணா வென்று ஆயுள் கால முழுவதும் கதறினாலும் மோக்ஷம் கிடைக்காது. சித்தத்தை யொரே நிலையில் நிறுத்தி யோகம் செய்தும் தன்னையறிந்து தானே எங்கும் நிறைந்திருப்பவனென்று அறியும் ஞானத்தையடையாதவன் முக்தனாகான். ஆதலின் கர்மம், பக்தி, யோகம், ஞான முதலிய நான்கும் மனிதர்க்கு அவசியமானவை.

"தியானம்" என்பதென்ன? நமது மனதை நமது சரீரத்துக்குள்ளே அல்லது வெளியே ஏகேனுமோரிடத்தில் நிறுத்தி அதை விட்டு அங்குமிங்கும் அசையாமற்

செய்தால் அந்த விடத்திலிருந்தே அது சகல உணர்ச்சிகளையும் இழுக்கும். இம்மாதிரி நிலைமையில் அந்த மனம் சிலநேரம் நிற்பதற்குத்தான். தியானம் என்று சொல்லப்படுகிறது. நான் சுவாமியை தியானம் செய்கிறேனென்று கண்ணை மூடிக் கொண்டு மனதை யலையவிடுகிறவர்கள் யாதொரு பலனையும் அடையார்கள்.

"ஸமாதி" யென்பதுயாது? மேற்கூறியபடி தியானம் செய்து கொண்டிருக்கையில் சகலவிதமான ரூபங்களையும் மறந்திருப்பது ஸமாதி. உதாரணமாக ஓர் புஸ்தகத்தையே தியானம் செய்து கொண்டிருப்பதாய் வைத்துக் கொள்வோம். அப்படி செய்யும் போது எவ்விதமான ரூபத்தையும் தொடாமல் உள்ளுணர்ச்சிகளை அதாவது ரூபத்தால் தெரிவிக்கப்படாத அர்த்தத்தை மட்டு மறிவது ஸமாதியெனப்படுகிறது. அதாவது எதிரே காணப்படும் பொருளின் ரூபம் மறைந்து உள்ளேயிருக்கும் அர்த்தம் மட்டும் தெரிவது ஸமாதியின் தன்மை. மேற்கூறிய ஸமாதியிலிருக்கக்கூடிய பாக்கியம் பெற்றவர்கள் உலகத்திலுள்ள ஸர்வ சக்திகளையும் அடைகின்றனர். இது தான் யோகியிடமகப்பட்ட பெரிய கருவி.

ஓர் ஏரியின் தண்ணீர் கலங்கினாலும் அல்லது காற்றடித்து அலைக ளுண்டானாலும் நாம் ஜலத்தின் கீழுள்ள தரையைக்காண முடியாது. அதுபோல் சித்தம் சலித்துக்கொண்டிருந்தால் ஆத்மாவை தரிசிக்க முடியாதென்று பெரியோர் கூறுகின்றனர். ஏரியே நம்முடைய சித்தம். ஏரியின் அடிப்புறம் நம்முடைய ஆத்மா. சித்தமாகிற ஏரி தெளிந்து காற்றடித்துக் கலையாமலிருந்தால் ஆத்மாவாகிய அடிப்புறம் தெரியும். சித்தமே ஏரியென்றதால் அதிலுள்ள அலைகளே விருத்தியாகும்.

குதிரைகளை இழுத்துப்பிடித்து வண்டியை சரியான பாதையில் ஓட்டுகிறவன் சாமர்த்திய சாலியே யன்றி அதை இஷ்டப்படி அங்குமிங்கும் ஓடச்செய்பவன் சமர்த்தனல்ல. அதுபோல சித்தத்தைப் பல துர்விஷயங்களிலும் செல்லும்படி விடுகிறவன் மூடனாகவும் அதை சன்மார்க்கத்தில் செல்ல விடுகிறவன் விவேகி யாகவும் எண்ணப்படுகிறான்.

"நல்ல பழக்கம் நாளாகும், கெட்ட பழக்கம் கிடுகிடென்று வரும்" என்றபடி சித்தமானது ஐம்புலன்கள் வழியாக எப்போதும் வெளியேயுள்ள பொருள்களிலேயே செல்லுகிறதும் சிற்றின்பங்களில் நாடுகிறதுமாயிருக்கிறது. நல்விஷயங்களில் நாடுகிறதென்றால் கொஞ்சத்திலாகிறதில்லை. வெகுநாள் செல்லும்.

ஓர் மனிதனைச்சுற்றி பாவம் என்பது கூண்டு போல் வளைந்திருக்கிறது அதை யோகம் என்ற அக்கினியால் அழித்து விடலாம். ஞானம் ஸித்திப்பது யோகத்தாலென்றறியவேண்டும. ஞானமே யோகிகட்கு உதவி செய்கிறது. எவன் யோகியாயும் ஞானியாயுமிருக்கிறானோ அவனிடம் பகவான் பிரீதிகொள்ளுகிறர். ஒவ்வொரு நாளும் ஒன்று, இரண்டு, மூன்று தடவை மகாயோகம் செய்கிறவர்கள் தங்களை தேவஸ்வரூபமென்றறியக்கூடும்.

யோகமானது இரண்டு வகைப்படும். ஒன்று சுபாவம், இன்னொன்று மகாயோகம். தன் ஆத்மாவிலேயே மனதைச் செலுத்தி அது குணாதீதெமென்று

நினைப்பது அபாவம். யோகியானவன் ஒவ்வொன்றாலும் தன்னை யின்னானென் றறிந்து கொள்ளுகிறான். தன் ஆத்மா சுத்தமானது, ஸந்தோஷம் நிறைந்தது. ஈசுவரனும் அதுவும் ஒன்று என்று நினைப்பது மகாயோகம். மற்றயோகங்க ளெல்லாம் சிலாக்கியால்ல உலகெங்கும் பிரம்மமே நிறைந்திருக்கிறதென்னும் பிரம்மயோகமே மகா சிலாக்கியம்.

நமது சரீரத்தின் ஒவ்வொரு பாகத்திலும் பிராண சக்தியை நிரப்புவதால் சரீர முழுவதும் நமது ஸ்வாதீனத்தில் வந்து விடுகிறது. நமக்குண்டாகும் வியாதிகள் யோகாப்பியாஸத்தால் நிவர்த்தியாகும். யோகத்தினாலே பிறர் நோயைத் தீர்க்கவுங் கூடும். உலகத்திலுள்ள நன்மை தீமைகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு மாறக் கூடும். நம்முடைய தேகத்தில் ஒருவிதமான மெலிவுண்டனால் நம்மருகிலுள்ளவர் தேகத்திலும் அதே விதமான பொலிவு நேரிடும். நீ பலசாலியாயிருந்தால் உனக்கு சமீபமாயுள்ள மற்றவர்களும் பலசாலிகளா யிருப்பார்கள். ஒருவர் தேகத்திலுள்ள நோயும் பலஹீனமும் பிராண அசைவுகளால் மற்றொருவர் தேகத்துக்குத் தாண்டும். சரீர ஆரோக்கியமானது ஒருவரிடமிருந்து மற்றொருவரிடத்துக்கு போகக்கூடும். சில வேளைகளில் யோகிகள் தங்களுடைய சக்தியால் வெகு தூரத்திலிருக்கும் ஒருவனது நோயைத் தீர்க்கின்றனர். இதற்குக் காரணம் இவர்கள் பிராணவாயுவை எவ்வளவு தூரமான விடத்திற்கும் அனுப்பக் கூடிய சக்தியைப் பெற்றிருப்பது தான்.

நான் உன்னிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்? என் மனதை ஒரு விதமாக அசைத்து அதனால் உன் மனதைப் பாதிக்கும்படி செய்து கொண்டிருக்கிறன், என்றைய தினம் எனக்கு உற்சாகம் உண்டாகிறதோ அன்றைய தினம் என் பிரஸங்கத்தை நீங்கள் வெகு ஆசையுடன் கேட்கிறீர்கள். எனக்கு உற்சாகம் குறைந்தால் பிரஸங்கத்தின் சிறப்பும் குறைந்து விடுகிறது. யோகபலம் அதிகமாயுள்ளவர்கள் உலகத்திலுள்ளோர் தங்களிஷ்டம் போல் நடக்கும்படி செய்வார்கள். முன்னாளில் இருந்த தீர்க்கதரிசிகள் வெகு ஜனங்களை வசப்படுத்தியது இந்த பிராண சக்தியிலேதான். சாமான்ய மனிதர்களுக்கு இந்த ரகஸ்யம் தெரியாது. சில வேளைகளில் நமது தேகத்தின் அங்கங்களொன்றில் பிராணசக்தி குறைந்து போவதால் அல்லது அளவுக்குமிஞ்சி அதிகப்படுவதால் வியாதியுண்டாகிறது. அக்காலத்தில் மனதுக்குள்ள நுட்ப அறிவினால் பெருவிரலோ அல்லது வேறிடத்திலோ பிராணன் குறைவாயிருக்கிறது என்று யோகிகள் அறிந்து பிராணாயாமத்தால் அதில் வேண்டிய அளவு பிராணனை நிரப்பி சௌக்கியப் படுத்துவார்கள்.

சீக்கிரத்தில் முக்தியடைய வேண்டுமென்பது யோகிகளின் கருத்து. மனதை ஓரேவிடத்தில் நிறுத்துவதற்கு ராஜயோகம் ஸாதகமாயிருக்கிறது. உலகத்தில் அனேக மகாத்மாக்களிருக்கின்றனர். அவர்களை நாம் பார்க்க முடியாததற்குக் காரணம் நமது பிராணன் கீழ்த்தரமான நிலைமையிலிருப்பது தான். பிரதி தினமும் நமக்கு சமீபமாக ஆகாசத்தில் சஞ்சரிக்கும் மஹாத்மாக்கள் அநேகருளர். இவர்களுடைய சூக்ஷ்ம சரீரங்களை காணும் யோக்யதை நமது கண்ணுக்கு இல்லை யென்பதை அடியில் வரும் உதாரணத்தால் விளக்குகிறோம். இருட்டு காலத்தில்

பூனைகளும் ஆந்தைகளும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு தாராளமாய்ப் போகக்கூடும். அவைகளின் கண்கள் இருட்டிலுள்ள பொருள்களைப் பார்க்கும் சக்தியைப் பெற்றிருக்கின்றன. இதனால் ஒரே நிலைமையிலுள்ள பிராணனைக் கொண்டவர்கள் மாத்திரம் ஒருவரையொருவர் பார்க்ககூடுமென்றும், ஏற்றக் குறைவான பிராண நிலைமையுடையவர்கள் ஒருவரையொருவர் பார்க்க முடியாதென்று மறிகிறோம், உலகத்திலுள்ள சகல சக்திகளும் பிராணனாலேயே உண்டாகின்றன வாதலின் பிராணாயாமம் விசேஷமாயிற்று.

முதுகெலும்புக்குள் இரண்டு விதமான நாடியோட்டங்களிருக்கின்றன. முதுகெலும்பின் உட்புறத்தில் கொடிபோலோடும் கயிற்று நரம்புக்குள் கால்வாய் போன்றிருக்கும் குழாய்க்கு ஸுஷும் நாடிவென்று பெயர்.

"சிவபூஜையே சிறந்த பூஜை" சிவபூஜை செய்து சிவானுக்கிரகம் பெற்றவர் ஸர்வ ஸுகங்களையும் அடைகின்றனர், உலசத்தில் ஸந்தானம், ஸம்பத்து ஆகிய இரண்டு முள்ளவர்களைக் கண்டால் பெரியோர்கள் அவர்கள் ஜென்மாந்திரத்தில் சிவபூஜைசெய்கவர்களென்று கூறுகின்றனர். சிவபூஜையின் பலன எதேஷ்டமானஸம்பத்தை யடைவதும் ஸுபுத்திரர்களைப் பெறுவதுமென்று இதனால் வெளியாகிறது. இனிய குரலுடன் பாடுகிறவர்களைக்கண்டால் இவர்கள் போன ஜென்மத்தில் சிவலிங்கத்தினமேல் எதேஷ்டமான தேனையபிஷேகம் செய்தவர்களென்கிறோம். இதனால் நல்லசாரீரமானது சிவபூஜையால் அடையக்கூடியதென்பது பெறப்பட்டது. ஈசுவரானுக்கிர முள்ளவர்களுக்கே ஐசுவரியமுண்டாகிறகால் அகற்கும் சிவபூஜை யவசியம் மகா சூரர்களான கௌரவர்களையும் பீஷ்ம துரோணர்களையும் ஜெயிப்பதற்காக அர்ஜுனன் சிவபூஜை செய்து பாசுபதாஸ்திரம் பெற்றான். இதன்றி மோக்ஷமடைய வேண்டி யோகிக ளெல்லாம் ஸதா பரமேசுவரனையே தியானித்துக் கொண்டிருக்கின்றனர். ஆதலின் ஸகல சுகங்களையும் இகத்தில் அனுபவித்து முடிவில் முக்தியை எய்துவகற்கு ஸாதகமாயுள்ள சிவஸ்மரணையை ஸதா செய்து கொண்டிருப்போம்.

"சிவநாராயணன்" என்ற பதத்தில் ஓர் ரஸமிருக்கிறது. முன்னோர்களாகிய விவேகிகள் பிற்காலத்தில் தமது ஸந்ததியார் ஒருவரோடொருவர் போர் புரியாமலிருக்கட்டுமென்று ஹரியும் ஹரனும் ஒன்றென்பதைக் குறிக்க மேற்கூறிய சிவநாராயண என்ற பெயரை வழங்கினர். பேத புத்தியைக் கொள்ளாதபடி ஹரிஹரன், சிவராமன், சிவராம கிருஷ்ணன் என்ற பெயர்சளை வழங்கின நமது முன்னோர்களின் கருத்தை நாம் நன்றாய்த் தெரிந்து கொண்டால் ஒருவரோ டொருவர் சண்டை போட மாட்டோம்.

"வேதாத்யயனம்" செய்தால் தேகத்திலுள்ள ஸத்வபாகமானது சுத்தப்படுகிறது. இவ்வாறு செய்வதில் மூன்று விதங்களுண் . பிறர் கேட்கும்படி உரக்கச்சொல்வது. பிறர் செவியிற்படாதபடி முணுமுணுவென்று சொல்வது மனதால் ஸ்மரிப்பது. இம்மூன்றில் மனதால் ஸ்மரிப்பதற்குப் பலன் அதிகம். சுத்தம் தேகசுத்தம், மனோசுத்தம் என இரண்டு வகைப்படும், ஸ்நாநம் செய்வதால் தேக சுத்தமும், உண்மை பேசுவது முதலிய புண்ய காரியங்களால் மனோசுத்தமும்

உண்டாகின்றன. இரண்டுவித சுத்தங்களும் மனிதர்க்கு இன்றியமையாதன. மனோசுத்தமட்டு மிருந்தாற்போதும் தேகசுத்தம் அவசியமில்லையென்று சொல்வது பிசகு. இரண்டு சுத்தங்களுமில்லாதவன் யோகியாகான்.

"அபரிக்கிரகம்" சிறந்தகுணம் இது தான் தற்காலத்து வைதீகர்களிடம் இல்லை. இப்போதுள்ள வைதீகர்கள் தானம் வாங்குவதில் வெகு துரிதப்படுகின்றனர். திலதானம் வாங்கமாட்டேனென்னும் வைதீகனுக்கு ஒரு ரூபாய் திலத்துடன் சேர்த்துக் கொடுத்தால் உடனே வாங்கிக் கொள்ளுகிறான் தானம் வாங்காமையே அபரிக்கிரகம் எனப்படும் ஒருமனிதன் வேறொரு மனிதனிடமிருந்து ஓர் பொருளை தானம் வாங்கினால் உடனே அவன் ஹிருதயம் அசுத்தமாகிறது. அவனுக்குள்ளம் மதிப்பு போய்விடுகிறது. ஸ்வாதீனத்தையிழந்து எண்சானுடம்பும் ஒரு சாணாய்க் குன்றும் தன்மையை யடைகிறான். நல்லவர்களைக் கண்டால் ஸங்கோசமும் தனவான்களைக் கண்டால் பல்லிளிப்புங் கொண்டு தாக்ஷண்யத்துக்குக் கட்டுப்பட்டு அடிமை போலாகிறான். இவ்வாறு பலவிதத்திலும் குன்றிப்போன மனமுடையவன் யோகியாக முடியாது. ஆதலின் யோகிகட்கிருக்க வேண்டிய சிறந்த குணங்களில் அபரிக்கிரகம் ஒன்று.

"ஸந்தோஷம்" என்றால் திருப்தியைக் ன்றால் திருப்தியைக் குறிக்கிறது என்ன கிடைத்தாலும் திருப்தியில்லாதவனுக்கு ஸந்தோஷமுண்டாகாது. ஸதா வியஸானமே அவன் மனதிற் குடிகொண்டிருக்கும். அதிருப்தியால் மனம் நலிந்து போவதால் அது யோகத்துக்கு விரோதமான துர்க்குணம்.

“அஹிம்ஸை" இதை விட உத்தமமான குணம் வேறொன்றில்லை. யாருக்கும் தீங்கு செய்யாமலிருப்பது, மனதுக்கு ஸமாதான நிலைமையை யுண்டாக்கும். அந்நிலைமையால் அநேக ஸாதகங்களுண்டாகும். பகவானை தியானஞ் செய்யும் போது மனக்கவலையின்றி யிருத்தல் அவசியமாகையாலும் பகவானது கருணையையடைவதற்காக நாம் பிறரிடம் கருணை பாராட்டுவது முக்கியமாகையாலும் கருணையென்பது அஹிம்ஸையால் விளங்குமாகையாலும் அஹிம்ஸையைச் சிறந்த குணமென்றோம்.

"தியானம் செய்வதற்குத் தகுந்த இடம் தேடவேண்டும். துஷ்டர்களிருக்கு மிடத்திலும்; எறும்புகள், பாச்சை, பல்லி, பாம்பு முதலியன ஸஞ்சரிக்கு மிடங்களிலும்; இலைகளுதிர்ந்து ஜலத்தால் நனைந்து அல்லது நெருப்பு பற்றியிருக்கு மிடங்களிலுமிருந்தும் தியானஞ் செய்யலாகாது. தேகம் இளைத்திருக்கும் போதும் மனது வியஸனத்தையாவது கவலையையாவது அடைந்திருக்கும் போதும் தேக அஸௌக்கியம் உண்டான போதும் தியானஞ் செய்யலாகாது அழுக்கடைந்த விடங்களிலும் நாலுபேர் நடக்கும் பாதைகளிலும் கூட்டங் கூடுமிடங்களிலும் தவம் செய்வது அயுக்தம். எப்போதும் ஏகாந்தமான விடத்தில் யாதொரு கவலையும் இடையூறு மின்றி சுத்தமாக விருந்து தர்ப்பாஸனத்தில் அல்லது மான்றோல், புலித்தோல் முதலியவைகளில் உட்கார்ந்து பகவானை தியானிக்கவேண்டுமென்று பெரியோர் கூறுகின்றனர்.

"நீத்தார் பெருமை" இன்னதென்று நாலடியார் முதலிய நாலடியார் முதலிய நூல்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. "காஷாயகண்ட மாத்ரேணயதி: பூஜ்யோநஸம்சய" என்ற ஓர் வாக்கியமிருக்கிறது. எவன் காஷாய வஸ்திரத்தை தரித்து கையில் தண்டத்துடன் வருகிறானோ அவனை ஸந்யாஸி யென்றுணர்ந்து பூஜிக்கவேண்டும். இதில் கொஞ்சமேனு ம் ஸம்சயம் கொள்ளலாகாது என்று பெரியோர் கூறியிருன்றனர். ஆதலின் ஸன்யாஸ ஆசிரமமானது பரமசிலாக்கியமே. இதைப்பற்றிய ஓர் சிறுகதையை அடியில் வரைகிறோம். காராள புரியென்ற ஊரில் கங்கப்பட்டர் என்ற ஓர் பிராமணரி ருந்தார். இவர் எப்போதுஞ் சிவனடியார்களைப் பூஜித்துக் கொண்டிருப்பார். ஒரு சமயம் இவருடைய வீட்டுப் புறக்கடையிலுள்ள சிலாக்கியமான மாமரத்தில் ஓர் திருடன் ஏறிப்பழம் பறித்துக் கொண்டிருந்தான். அப்போது விடிய ஐந்து நாழிகையிருக்கும். அந்த மாமாத்தில் முயிற்றெறும்புகள் விசேஷமாயிருந்ததால் அவற்றின் உபத்திரவ நிவர்த்திக்காகத் திருடன் தன் தேகமெல்லாம் சாம்பலைப் பூசிக்கொண்டேறினான். கங்கப்பட்டர் புறக்கடையில் ஒரு காரியமாக வந்ததைக் கள்ளன் கண்டு பயந்து மரத்திலிருந்து குதித்தான். அவன் சாம்பலைப் பூசிக்கொண்டெதிர் நின்றதை யறிந்து பெரியசிவயோகியென்று நினைத்து ஸாஷ்டாங்கமாக அவன் காலில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று "ஸ்வாமி தங்களுடைய தரிசனத்தால் என் ஜென்மமீடேறிற்" றென்றார். திருடனுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. அடடா நமக்கு நல்ல அடி கிடைக்கு மென்றெண்ணிப் பயந்திருந்தோம். ஸர்வோபசாரங்களும் நடக்கின்றன. இதற்குக்காரணம் நாம் சாம்பலைப் பூசிக்கொண்டதன்றா? சாம்பலுக்கு இத்தனை மகிமையிருக்கும் போது விபூதியைத் தரித்த உண்மையான யோகிகளின் மகிமையை அளவிட்டுச் சொல்ல யாரால் முடியும்? சீ, இனி திருட்டுத்தொழிலை விட்டுவிடவேணுமென்று தனக்குள் நிச்சயித்து அன்று முதல் எல்லாவற்றையுந் துறந்து யோகியானான்.

ஓர் ஸன்யாஸி தம்முடைய கௌபீனத்தை மடத்திலுள்ள எலி கடித்து விடுகிற தென்றும் அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டு மென்றும் ஆலோசித்தார். பூனை வளர்க்கலாமென்று தோன்றியது உடனே ஓர் பூனைக் குட்டியை ஸம்பாதித்து மடத்தில் வைத்துக் கொண்டார். அதற்கு பால் அவசியமாயிருந்ததால் ஓர் பசு வாங்கினார். அப்பசுவை மேய்த்துக்கட்ட ஓர் மாட்டுக்காரனை நேமித்தார். அவனுக்கு ஓர் பெண்ணைக் கலியாணஞ் செய்விக்க நேர்ந்தது. அதன் பிரயோஜனமாக ஓர் குழந்தை பிறந்து அது ஸன்னியாஸிகள் ஜெபம் செய்து கொண்டிருக்கையில் அவர் மடியில் “தாதா" வென்று சொல்லிக்கொண்டே ஏறி சிறுநீர் விட்டது. தக்ஷணமே ஜெபத்துக்கு பங்கமுண்டாகி அடடா இதென்ன கஷ்டம், இந்தக் குழந்தையேதென்று யோசித்தார். உடனே கௌபீன ஸம்ரக்ஷணார்த்தம் இந்த கஷ்டமெல்லாம் உண்டாகி குடும்ப விசாரம் சேர்ந்தது. மறுபடியும் கிரகஸ்தாசிரமம் வந்ததென்றறிந்து கௌபீனத்தை யிழந்து அவதூத சன்யாசியாக ஆனார். இதனால் அற்பபொருளிலும் அபிமானம் வைக்கலாகாதென்றும் அபிமானம் வைத்தால் குடும்ப பாசத்திற் கட்டுப்பட வேண்டுமென்றும் அறிந்து கொள்ளுகிறோம்.

எரிகரும்பில்லாத நெருப்பு எப்படி ஸ்வகாரணமான காற்றில் லயமாகின்றதோ அப்படி விருத்திகள் நசித்து நிற்கும் மனது ஸ்வகாரணமான பரமாத்மாவி லொடுங்குகின்றது. சித்தமென்னும் விருக்ஷம் விருத்திகளென்னப்பட்ட கொடிகளால்

சூழப்பட்டதா யிருக்கின்றது. இது இரண்டு பீஜங்களையுடையது. ஒன்று பிராண வாயுவின் அசைவு. இரண்டாவது அதக்கக்கூடாதவாசனை. வாசனையினால் பிராணபந்தமும், பிராணபந்தத்தினால் வாசனைகளும் பிரவர்த்திக்கின்றன. இது சித்த பீஜத்திற்கு பீஜாங்குர நியாயமாகும். என்றாலொன்றினா லொன்று பிறந்த கொண்டிருப்பாதாயாகும். மேல்சொல்லிய இரண்டு பீஜங்களான பிராணபந்தம் வாசனை இவைகளிலொன்று நசித்தால் மற்றொன்று உடனே நசிக்கின்றது.

கர்மானுஷ்டானங்களில் நான் பானங்களில் நான் செய்தே னென்னு மபிமானமும் பலாபேக்ஷை யற்றிருப்பதும் சம்சாரபலங்களை யோசிக்காம லிருப்பதும், சரீர நிலையாமையை அடிக்கடி விசாரித்துக் கொண்டிருப்பதினாலும், வாசனாக்ஷயமாகின்றது. சப்தமுதலிய விஷயங்களை நிஜமென்றும் சுகமென்றும் நினைப்பதே சிக்தமென்னப்படும். விடுவதற்குரிய துக்கங்களையும் மற்றுதற்கரிய சுகங்கனையும் இணைப்பதை முழுதும் விட்டிருக்கும் பொழது மனது பிறப்பதில்லை வாசனா சூனியத்தினால் மனது விஷயங்களை சிந்திக்காமலிருக்குமோ அப்பொழுது மேலான சாரதியையுண்டாக்கும் அமஸ்கமென்னும் கொள்கையுண்டானதென்று அறியவும், சித்தக்ஷயமில்லாதவனை பந்துமித்திர குரு முதலானவர்கள் பரமசாந்தமான மோக்ஷத்தைத்தர சக்தியுள்ளவர்களாவார்கள்.

முடிவில் சித்தநாசத்திற்கு சாதனங்கள் வேதாந்த விசாரணை சத்சங்கம் வாசனாக்ஷயம் பிராணவாயு நீரோதம் ஆனபடியால் ஹடயோக மாத்திரத் தினாலேயே மோக்ஷசாதனமென்று சொல்வதற்கில்லை, மனது மிகவும் சலனக்தை யுடையது. அதை அடக்க மிகவும் அசாத்தியம். இதற்கு சந்தேகமில்லை. ஆனபோதிலும் அபியாசத்தினாலேயும், வைராக்கியத்தினாலேயும், மனோநிக்கிரகம் செய்யப்படும், என்றால் ஹடயோகத்தினால் நிக்கிரகஞ்செய்யக்கூடாதாகிலும். மிருதுயோகத்தால் மனதை வசப்படுத்தக்கூடும். மேலும், சித்தத்தை பரமாத்மாவிடத்தில் அசையாமல் நிறுத்தி விஷயாந்தரங்களை எவ்வளவாகிலும் நினைக்கக் கூடாது. இப்படி நிக்கிரகிக்கப்பட சித்தமானது எப்பொழுது ஸுஷுப்தியில் லயமாக மாட்டாததோ, விஷயங்களில் விக்ஷேபமடையாதோ, கல்பித பதார்த்தங்களினால் பிரகாசிக்கப்படாதோ அப்பொழுது பிரமஸ்வரூபமாய் சித்தம் விளங்கிற்றென்றறியவும்.

மேலும் பிரதிவாதிகளை வெல்ல இச்சைகொண்டவன் காவியாலங்கார தர்க்க வியாகர்ணங்களை யெப்பவு மப்பியசிப்பது போல் முமுக்ஷுவானவன் தானான ஆத்மாவை எப்பொழுதும் விசாரிக்துக்கொண்டிருப்பான். சுவர்கம் முதலிய லோகங்களின் போகேச்சையுடையவன் எப்படி சிரத்தையோடு ஜபயஞ்ஞாதிகளைச் செய்வானோ அப்படி விரும்புவோன் வேதத்தின் பொருளாகியும் ஆத்துமாவின் தன்னிடத்தில் விசுவாசமுடையவனாவான். மேலும் அவஸ்தாதிரியங்களில் ஆத்துமாவொன்றே அரியத்தக்கதாகும். இப்படி விவேக தியானத்தால் அவஸ்தா திரியங்களை வேறுபடுத்தி அறிந்த ஆத்துமாவுக்கு மறுபிறப்பில்லை.

நானென்னும் தியானத்திற்கும், நானென்னும் சப்தத்திற்கு மாதாரமாய் அந்தக் காரணோபாதிகமாகிய எந்த போதை யுண்டோ அந்தப்போதை "தத்துவமசி"

“என்னும் மஹா வாக்கியத்திலுள்ள துவம்" பதத்தால் சொல்லத் தகுந்ததாகும். மேலுமந்த பரமாத்மா, மாயோபாதிகனும் ஜகத்காரணனும் பரோக்ஷத்வதர்ம விசிஷ்டனுமாவான், இதுவே பரமாத்மாவுக்குத் தடஸ்தலக்ஷணமாகின்றது மேலும் அந்தப் பரமாத்மா சத்யஞானாநந்த ஸ்வரூபனாவான். அப்பேர்க்கொத்த பரமாத்மாவானது "தத்துவமசி” யென்னும் மஹாவாக்கியத்திலுள்ள “'தத்” பதத்தால் சொல்லப்படு வானென்று மறியவேணும்.

இதுவரையிலும் பலவித விஷயங்களைக்கூறி இராஜயோக லக்ஷணத்தையும் விவரித்தோம்.

1-வது யோகசாதனம் செய்வதால் சரீரத்தில் உபாதிகள் பீடிக்காது.

2-வது யோகத்தில் சிரத்தையுள்ள மனிதர்கள் கர்மானுஷ்டானங்களை சரிவரச் செய்வார்கள். புத்தி விஷயாதிகளில் செல்லாமல் மனம் ஸ்வாதீனத்தில் வசப்படும் ஆகையினால் தான் யோகம் விசேஷமென்பதாகக் கூறினோம். யோகாப்யாசாதி களில்லாமலே அநேக ஞானிகள் மோக்ஷ மடைந்ததாய் தெரியவந்த போதிலும் அது ஈஸ்வர ஸங்கல்பமும் விட்டகுறை தொட்ட குறையாலானதாகவும் இருக்கு மானதால், கடைசியாக ஒரே வார்த்தையில் சொல்லப் புகின் மனம் பகவானிடம் நன்றாகப்பற்றி யிருப்பதே பக்தியென்னப்படும். அதுவே ஞானயோகம். ஞானயோகத்தைதான் பண்டிதர்களும் பரமார்கரும் அப்பியஸித்து மோக்ஷ மடையலாம்.

ஓம்தத்ஸத்.

தத்துவதரிசனி முற்றிற்று.